# உதயன்



23

www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 27 கதிர் 349 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (09/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கைவிட்டு படைகளுக்கு அள்ளிக் கொடுத்த பட்ஜெட்

## சலுகைகள், நிவாரணங்கள் ஏதுமில்லை

கொழும்பு, நவம்பர் 9

இலங்கையின் 66ஆவதும் மஹிந்த அரசின் 8ஆவதுமான வரவு - செலவுத் திட்டம் [நிதி நிலை அறிக்கை] நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களைப் போன்றே இந்த நிதி நிலை அறிக்கையிலும், போரில் வெற்றி ஈட்டிய படையினருக்கு அதிக சலுகைகள் அறிவிக்கப்பட்டபோதும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித சலுகைகளோ, நிவாரணங்களோ வழங்கப்படவில்லை.

விண்ணுக்கு எகிறி வரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் இந்த நிதி நிலை அறிக்கை தரவில்லை. அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான சிறிய சம்பள அதிகரிப்புத் தவிர மக்களை மகிழ்விக்கக் கூடிய பார்க்க பக்கம் 4

# மாகாணசபை முறையில் மாற்றங்கள் அவசியம்

## வரவு - செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.9

எமது மக்களுக்கான அதிகாரப் பகிர்வை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதற்கு தற்போதுள்ள மாகாண சபை முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியம் என்று தெரிவிக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தனது உரையின் முடிவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிவினைக்கு எம்மைக் கொண்டு செல்லும் அரசியல் மறுசீரமைப்பாக, அதிகாரப் பகிர்வு இருக்க முடியாது. அதற்குப் பதிலாக அது, எம் அனைவரையும் ஒன்றிணைப்பதாக இருக்க வேண்டும். அது எமது மக்கள் மீது பெரும் செலவுகளை ஏற்படுத்துவதாகவோ, சிக்கலான ஆட்சிக் கட்டமைப்புக்களைக் கொண்டதாகவோ இருக்கக்கூடாது.

இலங்கையின் எல்லா பார்க்க பக்கம் 4

## அரச ஊழியர் சம்பளம் 1,500 ரூபா அதிகரிப்பு

*அரச ஊழியர்களின் சம்பளத்தை அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து 1,500 ரூபாவால் அதிகரிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளார்.*

*இது கடந்த காலங்களைக் காட்டிலும் அதிகூடிய அதிகரிப்பாகும் என்று ஜனாதிபதி கூறினார்.*

*அவர் மேலும் கூறியவை வருமாறு:-*

*அடுத்த வருடத்திலிருந்து மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 1,500 ரூபாவால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளில்* பார்க்க பக்கம் 4

# அடுத்த வருடம் வடக்கில் தேர்தல்

## மஹிந்த அதில் உறுதி

கொழும்பு, நவ.9

வடமாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

''அமைதியையும் அபிவிருத்தியையும் விருத்தி செய்யும் வகையில் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதற்காக அடுத்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்ற முடிவில் நாம் உறுதியாக நிற்கிறோம்'' என்றார் ஜனாதிபதி.

கிழக்கைப் போலவே வடக்கையும் மாற்றுவதற்கான அர்ப்பணத்தில் தமது அரசு இன்னும் அப்படியே இருப்பதாகவும் அதற்காக பல அபிவிருத்திப் பணிகளை வடக்கில் முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

''மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பியிருக்கிறார்கள். தமது சிறுவர்களைப் புலிகளிடம் இழந்துவிடுவோம் என்ற பயம் இல்லாமல் வாழ்கிறார்கள். மின்சார விநியோகம், கல்வி, தண்ணீர் வசதி, சுகாதார வசதிகள் என்பன சீராக மேம்பட்டு வருகின்றன. வங்கிகளும் நிதி அமைப்புக்களும் விரிவாக்கம் கண்டுள்ளன. தகுதியான குடும்பங்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது கல் பார்க்க பக்கம் 4

# தமிழர் நலத் திட்டங்கள் பட்ஜெட்டில் புறக்கணிப்பு

## சரவணபவன் எம்.பி. கடும் சீற்றம்

கொழும்பு, நவ.9

இலங்கை அரசு தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உலகத்துக்கு கூறிவந்தாலும் வரவு - செலவுத் திட்டத்தில் அப்படி எந்த நேரடித் திட்டங்களையும் உள்வாங்கியதாகத் தெரியவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பார்க்க பக்கம் 4

## ஓய்வூதியர்களுக்கு ரூ. 1,000 அதிகரிப்பு

கொழும்பு, நவ.9

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசு ஓய்வூதியர்களுக்கும் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் இப்போதைய வயது பார்க்க பக்கம் 4

# மக்கள் நலனில்லாத பட்ஜெட்

## ஐக்கிய தேசியக் கட்சி கடும் விமர்சனம்

கொழும்பு, நவ.9


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது ஒரு எழுத்து மூலமான ஆவணமே தவிர மக்கள் நலனைக் கொண்டதொரு வரவு - செலவுத்திட்டம் அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்தாண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே ஐக்கிய தேசி பார்க்க பக்கம் 4

வரவு – செலவுத் திட்டம் – 2013

## ஒரே பார்வையில் ...

இலங்கையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களின் தொகுப்பு -






**மொத்த செலவினம் 2620 பில்லியன்**
**மொத்த வருமானம் 1280 பில்லியன்**
**துண்டு விழும்தொகை 1240 பில்லியன்**




- ★ இராணுவ வீட்டுத்திட்டக் கடனுக்கு ரூ. 100 கோடி.
- ★ பொலிஸ் துறையின் மேம்பாட்டுக்கு ரூபா 95 கோடி.
- ★ நகர வீடமைப்புக்கு ரூபா 75 கோடி.
- ★ மதுபான இறக்குமதித் தீர்வை வரி 25 வீதம் உயர்வு.
- ★ பால்மா வகைகளின் வரி அதிகரிப்பு.
- ★ வாகன இறக்குமதி வரி 10 - 20 வீதம் அதிகரிப்பு.
- ★ அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா அதிகரிப்பு.
- ★ ஓய்வூதியர்களுக்கு 1000 ரூபா அதிகரிப்பு.
- ★ அரச மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் ஆராய விசேட குழு.
- ★ 1980 இல் பொதுவேலைநிறுத்தத்தில் பாதிக்கப்பட்டு நிரந்தர வருமானமில்லாத 65 வயதுக்கு மேற்பட்டோருக்கு 5000 ரூபா.
- ★ ஊடகவியலாளர், கலைஞர்களுக்கு கடன் திட்டத்துக்கு ரூபா 20 கோடி.
- ★ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1000 கோடி ரூபா ஒதுக்கீடு
- ★ வெளிநாட்டு முதலீடுகளுக்கு சட்டத் தளர்வு.
- ★ கல்வித்துறைக்கு தேசிய உற்பத்தியில் 4.1 வீதமே ஒதுக்கீடு.
- ★ குடிதண்ணீர் விநியோகத்துக்கு ரூபா 126 பில்லியன்.
- ★ கஷ்டப்பிரதேச மாணவருக்கு மேலதிக சீருடை, பாதணி.
- ★ கடன்பெற்ற விவசாயிகள் வட்டி செலுத்தத் தேவையில்லை
- ★ சுகாதார சேவைக்கு ரூபா 13 கோடி 50 இலட்சம்
- ★ சுற்றுலா நோக்குடன் வெளிநாட்டவருக்கு காணி விற்கத் தடை
- ★ விமான நிலைய வரி 10 வீதம் அதிகரிப்பு
- ★ சித்தமருத்துவ வளர்ச்சிக்கு ரூபா 30 கோடி
- ★ ஒரு லீற்றர் பால் 50 ரூபாவுக்கு கொள்வனவு
- ★ மாகாண ஆசிரியர்கள் பயிற்சிக்கு ரூபா 90 கோடி
- ★ 5 ஏக்கருக்கு உட்பட்ட தென்னந்தோட்டங்களில் வறட்சியால் அழிந்தவற்றுக்கு பதிலீடாக இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கல்.
- ★ நெல்லின் நியாயவிலை 35 ரூபாவில் இருந்து 37 ரூபாவாக உயர்வு
- ★ வடக்கில் சுத்தமான குடிநீருக்கு நிதி ஒதுக்கீடு
- ★ எல்லா நிறுவனங்களும் தனது இலாபத்தில் ஒரு சத வீதத்தை தேசிய காப்புறுதி நிதியத்துக்குச் செலுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஒழிப்புக் கோஷமிடும் விமல், சம்பிக்க கோமாளிகள்

## தமிழ்க் கட்சிகள் காட்டம்

கொழும்பு, நவ.9

13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனத் தனித்தனியே கோஷம் எழுப்பிய அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் கோஷங்கள் ஒன்றிணைந்து ஒலித்துள்ளமையால் அரசியல் களத்தில் தொடர்ந்து சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றன. இது விடயம் தொடர்பில் தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் தமிழ், சிங்கள அரசியல் தலைமைகள் வெளியிட்டு வருகின்ற நிலையில், 13ஆவது திருத்தத்தினூடாக கிடைக்கின்ற அரசியல் சிறப்புரிமைகளை அனுபவித்துக்கொண்டு இவர்கள் இருவரும் இவ்வாறு கோஷம் எழுப்புவது வேடிக்கையாக உள்ளதென்று சாடியதுடன் முதலில் அவர்கள் தமது கட்சிகளுக்குரிய மாகாணசபை உறுப்புரிமைகளை இராஜிநாமாச் செய்ய வேண்டும் என்றும் தமிழ்த் தலைவர்கள் சவால் விடுத்தனர்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் நடத்தக்கூடாது என்று அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ஒன்றிணைந்து குரல் எழுப்பினர்.

இவர்களின் இந்தக் கருத்துக்கு தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து தமிழ் அரசியல் தலைவர்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

**பிரபா கணேசன் எம்.பி.**

13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் நடத்தக்கூடாது எனக் கூறுவதற்கு அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு அருகதை இல்லை. அவர்களின் இந்தக் கருத்துகள் வேடிக்கையாக உள்ளன.

13 ஆவது திருத்தச்சட்டத்தினூடாகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபையில் இந்த அமைச்சர்மார் இருவர்களின் கட்சிக்கும் உறுப்புரிமை உள்ளது. முதலில் அந்த மாகாணசபை உறுப்புரிமைகளை இராஜிநாமாச் செய்யவேண்டும் என நான் சவால் விடுகிறேன். அதன் பின்னர் அவர்கள் மேற்படி கருத்து தெரிவிப்பது நியாயமானதாகும்.

13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. நேற்றும் (நேற்றுமுன்தினமும்) 13 ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கியத்துவம் பற்றி ஆளுந்தரப்பின் சிரேஷ்ட அமைச்சரான டலஸ் அழகப்பெருமவும், அதனை நீக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் தெரிவித்திருந்தனர் - என்றார் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான பிரபா கணேசன்.

**கலாநிதி குமரகுருபரன்**

13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறும் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகிய இருவரும் அரசியல் கோமாளிகளாவர்; அரசியல் கையாலாகாதவர்களாவர். 13 ஆவது திருத்தத்தினூடாக அனைத்து அரசியல் சிறப்புரிமைகளையும் இவர்கள் பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அடிப்படைக் கொள்கை இல்லாத இவர்களின் கருத்துகள் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை சமவுரிமைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கையாகும். தமிழினம் ஜனநாயக சுதந்திரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில் பிரிவினைவாதத்தைத் தோற்றுவித்து அரசியல் பிழைப்பு நடத்துகின்றனர்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்பதனூடாக வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகளையும் பறித்தெடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றனர். நாட்டின் இன செளஜன்யத்தைச் சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டும் இவர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன், இவ்விருவரும் தமது கட்சிகளுக்குரிய மாகாணசபை உறுப்புரிமைகளை இராஜிநாமாச் செய்யவேண்டும் - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார்.

# தெரிவுக்குழுவுக்கான அரச உறுப்பினர்கள்

கொழும்பு,நவ. 9

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்களை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசு நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, ராஜித சேனாரத்ன, விமல் விரவன்ச, டிலான் பெரேரா மற்றும் நியோமல் பெரேரா ஆகியோரையே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நியமித்துள்ளது.

இக் குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்களை ஐக்கிய தேசிய கட்சி ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இதுவரை பெயர்களை அறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# வரவு- செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு ஐ.தே.க. முடிவு

கொழும்பு,நவ. 9

2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க ஐக்கிய தேசியக்கட்சி முடிவெடுத்துள்ளது.


வரவு-செலவுத் திட்டம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற கட்டடத்தில் கூடிய ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற குழுவினர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு உரிய வேதனங்கள் வழங்கப்படவில்லை.

சாதாரண மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. விவசாயிகள், தொழில்துறையினருக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டத்துறையின் தமிழ் மக்களுக்கு எவ்வித பயன்களும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை என்ற காரணங்களை கொண்டே தாம் இந்த முடிவை எடுத்ததாக ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

(த)



நாடாளுமன்றத்தில் நேற்று வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வந்த ஜனாதிபதி மஹிந்த மாலையில் நடத்திய தேநீர் விருந்துபசாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடனும் உரையாடினார்.

# சுயவிருப்பம் இல்லாமலே இலங்கையர் நாடு கடத்தல்

## ஆஸி. குடிவரவு அமைச்சர் கூறுகிறார்

கான்பரா,நவ. 9

சுயவிருப்பமின்றிய நிலையில் மேலும் பல இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்பிவைக்கப்பட்டனர். ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்து மற்றுமொரு இலங்கையர்களைக் கொண்ட குழுவினர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானத்தின் மூலம் அவர்களின் சுயவிருப்பமின்றி கொழும்புக்கு நேற்று முன்தினம் திருப்பியனுப்பப்பட்டதாக ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

'கடந்த வாரம் அல்லது அதற்கு முன்னைய நாள்களில் 30 ஆண்களைக் கொண்ட குழுவினர் படகுகளில் ஆஸ்திரேலியா வந்தனர். இவர்களின் நிலைமை சம்பந்தமாகவும் ஆஸ்திரேலியாவிலிருந்து இவர்கள் வெளியேற்றப்படக்கூடிய சூழ்நிலை பற்றியும் இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவின் சர்வதேச கடப்பாடுகள் தொடர்பான எத்தகைய பிரச்சினைகளையும் அவர்கள் எழுப்பவில்லை.

செல்லுபடியான வீஸா இல்லாமல் ஆஸ்திரேலியாவில் தங்கியிருப்பதற்கு எத்தகைய சட்டபூர்வ உரிமையையும் கொண்டிருக்காததனால், அவர்கள் அங்கிருந்து துரிதமாக வெளியேற்றப்பட்டனர்.

கடத்தல்காரர்களுக்குப் பணம் செலுத்தி உயிராபத்தையும் இம்மக்கள் எதிர்நோக்குகின்றனர். இவர்கள்; பெருந்தொகை பணத்தை வீண்விரையமாக்குகின்றனர். ஆஸ்திரேலியா வந்து சேர்ந்ததும் இவர்களுக்கு வீஸாவோ, துரித பெறுபேறுகளோ, விசேட கவனிப்புக்களோ கிடைப்பதில்லை.

ஆள்கடத்தலை முறியடிப்பதற்கும் அபாயகரமான இப்படகுப் பயணங்களை அவுஸ்திரேலியாவுக்கு மக்கள் மேற்கொள்வதைத் தடுப்பதற்கும் அரசு திடசித்தம் கொண்டுள்ளது.

நெளருவுக்கும் வெகு விரைவில் மனுஸ் தீவுக்கும் ஒழுங்கான அடிப்படையில் தொடர்ந்தும் மக்களை நாம் இடமாற்றம் செய்யவிருக்கின்றோம்-என்றார்.(த)

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஞாயிறு திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

தீபாவளிப் பண்டிகையையொட்டி விடுமுறை தினமான 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறந்து சிகை அலங்கரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீபாவளி தினத்தன்று சிகை அலங்கரிப்பு நியைங்கள் மூடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-8)

# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு தமிழர்கள் மத்தியில் வாக்கெடுப்பு

லண்டன்,நவ. 9

இலங்கையில் அரசியல் தீர்வுகாண அங்குள்ள தமிழர்களின் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

லண்டனில் நாடாளுமன்ற கட்டடத்தில் பிரிட்டன் தமிழர் பேரவை சார்பில் உலக தமிழர் மாநாடு நடத்தப்பட்டது.

மாநாட்டுக்கு அழைப்பின் பேரில் தி.மு.க.சார்பில் அதன் பொருளாளர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, அமைப்பு செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க.வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்ற ஸ்டாலின் பேசும்போது,

டெசோ மாநாட்டு தீர்மானங்களை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரிடம் வழங்கி இருக்கிறோம். இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் என்று தெரிவித்தார்.

இலங்கையில் அரசியல் தீர்வுகாண அங்குள்ள தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (த)

# ஜனாதிபதி மஹிந்த ஒபாமாவுக்கு வாழ்த்து

கொழும்பு,நவ. 9

மீண்டும் அமெரிக்க ஜனாதிப்தியாக தெரிவாகியுள்ள பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகத் தெரிவாகியுள்ள பராக் ஒபாமாவுக்கு வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளதன் மூலம் அமெரிக்க மக்கள் ஒபாமா மீது வைத்துள்ள நம்பிக்கை பிரதிபலிப்பதாக வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகம், உலக அமைதி மற்றும் சர்வதேச உறவுகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஒபாமாவின் கொள்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணையை அமெரிக்க மக்கள் வழங்கியுள்ளனர்.

(த)

# மருமகன் தாக்கி மாமனும் மாமியும் ஆஸ்பத்திரியில்

மகளின் கணவனின் தாக்குதலுக்கு இலக்கான கணவனும் மனைவியும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் தெற்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த முருகன் பத்மநாதன் (வயது -53), இவரது மனைவியான பத்மநாதன் கண்ணகைப் பிள்ளை (வயது-52) ஆகியோரே காயமடைந்தவராவர். (ஒ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கைதடி அரச முதியோர் இல்லத்தில் தியான மண்டபம் ஒன்று 1.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர் ஒருவர் நடுகிறார். இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் மற்றும் இல்லப் பணியாளர்கள் அருகில் உள்ளனர். (த-17)

# தீபாவளியை முன்னிட்டு பஸ் சேவைகள் அதிகரிப்பு

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.9

தீபாவளியை முன்னிட்டு யாழ்.நகருக்கு அதிக எண்ணிக்கையான பயணிகள் வருவதன் காரணமாக, எதிர்வரும் நாள்களில் யாழ். நகரில் இருந்து பல இடங்களுக்குமான பஸ் சேவைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தீபாவளியை முன்னிட்டு யாழ்.நகருக்கு அதிக எண்ணிக்கையான பயணிகள் நாள்தோறும் வருகின்றனர். இதனால் பஸ்களில் அளவுக்கு அதிகமாகப் பயணிகள் ஏற்றப்படுகின்றனர்.

இதனால் நெரிசலுக்குள்ளாகிப் பயணிகள் கஷ்டமான

**தீபாவளிப் பண்டிகை நெருங்குவதால் யாழ்.நகருக்கு அதிக எண்ணிக்கையில் பயணிகள் வருவதனாலேயே இந்த நிலைமை ஏற்படுகிறது**

நிலையை எதிர்நோக்குகின்றனர்.

அதிகளவான பயணிகளை ஏற்றுகின்ற பஸ்கள் மீது பொலிஸார் தண்டப் பணம் விதிக்கின்றனர். இதனால் பஸ்கள் சில இடங்களில் பயணிகளை ஏற்றாமல் கூடச் செல்கின்றனர்.

தீபாவளிப் பண்டிகை நெருங்குவதால் யாழ்.நகருக்கு அதிக எண்ணிக்கையில் பயணிகள் வருவதனாலேயே இந்த நிலைமை ஏற்படுகிறது.எனவே இந்த நிலைமையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது:-

மக்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளோம். அதிகரித்த பஸ் சேவைகளை முக்கியமான மார்க்கங்களில் நடத்தவுள்ளோம். தீபாவளி வரை இந்தச்சேவை நடத்தப்படும்- என்றார் அரச அதிபர். (த-5)

# அராலி- வேலணை கடற்பாதை புனரமைப்பில் தாமதம் எதற்கு?

## கேள்வி எழுப்புகிறார் விநாயகமூர்த்தி எம்.பி.

யாழ்ப்பாணம், நவ.9

*பண்ணைப் பாலம் ஒன்றே தீவகத்தையும் யாழ். குடாவையும் இணைக்கும் பிரதான மார்க்கம். இந்தப்பாதைக்கு மாற்றீடான பாதையாக அராலி- வேலணை கடற்பாதையுள்ளது. இந்தப்பாதையின் புனரமைப்பு தாமதமாகக் காரணம் என்ன?*

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி. நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அராலி- வேலணை கடற்பாதை புனரமைக்கப்பட வேண்டும். இந்தப் பாதை புனரமைப்புக் குறித்து கடந்த நான்கு ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதில் காட்டப்படும் கால தாமதம், நிதி ஒதுக்கீடு என்பன தொடர்பில் இங்கு விளக்கமளிக்க முடியுமா? -என்றார்.

இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தத்திட்டத்தின் நிதி நிலை குறித்தும், எப்போது? யாரால் இதன் புனரமைப்பு ஆரம்பிக்கப்படும் என்பது தொடர்பாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி சுதாகரிடம் கேட்டார்.

வேலணை- அராலி கடற்பாதை கடந்த 5 வருட காலமாக ஆராயப்படுகின்றது.

ஜப்பான் 'ஜெய்க்கா' நிறுவனம் இதற்கான நிதியை முழுமையாக வழங்க முன்வந்துள்ளது. வேலணைப் பிரதேச செயலர் மதிப்பீட்டு அறிக்கை குறித்து நடவடிக்கை எடுத்துள்ளார்.


2013 இல் இதற்கான வேலைகளை ஆரம்பிக்க முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார் எந்திரி சுதாகர். இதில் கலந்துகொண்ட வேலணை பிரதேச சபை தலைவர் சி. சிவராசா தெரிவிக்கையில்,

பண்ணைப்பாலம் உருக்கினால் போடப்பட்டது. தற்போது அது கடல் நீர்பட்டு உக்கி வருகின்றது. எனவே மாற்றுப்பாதையான அராலி- வேலணை கடற்பாதை அவசியமானதொன்றாகும் -என்றார். (த-50)

# ஜி.ஜி.நினைவு நிகழ்வு

கொழும்புத்துறை, நவ.9

மூத்த தமிழ் அரசியல்வாதியான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 111 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் குருநகரில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குருநகரில் அமைந்துள்ள அமரரின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு நினைவு கூரப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் யாழ்.பட்டணக் கிளையின் தலைவருமான சொலமன் சூ.சிறில் மலர் மாலையை சிலைக்கு அணிவித்தார்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான பரஞ்சோதி கொர்னேலியஸ், மேரியம்மா மரியகொறற்றி மற்றும் கலாபூஷணம் அ.கிறிஸ்தோப்பர் ஆகியோரும் மலர் மாலைகளை அணிவித்தனர். கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-13- 135)

# பாதுகாப்பற்ற கிணறுகள் யாழ்ப்பாணத்தில் 1,393

யாழ்ப்பாணம், நவ.9

*யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 393 பாதுகாப்பற்ற கிணறுகள் காணப்படுவதாகப் புள்ளிவிவர திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களின் பின்னர் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான கணக்கெடுப்பு அறிக்கை புள்ளி விவர திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.*

*அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-*

*யாழ். மாவட்டத்தில் 53 ஆயிரத்து 970 கிணறுகள் வளவுகளுக்குள் பாதுகாப்பான கிணறுகளாகவும், வளவுக்கு வெளியே 43 ஆயிரத்து 604 பாதுகாப்பான கிணறுகளும் காணப்படுகின்றன. பாதுகாப்பற்ற கிணறுகளாக ஆயிரத்து393 கிணறுகள் காணப்படுகின்றது.*

*வீட்டிலுள்ள நீர்க்குழாய் மூலம் 2 ஆயிரத்து 61 பேரும், வீட்டுக்கு வெளியே உள்ள நீர்க்குழாய் மூலம் 3 ஆயிரத்து 32 பேரும், வளவுக்கு வெளியேயான நீர்க்குழாய் மூலம் 12 ஆயிரத்து 535 பேரும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றனர். கிராமிய நீர் வழங்கல் உத்தேச திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 780 பேரும், குழாய் கிணறு மூலமாக 14 ஆயிரத்து 596 பேரும், பவுசர் வாகனம் மூலமாக 3 ஆயிரத்து 19 பேரும்போத்தலில் அடைக்கப்பட்ட நீரை 52 பேரும், நீர் ஊற்றுக்களிலிருந்து ஆயிரத்து 461 பேரும் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றனர் என்றுள்ளது.* (த-5)

# எனக்கு எதுவுமே தெரியாது அமைச்சர் கேட்டதால் வந்தேன்

## சமுர்த்தி இணைப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 9

'திவிநெகும' தொடர்பில் மேலதிக விளக்கமளிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவரும், அமைச்சரும் கேட்டுக்கொண்டதாலேயே பங்குபற்றினேன். பத்திரிகையாளர் சந்திப்பு நடப்பது தொடர்பில் எனக்கு முன்னர் அறிவிக்கப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் - யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆர்.ரகுநாதன்.

அரச அதிகாரியாக இருக்கும் நீங்கள் ஈ.பி.டி.பி. தனது அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிப்பதற்கு அனுமதி வழங்கியது யார்? என அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு :-

ஒருங்கிணைப்புக் குழுக் [illegible] 'எமது அலுவலகத்துக்கு வந்து விளங்கப்படுத்துமாறு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார். இதற்கமைவாக நான் அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்றேன். அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்ற பின்னரே பத்திரிகையாளர் சந்திப்பு குறித்து எனக்குத் தெரிய வந்தது - என்றார் அவர்.

சமுர்த்தி இணைப்பாளர் அரசியல் கட்சியில் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொள்வதற்கு உங்களிடம் அனுமதி பெற்றாரா? என யாழ். அரச அதிகாரியிடம் கேட்டபோது,

''இல்லை, அவர்களின் நியமனங்கள் எங்களைப் போன்றது அல்ல. சமுர்த்தி ஆணையாளர்தான் என்னிடம் அனுமதி பெறவேண்டியவர். ஊடகங்களுக்குத் தகவல் வழங்கு[illegible] அமைச்[illegible]டம் அனுமதி பெறவேண்டும் - என்றார்.

# நோயாளி மயங்கி விழுந்து சாவு

கிளினிக்குக்கு வந்த நீரிழிவு நோயாளி கிளினிக் மண்டபத்தில் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சங்கத்தானை சாரதா வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் திலகவதி (வயது-60) என்பவரே மரணமானாவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (த-9)

# மாணவனின் சடலம் மட்டுவிலில் மீட்பு

தென்மராட்சி, நவ. 9

*தென்மராட்சியைச் சேர்ந்த 12 வயதான மாணவன் ஒருவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டான்.*

*இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் வடக்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இதன்போது மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் தரம் -7இல் கல்வி பயிலும் பார்த்தீபன் திலீப்ராஜ் (வயது-12) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.*

*இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை அவரது தாயாரிடம் கையளிக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.*

*குறித்த மாணவனின் தற்கொலைக்கான காரணம் குறித்து பல்வேறு விதமான மர்மங்கள் நிலவுகின்றன. எனினும் அவற்றினை உறுதிப்படுத்த முடியவில்லை.* (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம் 7.5 சதவீதம் வளர்ச்சிபெறும்

கொழும்பு,நவ 09

நாட்டின் பொருளாதாரம் 7.5 சதவீதம் வளர்ச்சியடையும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன் 12.30 மணியளவில், இலங்கையின் பொருளாதாரம் 2013 இல் 7.5 சதவீத வளர்ச்சி அடையும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறை மற்றும் நாணயக் கொள்கைகள் பொருத்தமானதாக மாற்றி அமைக்கப்படுவதோடு யூரோ வலயத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை குறைவடைவதனாலும் உலக பொருளாதார மீட்சியும் 2013 இல் நடைபெறும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (த)



*2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம சகிதம் நாடாளுமன்றுக்கு நேற்று வருகை தருகிறார்.*

# நாடாளுமன்றில் நேற்று பலத்த பாதுகாப்பு

கொழும்பு, நவ.9

நாடாளுமன்றின் உள்ளும் புறமும் நேற்று பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்திற்கு வெளியே விசேட அதிரடிப் படையினரும், நாடாளுமன்றத்தின் உள்ளே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும், ஆங்காங்கே மோப்ப நாய்களுடன் காணப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் அனைவரும் பலத்த பரிசோதனைகளின் பின்னரே பத்திரிகையாளர் கலரிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

வழமையான பார்வையாளர் கலரி நேற்று அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கும், பிரமுகர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

வழமையான உறுப்பினர்களின் வாகனத் தரிப்பிடம் பாதுகாப்புக் காரணம் கருதி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

**'பிறவுண்' பெட்டியைக் காணவில்லை**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் 'பிறவுண்' நிறப் பெட்டி கலாசாரம் உடைக்கப்பட்டது.

வழமையாக நிதி அமைச்சர்கள் பட்ஜெட் இரகசியங்கள் அடங்கிய சீல் வைக்கப்பட்ட 'பிறவுண்' பெட்டியுடன் வந்து சபையில் வைத்தே அந்தப் பெட்டியை உடைத்து பட்ஜெட் உரையை வெளியில் எடுத்து வாசிப்பர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அந்த 'பிறவுண்' பெட்டிக்கு விடை கொடுத்துவிட்டு சர்வசாதாரணமாக பட்ஜெட் உரை அடங்கிய பைலுடன் வந்தே வாசிப்பார்.

**மஹிந்தவின் எட்டாவது பட்ஜெட்**

நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தில் எட்டாவது பட்ஜெட்டை சபையில் சமர்ப்பித்தார். இவ்வேளையில், சபாநாயகர் கலரியில் வெளிநாட்டுத் தூதுவர்களும், உயர்ஸ்தானிகர்களும் அமர்ந்திருந்து அவதானித்துக் கொண்டிருந்தனர்.

வழமைபோல் 12.45 மணிக்கு மணி ஒலிக்கப்பட்ட பின்னர் சபாநாயகர் தலைமை ஆசனத்தில் வந்தமர்ந்தார். ஆரம்ப நடவடிக்கையாக ஆளுங்கட்சி பிரதம கொரடா தினேஷ் ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பை சபையில் சமர்ப்பித்தார். சரியாக நேரம் 12.50 நிதி அமைச்சரான ஜனாதிபதி வரவு - செலவுத்திட்ட உரையுடன் சபைக்குள் பிரவேசித்தார். அப்போது சபையின் இருபக்க உறுப்பினர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேசைகளைத் தட்டி தமது வரவேற்பையும் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தனது வரவு - செலவுத்திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி தனது உரையை ஆரம்பிக்கும்போது - தனது எட்டாவது வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது மூன்று அதிமுக்கிய விடயங்களை வெளிப்படுத்துவதில் பெருமைப்படுவதாகக் கூறினார்.

* இலங்கைக்கு எதிராகப் பாரதூரமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் 58 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒன்றுகூடி பொதுநலவாய நாடுகளின் சம்மேளனத்தை நடத்த முடிந்தது. 58 நாடுகளையும் சேர்ந்தவர்கள் 30 வருட யுத்தத்தின் பின்னர் நாம் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆமோதித்துள்ளனர்.

* நாட்டில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழும் மூன்று மாகாணங்களில் மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் வெற்றிகண்டுள்ளோம். மக்கள் ஆதரவு எமக்கு என்பதை உறுதிப்படுத்தி உள்ளோம்.

* உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சட்டவரைபை அங்கீகரித்துள்ளோம். நேரடி வாக்குத் தெரிவின்மூலம் 60 சதவீதமும், விகிதாசாரப்படி 40 சதவீதமும் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர். இதனால் மக்கள் தாம் தெரிவுசெய்த உறுப்பினர்களின் சேவைகளை நேரடியாகப் பெறமுடியும். இந்த நிலைமையை உருவாக்கிய மகிழ்ச்சியில் இந்த வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கின்றேன் - என ஜனாதிபதி குறிப்பிட்டார்

## பாதிக்கப்பட்ட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வேறு எந்த அம்சங்களும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

நேற்று நண்பகல் 12.59 மணிக்கு மஹிந்த தனது நிதி நிலை அறிக்கை உரையை வாசிக்கஆரம்பித்தார். 3.35 மணிக்கு அதனை நிறைவு செய்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலை வாய்ப்பின்மை, எண்ணெய் விலை ஏற்றம் மற்றும் இயற்கை அழிவுகளாகல் சர்வதேச பொருளாதாரத்துடன் சேர்ந்து இலங்கை பின்னடைவுகளைச் சந்தித்த போதும் நாட்டை மீளக் கட்டியெழுப்பி அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்லப் போவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நிவாரணங்கள் மற்றும் சலுகைகள் அறிவிக்கப்படாததன் காரணத்தால் இது தேர்தலை இலக்கு வைத்தது அல்ல என்று பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொருள்களின் விலைக் குறைப்பு, போக்குவரத்துச் செலவுக் குறைப்பு ஏன்பவற்றை எதிர்பார்த்திருந்த பொதுமக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஆனால், ''இது வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட நிதி நிலை அறிக்கை'' என்று நிதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்றுமதிக்கான வரிக் குறைப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட போதும் அவை கிடைக்கவில்லை என்று பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-01)

## அரச ஊழியர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனவரி மாதத்திலிருந்து மாதமொன்றுக்கு 750 ரூபாவாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக வழங்கப்படும்.

மீதித் தொகையானது அனைத்து அரச ஊழியர்களுக்கும் மேலதிக கொடுப்பனவொன்றாக ஆகக் குறைந்தது ரூபா 750 மற்றும் ஆகக் கூடியது ரூபா 2,500 என்ற வகையில் அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதமாக மேலும் வழங்கப்படும்.

அபிவிருத்திச் செலவின் திட்டங்களின் அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் அத்தகைய அதிகரிப்புகளால் ஏற்படும் பணவீக்க அழுத்தத்தைக் கவனத்திற் கொண்டு முன்மொழியப்பட்ட 5 சதவீத அதிகரிப்பில் 50 சதவீதத்தை 2013 மே மாதத்திலிருந்தும் மீதியை செப்ரெம்பரிலிருந்தும் வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

அனைத்து பதவிநிலை அலுவலர்களும் 50 சதவீதத்தை 2013 ஜூலையிலிருந்தும் மீதியை 2013 ஒக்டோபரிலிருந்தும் பெறுவர். மேலும் நீதிபதிகள், பல்கலைக்கழக கல்விசார் பதவியினர், மருத்துவ தொழில்புரிநர்கள் மற்றும் விசேட பங்களிப்புகளை வழங்கும் விசேட வகுதியினர்களுக்கான சேவை தொடர்பான புதிய கொடுப்பனவுகளை வரவு - செலவுத்திட்ட வரையறைகளுக்குள் தாங்கிக்கொள்ள முடியுமான வகையிலும் நடுத்தரக் காலத்தின் போது அவற்றை நிலையாகப் பேணும் ஆற்றலுடன் 2013 ஜனவரியிலிருந்து செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன் - என்றார்.

## மாகாணசபை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மூலைகளில் இருந்தும் என்னைச் சந்தித்தவர்கள் - அவர்கள் தமிழர்களாகவோ சிங்களவர்களாகவோ முஸ்லிம்களாகவோ இருந்தபோதும் - சிறப்பான கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்புக்கள், வளமான வாழ்க்கை மற்றும் சமத்துவம் என்பன நாடு முழுவதற்கும் வேண்டும் என்றே கேட்டார்கள். தேசிய தர் நிலைகளைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கு இடையிலான வேற்றுமைகளை இல்லாமல் ஆக்குவதே தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கான பிரதான ஆயுதம்.

எமது மக்களின் இந்த வேணவாவை நிறைவு செய்வதற்கு இந்த அரசு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படும் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

எனவே, எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்முடன் காத்திரமாக இணைந்திருக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் ஜே.வி.பி. தலைவர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

அதுவே, எமது உள்ளகப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதற்கு பரப்புரை செய்வதைவிட சுயமரியாதையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியாக இருக்கும். இந்த இலக்கை அடைவதற்கான அனுபவத்தை வாழ்க்கையிலும் சரி அரசியலிலும் சரி எதிர்க் கட்சித் தலைவரும் கூட்டமைப்புத் தலைவரும் நானும் கொண்டிருக்கிறோம்.

வறுமை ஒழிப்பு மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களைக் கைதூக்கி விடுவதை நோக்கமாகக் கொண்ட 'திவிநெகும' சட்ட வரைபை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் பயணம் மிகக் கடினமாகி இருக்கிறது. இது எதைக் காட்டுகின்றது என்றால், இந்த நாட்டை ஆபத்திலிருந்து மீட்டெடுக்கும் இலக்கை நாம் இன்னும் சென்றடையவில்லை என்பதைத்தான்.

அரசியல், பொருளாதார மற்றும் இயற்கைச் சுனாமிகள்இருக்கின்றன. அவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாத நிலை தொடர்கிறது. ஆனாலும் வறுமை ஒழிப்பு மற்றும் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் இலக்கு விட்டுக் கொடுக்கப்பட முடியாதது. 2015இல் வறுமை இல்லாத இலங்கையை உருவாக்குவோம் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-01)

## தமிழர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பினர் சரவணபவன் தெரிவித்தார்.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் குறித்துக் கருத்து வெளியிட்ட அவர், விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களை இரத்துச் செய்யும் அரசு, வடக்கில் விவசாயமே செய்ய முடியாமல் நிலைகுலைந்து போயிருக்கும் விவசாயிகள் குறித்து கவனம் செலுத்துமா என்றும் கேள்வியெழுப்பினார்.

போருக்குத் துணைபுரிந்த படையினரின் வீடமைப்புக்காக ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ள அரசு, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைக்கவோ அல்லது பாதிக்கப்பட்ட வீடுகளை கட்டிக் கொடுக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் குற்றஞ்சாட்டினார்.

ஒட்டுமொத்தத்தில் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மக்கள் புறக்கணிக்கப்பட்டடுள்ளனரென்றும், பட்ஜெட் விவாதங்களின்போது இவற்றை சுட்டிக் காட்ட விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அருத்த...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விச் சுற்றுலாக்களை அனுபவிக்கிறார்கள், தெற்குக்கு வருவதன் மூலம். அவர்கள் அலரிமாளிகைக்கும் வந்து என்னுடனும் பேசினார்கள். அவர்களின் முகங்களில் நான் புதிய எதிர்பார்ப்பைக் காண்கிறேன்'' என்றார் மஹிந்த.

தற்போதைய புதிய சூழலில் பொருளாதார மலர்ச்சியை கண்டடையும் கடும் ஆர்வம் வடக்கு மக்களிடம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். 70,000 குடும்பங்கள் பயன்பெறத்தக்க கிளிநொச்சி - யாழ்ப்பாணம் இடையிலான 'இரணைமடு நீர்த் திட்டம்' மக்களின் வரவேற்பைப் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ''அத்துடன் மொரஹக கந்த நீர்ப்பாசனத் திட்டத்துடன் இரணைமடுக் குளத்தை இணைக்கும் திட்டத்திலும் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளார்கள்'' என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார். (உ-01)

## மக்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பொருளாதார சுமையால் தவிக்கின்ற மக்கள் அடுத்தாண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தினூடாக தாம் நிம்மதியாக வாழ முடியும் என எண்ணியிருந்தனர். ஆனால் இந்த வரவு - செலவுத்திட்டமானது நாட்டின் அபிவிருத்திக்கும், மக்களின் நலனுக்கும் ஏற்றதல்ல. அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பால் துன்பத்தில் இருக்கின்ற மக்களுக்கு இந்த வரவு - செலவுத்திட்டத்தினூடாக எந்த நன்மையும் இல்லை.

இந்த வரவு - செலவுத்திட்டத்தினூடாக மக்கள் 99 வீதநன்மையை எதிர்பார்த்தனர். ஆனால் அதில் ஒரு சதவீதம்கூட நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. மக்கள் எதிர்பார்த்த 99 வீத நன்மையை அரசு இல்லாது செய்துள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டமானது நாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள எழுத்துமூலமான ஆவணமே தவிர, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதொரு வரவு - செலவுத் திட்டம் அல்ல - என்றார்.

## ஓய்வூதியர்களு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குறைந்தது 70க்கு மேல். ஒப்பீட்டளவில் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களைவிட இவர்களின் ஓய்வூதியம் மிகக் குறைவானது. இவர்கள் மாதாந்தம் 10,000 ரூபாவுக்கும் குறைவாகவே பெறுகிறார்கள். அதனால் அவர்களுக்குச் சிறிய நிவாரணம் வழங்கும் வகையில் விசேட கொடுப்பனவாக மாதாந்தம் 750 ரூபா வழங்கப்படும். அதுவே 200, 2006ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்றவர்களுக்கு 500 ரூபாவாக வழங்கப்படும்.

இந்த அதிகரிப்பில் அரைவாசி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலும் மீதி ஜூலை மாதம் முதலும் வழங்கப்படும். அதே சமயத்தில் ஓய்வூதியர்கள் அனைவருக்கும் வாழ்க்கைப் படியாக மேலும் 500 ரூபா எதிர் வரும் ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்படும். (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகரை மனமார வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியில் 38 ஆண்டு காலம் பணியாற்றி நிறைவாய் அச்சுவேலிக் கிளையில் 4 ஆண்டுகள் முகாமையாளராய் அரும்பணியாற்றி 19.10.2012 இல் ஓய்வு பெற்ற எமது முகாமையாளர்

**இராசையா யோகராசா** அவர்களை

இனிவரும் காலங்களிலும் மனையோடு இன்பமாய் வாழ்ந்திட பிரியாவிடை நல்கி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அச்சுவேலி மக்கள் வங்கிக் குடும்பம்.**

## நூலக தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நூலக தினமும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசாவும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி சோ.தேவராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் ''புத்தகப் பண்பாட்டுப் பயணம்'' எனும் நிகழ்வும் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வும்

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979, சுவாதி 3ஆம் பாதம் 10ஆம் இடத்தில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்கும், மொத்த கிரகபாவம் 40 3/4 உடைய B.Sc. மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: 0779865411
(25171)(3.14)

## advt@uthayan.com
## 0215671111

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் செல்வி லீ.யூட்சி அவர்களின் அன்புத் தாயார் ***லீனஸ் மேரிதிரேசா இராசமலர்***

**அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
நலன்புரி சங்கம், ஊர்காவற்றுறை பிரதேசசபை.
(சி/4720)(3.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும்
திருமதி வலன்ரீனா ரெஜினோல்ட்
அவர்களது பாசமிகு மாமி

*திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை*

**அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.**

யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலய ஆசிரியர் நலன்புரி சங்கம்.
(சி/4727)(3.14)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்கு C9 இக்ராட் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ இல | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | சங்கானை கொல்களம் புனரமைத்தல் வேலை | 7,860.00 | 1,000.00 |
| 02 | சங்கானையில் திண்மக்கழிவு சேகரிக்கும் பகுதிக்கான உள்வீதி அமைத்தல் வேலை | 2,510.00 | 500.00 |
| 03 | சங்கானை மீன் சந்தை திருத்தல் வேலை | 1,400.00 | 500.00 |
| 04 | சங்கானை மரக்கறிச்சந்தையின் உள் வீதியும், கூரையும் புனரமைத்தல் வேலை | 2,750.00 | 500.00 |
| 05 | வட்டுக்கோட்டை நீர் விநியோகத் திட்டத்துக்கான சுற்றுமதில் அமைத்தல் வேலை | 3,960.00 | 500.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :- 09.11.2012 தொடக்கம் 22.11.2012 ந.ப 12.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 23.11.2012 ந.ப 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் :- 23.11.2012 பி.ப 01.30 மணி

1. தலைவர் , வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேல்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப்பத்திர பணத்துடன் மீளளிக்கப்படத 12% பெறுமதிசேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தக்காரர் வலுவுள் இக்கராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க வேண்டும்.
6. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை ''தலைவர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை '' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். மறுபிரதியை '' பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம் '' என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்க கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*தலைமைஅலுவலகம்,
வலிகாமம் மேற்கு
பிரதேசசபை, சுழிபுரம்.
09.11.2012*

*திருமதி நாகறஞ்சினி ஐங்கரன்
தலைவர்
வலிமேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.*

## துயர் பகிர்கின்றோம்

**சிதம்பரம் இராசலிங்கம்**

*(சமாதான நீதிவான் மாவை கலட்டி, தெல்லிப்பழை)*

அவரது மரணச் செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.
இவர் தந்தை செல்வா காலம் தொட்டு இற்றைவரை தமிழர்களின் வாழ்விற்காகவும், ஒற்றுமைக்காகவும் அயராது பாடுபட்டவர்.இவருடைய இழப்பால் துயருறும் மனைவி, பிள்ளைகள் ஏனைய உறவினருக்கும் எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறுமுகம் தியாகராஜா
ஆயுள்வேத வைத்தியர் (பிரான்ஸ்)
தொ.பே. 066 9268 67
(25163)(45.6.7)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப்பணிப் பாளராகவும், பிரதிக் கல்விச் செயலாளராகவும் துணிவும், நேர்மையும், கனிவும், மேலோங்கவும் எமது சமூகத்துக்கு கல்விப் பணியாற்றிய

**இளையதம்பி சிவானந்தன்**

அவர்களது மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(25120)(45.6.7)

திருமதி த.அ.துரைசிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்).




நல்லூரில்:
இல.526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.

யாழ்ப்பாணத்தில்:
இல.770, 772, கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421

வடமராட்சியில்:
இல. 171, பிரதான வீதி,
[illegible]
([illegible] அருகில்)
021 2262992.

சங்கானையில்:
219, பிரதான வீதி,
சங்கானை.
(HNB வங்கிக்கு முன்பாக)
021 2250909.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த
கட்டணத்தில் பெற்றுக் கொள்ள...............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3,6,7) தொ.பே - 0212219686

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

adv t@uthayan.com
0215671111

## வாடகைக்கு

திருநெல்வேலியில் இரண்டு அறைகள் கொண்ட வீடு (Annex) வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் அல்லது பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது.
வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 5417 681
(25161)(6-7-45)

## தவறிவிட்டது

சண்முகராஜா செந்திகுமார் என்பவரது தே.அ.அ.இல.722800427V பெருமாள் கோயிலடி பின் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசிக்கும் எனது MBSL காப்புறுதி நிறுவனத்தினால் தரப்பட்ட காப்புறுதிப் பத்திரம் இல.JF-00120 என்னும் ஆவணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். T.P.0771726563 (25156)(2-6.7)



## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

### விஜயரட்ணம் சிவசுப்பிரமணியம்

10.10.2012 அன்று சீசெல்ஸ் நாட்டில் சிவபதம் அடைந்த விஜயரட்ணம் சிவசுப்பிரமணியம் அவர்கள் யாழ்/வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவேசப் பிள்ளையாரின் மீளா அடியவரும், ஆலய பொதுச் சபையின் ஆயுட்கால உறுப்பினரும், பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும், மகோற்சவ உபயகாரரும் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல விசுவேசப்பிள்ளையார் அருள்புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் ஆலய
பரிபாலன சபை.

(25148) (10,6,7)

## கண்ணீர் அஞ்சலி



*"இன்றே நீ என்னோடு
வான் வீட்டில் இருப்பாய்"*

திருமதி அமிர்தநாயகம் அலெக்சாந்திரா
(மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)
இவரது பிரிவுத்துயரில் கலங்கி நிற்கும்
பங்குத் தந்தையுடனும்
குடும்பத் தினருடனும் செபத்தில்
இணைந்து நின்று இறைவனைப்
பிரார்த்திக்கும்
புனித மரியன்னை ஆலய
பங்கு மக்கள்
புலோப்பளை மேற்கு,பளை.

(25155)(45.6.7)

## குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவைகள்

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு அனுப்ப வேண்டிய உடைகள், உணவுகள், அலங்காரப்பொருள்கள், ஆவணங்கள், கடிதங்கள், CD ஆகியவற்றை எம்மூலம் துரிதமாக அனுப்பி வைக்க முடியும்.

கட்டணங்கள் பின்வருமாறு ( துரிதசேவை)

| | |
|---|---|
| London | 3kg 3600/= |
| Australia | 5kg 5500/= |
| Germany | 5kg 5500/= |
| Canada | 3kg 5700/= |



சாதாரணசேவை
10 kg மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்
10 நாள்களில் அனுப்பி வைக்கப்படும்
குறிப்பு :
லண்டன் - 600, கனடா- 700 சாதாரண பொதிகள் வாரம் தோறும் ஒவ்வொரு புதன்கிழமையும் எமக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள வியாபார ஸ்தபானங்களில் பொதிகளை ஒப்படைக்கலாம்.
கொழும்பு ( Head Office, Rainbow Travels 113, Chatham Street Colombo - 01, 011 2321074
நெல்லியடி - மருதம் கொமினிக்கேசன் 021 2263210,
அச்சுவேலி - லிபேட்டி கொமினிக்கேசன் 021 7451245
வல்வெட்டித்துறை - V2 Travels and Tours 021 2055044
கோண்டாவில் - பாரதி கொம் 021 2225148,
உரும்பிராய் - அருள்விநாயகர் கொமினிக்கேசன் 021 2230623, 077 5228428,
சுன்னாகம் - Tech Electronics 021 7429390
பண்டத்தரிப்பு - Paint city 021 7429390
மதவடி, சுன்னாகம் - பிரவீணா Supper market 0750480238/0777416508.
(சி/4714)(10,6,7)

மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் எமது ஸ்தாபனத்துடன் இணைந்து இந்தச் சேவையை செய்கின்றன. உங்கள் பொதிகளை அவர்களிடமும் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**RainBow Travels**
இல. 30/2, 3 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 2219596

## சாவகச்சேரி பிரதேசசபை

**01.01.2013 முதல் 31.12.2013 வரை சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான**

# கேள்வி அறிவித்தல் 2013

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 09.11.2012 – 22.11.2012வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 23.11.2012 மதியம் 12 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 23.11.2012 பி.ப 2.00 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (Vat,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat,NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை (தேங்காய்ச் சந்தை உட்பட) | 7500,000.00 | 15000.00 | 1000.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1500,000.00 | 10000.00 | 1000.00 |
| 3 | கொடிகாமம் மத்திய சந்தையிலுள்ள வண்டி வாகன தரிப்பு நிலையம்.(கிழக்கு மேற்கு இரு வாயில்கள்) | 505000.00 | 5000.00 | 500.00 |
| 4 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 615000.00 | 5000.00 | 500.00 |
| 5 | கொடிகாமம் சந்தை கோழிஇறைச்சிக்கடை | 404000.00 | 3000.00 | 500.00 |
| 6 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல 01 | 16000.00 | 1000.00 | 500.00 |
| 7 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல 02 | 16000.00 | 1000.00 | 500.00 |
| 8 | வரணிப் பொதுச்சந்தை | 45000.00 | 1000.00 | 500.00 |
| 9 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6000.00 | 500.00 | 250.00 |
| 10 | கைதடிப் பொதுச்சந்தை | 28000.00 | 1000.00 | 500.00 |
| 11 | கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 40000.00 | 1000.00 | 500.00 |
| 12 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 175000.00 | 1000.00 | 500.00 |
| 13 | மிருசுவில் பொதுச்சந்தை | 15000.00 | 1000.00 | 500.00 |
| 14 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 50000.00 | 1000.00 | 500.00 |
| 15 | எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை | 20000.00 | 1000.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் Vat 12%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்
3. வண்டித் தரிப்பிட நிலையத்தில் துவிச்சக்கர வண்டி ரூபா 5.00 , மோட்டார் சைக்கிள் ரூபா 7.00 மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதத்தில் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
5. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டு வரப்படல் வேண்டும்.
6. சந்தையிலிருந்து 1Km சுற்றாடலில் மீன் மரக்கறி விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது.
7. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
8. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
10. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.சிற்றம்பலம் துரைராஜா**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**
(சி/2817)(6-7-2)



## மிகப் பெரிய காண்டா மணிகள்

4 அடி உயரம், 3 அடி விட்டம், 650 கிலோ எடைகொண்ட மிகப் பெரிய காண்டா மணிகள் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மாதிரி வடிவத்தில் இருந்து இலங்கையில் சுத்தமான வெண்கலத்தில் 6கிலோ மீற்றருக்கு மேல் ஓசை கேட்கக் கூடிய விதத்தில் செய்விக்கப்பட்டு உடன் விற்பனைக்குண்டு. தேவையான பிரமாணங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். 50 வருடகால உத்தரவாதம் வழங்கப்படும். மற்றும் ஆலய கருங்கல், ஐம்பொன் விக்கிரகங்கள், திருவாசி, கலசம், பூஜை உபகரணங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: C.A. சுரஞ்சன் **கே.வி.ஜீ றேட் சென்ரர்,**
1.C.9 [illegible] புறக்கோட்டை, கொழும்பு-11.

**தொ.இல. 011 2330922, 011 2432321, 077 1523370, 072 3246581.**

(C/4480) (10,7,6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வாய்ப்பான தேவை கருதியா வாழ்வின் எழுச்சிச் சட்டம்?

வடக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்தி, அந்தப் பகுதி மக்களையும் இந்த நாட்டின் ஜனநாயகச் செயற்பாடுகளில் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்வதை சாக்குப்போக்குக் கூறித் தட்டிக்கழித்துக் கொண்டு, மாகாணசபைகள் அனைத்தையுமே உள்ளடக்குவதான சட்ட முன்வரைவு ஒன்றை 'திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) என்ற பெயரில், நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றிக்கொள்ள அரசு எடுத்த முயற்சிக்கு, உயர் நீதிமன்றம் மீண்டும் ஒரு தடவை கடிவாளம் போட்டு நிறுத்தியுள்ளது.

அந்தச் சட்ட முன்வரைவு நாட்டிலுள்ள மாகாணசபைகள் அனைத்தினதும் அதிகாரங்களிலும் தலையிடுவதாக இருப்பதால், அவற்றின் அங்கீகாரத்தைப் பெற்றால் மட்டுமே நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற வகையில் உயர் நீதிமன்றம் முன்பு தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது.

அந்தத் தீர்ப்பினை முறியடிக்கும் விதத்தில், சட்ட முன்வரைவை அவசரமாகச் சட்டமாக்கிவிடும் நோக்கில் நாட்டிலுள்ள மாகாணசபைகள் எட்டின் சம்மதம் அந்தச் சபைகளில் முறையாக விவாதித்துப் பெற்றுக்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாணசபை மக்களால் தெரிவு செய்யப்படாத நிலையில், அந்த மாகாணத்துக்கு ஜனாதிபதி தமது பிரதிநிதியாக நியமித்துக் கொண்ட முன்னாள் உயர் இராணுவ அதிகாரியான ஆளுநரின் அங்கீகாரத்தை அந்தப் பிரதேச மாகாண சபையின் கருத்தாக முன்வைத்து--

நாடாளுமன்றத்தில் நாட்டின் 9 மாகாணங்களும் சட்ட முன்வரைவுக்கு ஒப்புதல் அளித்துவிட்டதாகக் காட்டி நிறைவேற்றிக்கொள்ள அரசு முயற்சி எடுத்தது.

அரசின் இந்த முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் பலர் ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

ஒரு மாகாணத்தின் ஆளுநர் ஒருவர் வெளியிடும் கருத்தினை அந்த மாகாணத்தின் மாகாண சபையின் கருத்தாகவும் ஏற்றுக்கொள்ளலாமா என்பதுவே இந்த ஆட்சேபனைகளின் பிரதான கருப்பொருளாக விவாதிக்கப்பட்டது.

அதன் பெறுபேறாக உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பின் விவரம் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரால் வெளியிடப்பட்டது.

வட மாகாண ஆளுநரின் கருத்து அந்த மாகாண சபையின் கருத்தாகமாட்டாது என்பதை ஏற்றுக் கொண்டுள்ள உயர் நீதிமன்றம், திவிநெகும சட்ட முன்வரைவு தொடர்பாக பின்வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளது:

திவிநெகும சட்ட முன்வரைவை அங்கீகரிப்பதற்கு மாகாண சபைகளில் ஒன்று செயற்படாததனாலும், அதன் சில விதிகள் அரசமைப்புக்கு முரணாக இருப்பதினாலும், அது நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும்.

சட்ட முன்வரைவின் 8(2) பிரிவு அரசமைப்பின் 8(2) விதியை மீறுவதாக இருப்பதனால், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அத்துடன் நாடாளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மை ஆதரவையும் பெற வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விதி, அதன் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு, வலய நிர்வாகத் தலைவர்களை நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குவதாக உள்ளது. இருந்தபோதிலும், அவ்வாறு வலய திணைக்களங்களுக்கான தலைவர்களை அமைச்சரவை நியமிப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று தேவைப்படமாட்டாது.

சட்ட முன்வரைவின் 5 (டி) பிரிவு, திவிநெகும அபிவிருத்தி நிதியம் மற்றும் திவிநெகும சுழல் நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பதற்கான வழிவகைகளைச் செய்துள்ள போதிலும் அதுவும் அரசமைப்புக்கு முரண்படுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்ட முன்வரைவின் 7 மற்றும் 42 ஆவது பிரிவுகளும் அரசமைப்பின் 52 ஆவது விதியை மீறுவதாகக் காணப்படுகின்றன-

11 ஆவது மற்றும் 18 ஆவது பிரிவுகள் அரசமைப்பின் 12 ஆவது விதியை மீறுவதாக உள்ளன என்றும்-

மேலும் சில விதிகள் அரசமைப்புடன் ஒத்துப்போகாமை குறித்தும் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்ட முன்வரைவின் இந்த விதிகள் திரட்டுநிதியை ஓரம்கட்டிவிட்டு, திவிநெகுமவுக்கு பணம் மாற்றப்படுவதற்கு அதிகாரம் அளிக்கின்றன. இருந்த போதிலும் பணமும் சொத்துக்களும், திரட்டு நிதியில் வைப்புச் செய்யப்பட்டு, நாடாளுமன்றம் அங்கீகரிக்குமானால் திவிநெகும நிதிக்கு பணம் செல்வதில் இந்த முரண்பாடு ஏற்படமாட்டாது.

இத்தகைய திவிநெகும சட்ட முன்வரைவு தொடர்பாக மிக முக்கிய தீர்மானங்களை உயர் நீதிமன்றம் வழங்கியிருப்பது அரசின் அதிவேக அவசரத்தை ஓரளவு குறைத்திருப்பதாகக் கொள்ளலாம்.

அடுத்த வருடம் செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறக் கூடும் என்று எதிர்வு கூறப்படுவதால், அதற்கு முன்னரே திவிநெகும சட்டமுன்வரைவை நிறைவேற்றிக் கொள்வது அரசின் அடுத்த முயற்சியாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.

அதற்கு முன்னர், 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்கி மாகாணசபை முறைமைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடவும் கூட அரசில் உள்ளவர்கள் அவசரப்படலாம். அவசரம் எல்லா வேளைகளிலும் அனுகூலமாக அமைவதில்லை.

நாட்டுநலன் கருதிய சட்டவாக்கத்திலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அவசரம் காட்டப்பட்டால், அதில் அரசுக்கு மட்டும் வாய்ப்பான ஒரு தேவையுண்டு என்பது அர்த்தம்.

# இலங்கைக்கு எதிராகவே ஐ.நா.சபை அதிக பரிந்துரைகளை முன்வைத்தது

## அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.9

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகவே அதிகமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வேறெந்த நாட்டிற்கெதிராகவும் ஐ.நாவால் அதிகப்படியான பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லை.

அவற்றுள் நாட்டின் ஜனநாயகத்துக்கும், சமாதானத்துக்கும், அபிவிருத்திக்கும், ஒற்றுமைக்கும் பங்களிப்புச் செய்யும் எந்தப் பரிந்துரைகளையும் ஏற்க நாம் தயாராக உள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுயாதீனத்தை நாம் சீர்குலைத்துவிட்டோம் என்று எம்மீது குற்றம் சுமத்தும் ஐக்கிய தேசியக் கட்சி, தமது ஆட்சிக்காலத்தில் இது விடயம் தொடர்பில் எவ்வாறு செயற்பட்டது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, எம்மைப் பற்றி விமர்சிப்பதைத் தவிர்த்து, பலமிழந்துபோகும் தமது கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியினர் பாதுகாக்கவேண்டும் என்றும் ஐதேகவிற்கு ஆலோசனைவழங்கினார்.

மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் கூறியவை வருமாறு -

பிரதம நீதியரசருக்கெதிரான அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பல கருத்துகளை வெளியிட்டு வருகின்றது. அத்துடன், நாம் நீதித்துறையின் சுயாதீனத்தைச் சீர்குலைத்துள்ளோம் என்று கூறுகின்றது. இந்தக் குற்றவியல் பிரேரணை புதியதொரு விடயமல்ல. முன்னாள் பிரதம நீதியரசர்களான நெவில் சமரக்கோன், சரத் நந்த சில்வா ஆகியோருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சிதான் தமது ஆட்சிக் காலத்தில் அரசியல் குற்றப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தது - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியதாவது:-

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக 210 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில பரிந்துரைகள் நமது நாட்டின் சுயாதீனம், அரசியல், பாதுகாப்பு ஆகியுவற்றுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அவற்றை நிராகரித்தோம். நாட்டின் ஜனநாயகத்துக்குப் பங்களிப்புச் செய்யும் எந்தப் பரிந்துரைகளையும் நாம் ஏற்கத் தயாராக உள்ளோம் - என்றார். (த-சி)

# தெரிவுக்குழுவில் பதினொரு பேர்

பிரதம நீதியரசர் மீது முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்தவென அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் மேலும் இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 9 பேர் உள்ளடங்குவர் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் அது 11ஆக உயர்த்தப்பட்டுள்ளதென பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஆளும் கட்சியில் இருந்து 7 பேரும் எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவிலிருந்து 2 பேரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஒருவரும் ஜே.வி.பியிலிருந்து ஒருவரும் பெயரிடப்படவுள்ளனர். (த-சி)

# 'திவிநெகும' சட்டவரைவுக்கு வாக்கெடுப்புத் தேவையில்லை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

'திவிநெகும' சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பிற்கமைய சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவை இல்லை எனத் தெரிவித்த அரசு, உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் இச்சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

அரசின் இந்தக் கருத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'திவிநெகும' சட்டவரைவு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு (செவ்வாய்க்கிழமை) சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் 'திவிநெகும' சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவை இல்லை. 'திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) சட்டவரைவு மீதான குழுநிலை விவாதத்தின்போது அரசமைப்புக்கு அமைவாக உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் இந்தச் சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த நடவடிக்கைகளானது ஜனநாயக முறைக்கமைய உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலின்கீழ் நடைபெறும் - என்றார். (த-சி)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.குருகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ பிரதம விருந்தினராகவும், கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகர் சி.நற்குணசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், க. நாகலிங்கம் , ம.குகதாசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் திருமதி தர்மியா சிவஸ்ரீ வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்க உள்ளார். (த-13)

# அல்வாய் சனசமூக நிலையத்துக்கு மாவை எம்.பி. நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,நவ.9

அல்வாய் மேற்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்துக்கு பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தின் மின்சாரப் பணிகள் மற்றும் தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகிகள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சனசமூக நிலையத்தின் தளபாட பற்றாக்குறை நீக்கப்படுவதுடன், இரவு நேரத்திலும் வாசகர்களுக்குச் சேவையாற்றக்கூடிய வகையில் மின்சார வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளது. (த-86)

# வறுமையான முதியவர்கள் மட்டுமே கைதடி இல்லத்தில் இணைக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,நவ.9

பொருளாதார நிலையில் பின்தள்ளப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முதியவர்களுக்கே கைதடி அரச இல்லத்தில் இடம் வழங்கப்படும் என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

முதியவர்களை இல்லத்தில் இணைப்பதற்கு பிரதேச செயலர், கிராம உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் போன்றவர்களின் பரிந்துரைக் கடிதம் மிக அவசியம்.

அத்துடன் கைதடி அரச முதியோர் இல்லம் அரசின் கட்டுப்பாட்டில் அதன் விதிமுறைகளுக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றது.

சமூகத்தில் எவரது பராமரிப்பும் இல்லாமல் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள முதியவர்களை மட்டுமே இங்கு இணைக்க முடியும்.

பொருளாதாரம் மற்றும் இதர வசதிகளுடன் உள்ள முதியவர்கள் தமது எதிர்காலம் குறித்துக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

அவர்களுக்காக தற்போது குடாநாட்டில் ஏழு தனியார் முதியோர் பராமரிப்பு நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. அங்கு அவர்கள் இணைந்து கொள்ள முடியும்-என்றார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல் செல்வாக்குமிக்க வர்த்தகரின்

# அட்டை வளர்க்கும் பண்ணை மக்களால் நொருக்கப்பட்டது

## மன்னார் தேவன்பிட்டிக் கடலில் சம்பவம்




மன்னார், நவ.9

மன்னார் தேவன்பிட்டிக் கிராமத்திலுள்ள கடற்கரையில் அமைச்சர் ஒருவரின் உறவினரான வர்த்தகர்ஒருவரால் அமைக்கப்பட்டிருந்த அட்டை வளர்ப்புப் பண்ணை அங்கு கூடிய நூற்றுக்கணக்கான மக்களால் உடைத்து நொருக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகலில் இடம்பெற்றது.

போர் காரணமாக இடம் பெயர்ந்து சென்ற தேவன்பிட்டி கிராம மக்கள் தற்போது மீள்குடியமர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கடற்றொழிலையே மேற்கொண்டு வருகின்றனர். கடற்கரையிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவினுள் அட்டை, நண்டு, மீன் ஆகியவற்றைப் பிடிக்கும் இவர்கள் இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலமாக தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். பெண்களும் இங்கு அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவது வழக்கமாகும்.

இந்த நிலையில் வன்னியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் மாமா முறையானவர் எனக்கூறப்படும் தென்பகுதி வர்த்தகரொருவர், சில அரச அதிகாரிகளின் உதவியுடன் எந்த அமைப்பினதும் அனுமதி பெறாது, கடற்கரையிலிருந்து சுமார் 250 மீற்றர் தொலைவிலுள்ள 10 ஏக்கர் கடற்பகுதியைப் பிடித்து அட்டை வளர்ப்புப் பண்ணையாக மாற்றும் பொருட்டு பாதுகாப்பு வேலிகளையும் அமைத்துள்ளார்.

இதனால் தமது தொழில் பாதிக்கப்படுமென்பதால் இங்குள்ள 200 குடும்பங்கள் இந்தப் பண்ணை அமைப்பதைத் தடுக்குமாறு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்தனர். ஆனால் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஏற்கனவே இந்த மக்கள் இரண்டு தடவைகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய போதிலும் மாந்தை மேற்குப் பிரதேச செயலரின் உறுதி மொழியையடுத்து தமது எதிர்ப்பைக் கைவிட்டனர்.

ஆனால் பண்ணையை அமைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. இதனால் பொறுமையிழந்த மக்கள் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் தேவன்பிட்டிக் கடற்கரையில் நூற்றுக் கணக்கில் ஒன்று கூடியதுடன் கடலுக்குள் செல்லவும் முற்பட்டனர். இதனை அங்கு நின்ற கடற்படையினர் தடுக்க முற்பட்டனர்.

ஆனால் கடற்படையினரின் எதிர்ப்பையும் மீறி நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் கடலுக்குள் சென்று பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அட்டை வளர்ப்புப் பண்ணையை உடைத்து அகற்றினர்.

இதன் போது ஆத்திரமடைந்த கடற்படையினர் சிலர்கடலுக்குள்சென்றுஅங்கு நின்ற பெண்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதனையடுத்து மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரான அருட்தந்தை எஸ்.செபமாலை, தேவன்பிட்டி பங்குத்தந்தை ஏ.றொக்சன்குரூஸ், அடம்பன் பங்குதந்தைத் லக்கோன்ஸ், அருட்சகோதரர் லோரன்ஸ் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர்.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் மன்னார் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

மேலும் அரச அதிபர் தற்போது மன்னாரில் இல்லாமையால் அவர் திரும்பி வந்ததும் எதிர்வரும் திங்கட்கிழமை முக்கியமான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்படுமென மக்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அதுவரை அட்டை வளர்ப்புப் பணியாளர்கள் எவரும் கடலில் இறங்குவதற்கு கடற்படையும், இராணுவமும் அனுமதிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த வாக்குறுதியை அடுத்து, தொடர்ந்து இரவு 7 மணியளவில் மக்கள் அந்த இடத்தை விட்டுச் சென்றனரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## பாம்பினால் கடியுண்டவருக்கு ஏற்பட்ட அவஸ்தை

துணுக்காய், நவ.9

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள கிராமமொன்றில் பாம்பினால் கடியுண்ட நபரொருவர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

நட்டாங் கண்டல் மூன்று முறிப்புக் கிராமத்தைச் சேர்ந்த 52 வயதான ஞானசேகரம் குணசிங்கம் என்ற 5 பிள்ளைகளின் தந்தை கடந்த 2 ஆம் திகதி இரவு 7 மணியளவில் தமது வீட்டு வளவுக்குள் அமைந்துள்ள மாட்டுப் பட்டிக்குச் சென்ற போது பாம்பினால் கடியுண்டார்.

ஆனால் வாகன வசதிகள் எதுவும் இல்லாததால் இவரை உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல முடியவில்லை.

பின்னர் இராணுவத்தினரின் உதவியுடன் இந்த குடும்பஸ்தர் நட்டாங் கண்டல் மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். ஆனால் அவ்வேளையில் மருத்துவர் அங்கு இல்லை. அதை அடுத்து அம்புலன்ஸ் மூலமாக மல்லாவி மருத்துவ மனைக்கும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனைக்கும் கொண்டு செல்லப்பட்டார்.

இவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதில் மேலும் தாமதம் ஏற்பட்டிருக்குமாயின் இவரது உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்குமென அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-415)

## உடையார்கட்டு பிரதேச மக்களுக்கு அடுத்த ஜனவரியில் வீட்டுத் திட்டம்

### செயலகத்துக்குச் சென்றோரிடம் உறுதிமொழி

முல்லைத்தீவு, நவ.9

உடையார்கட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் நிரந்தர வீடுகளை அமைத்து வழங்கும் திட்டம் ஆரம்பமாகவுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் உறுதி மொழி வழங்கியுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

தமக்கு நிரந்தர வீடுகளை வழங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரிக்கை விடும் பொருட்டு அரச செயலகத்துக்குச் சென்ற மக்களுக்கு இந்த உறுதி மொழி வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் உடையார்கட்டு வடக்கைச் சேர்ந்த 800 குடும்ப அங்கத்தவர்களும், உடையார் கட்டு தெற்கைச் சேர்ந்த 990 குடும்ப அங்கத்தவர்களும் அரச அதிபரிடம் தமது நிரந்தர வீட்டுக்கான கோரிக்கையை வலியுறுத்தும் பொருட்டு எட்டுவாகனங்களில்முல்லைத் தீவு அரச செயலகத்துக்குச் சென்றிருந்தனர்.

இவர்கள் மத்தியில் உரையாற்றிய அரச அதிபர் தற்போது முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் உடையார்கட்டு மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்தியன் வீட்டுத் திட்டம் 2014 ஆம் ஆண்டுவரை தொடரும் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்

(க-400)

## தனிக் கிளையாக தரமுயர்வு

இலங்கை வங்கியின் வவுனியா நகர்புறக் கிளை தனிக் கிளையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் இது நடைமுறைக்கு வந்துள்ளது. இனிவரும் காலங்களில் அபிவிருத்திக் கடன்கள் உள்ளிட்ட சகல கடன்களையும் இந்தக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் வங்கியின் பிரதேச முகாமையாளர் எஸ்.பிரம்குமார், வவுனியா மேற்றரக்கிளை சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.நந்தகுமார் நகர்ப்புறக் கிளை முகாமையாளர் றோய் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-400)

# எமது மக்களின் கண்ணீரைத் துடைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

### ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அழைப்பு

மன்னார், நவ.9

மன்னார் மக்களின் துயரங்களைப் போக்குவதில் பிரஜைகள் குழுவுடன் மன்னார் ஊடகவியலாளர்களும் இணைந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரான அருட்தந்தை எஸ். செபமாலை.

மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்து முகமாக கடந்த திங்கட் கிழமை மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

> தற்போது முள்ளிக்குளம் மக்களின் மீள் குடியேற்ற பிரச்சினை,தேவன் பிட்டியில் இடம் பெற்று வரும் சட்ட விரோத அட்டை பிடிப்பு ஆகியவை தொடர்பில் நாங்கள் பல்வேறு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்; மன்னார் பிரஜைகள் குழு, குரல் அற்ற நிலையில் துன்பங்களுக்கு உள்ளாகி வரும் எமது மக்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்றது.

எமது பிரஜைகள் குழுவில் உள்ள உறுப்பினர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

தற்போது முள்ளிக்குளம் மக்களின் மீள் குடியேற்ற பிரச்சினை,தேவன் பிட்டியில் இடம் பெற்று வரும் சட்ட விரோத அட்டை பிடிப்பு ஆகியவை தொடர்பில் நாங்கள் பல்வேறு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

போர் முடிவடைந்து விட்டது. ஆனால் அப்பாவி மக்களை அவஸ்தைக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் தற்போதும் இடம் பெற்று வருகின்றன. நீதி எங்கள் பக்கம் இருந்தாலும் அநீதி மட்டுமே இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக சில அரசியல் வாதிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களால் எமது அப்பாவி மக்கள் தொடர்ந்தும் துன்பப்படுகின்றனர்.

ஊடகவியலாளர்களாகிய நீங்களும் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இதன் காரணமாகவே ஊடகவியலாளர்களாகிய உங்களின் உதவியை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

மன்னார் ஊடகவியலாளர்கள் உயிரை பணயம் வைத்து கடமையாற்றி வருகின்றனர். பல தடவை அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளமையையும் நாம் அறிகின்றோம்.

பொலிஸ் அதிகாரிகளும் சில குற்றவாளிகளுக்குத் துணை போகின்றனர். எனவே கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் எமது மக்களின் கண்ணீரை துடைக்க மன்னார் பிரஜைகள் குழுவுடன் மன்னார் ஊடகவியலாளர்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அருட்தந்தை எஸ்.செபமாலை மேலும் தெரிவித்தார்.

(க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் வடக்கு மாகாண கண்காட்சி 14 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு

## யாழ்.மாநகரசபை மைதானத்தில் இடம்பெறும் 7 பெரும் துறைகளின் அடைவுகள் காட்சிக்கு

**கண் காட்சியானது கடந்த காலங்களைப் போல் அன்றி இவ்வருடம் மிகவும் வினைத்திறனான முறையில் ஏழு பெரும் துறைகளான உணவு, சுகாதாரம், வீடமைப்பு உட்கட்டுமானம்- போக்குவரத்து, கல்வி, மனித வளம், பொதுச்சேவை, சமூக நலன், கைத்தொழில் ஆகிய துறைகளை முன்னிறுத்தி நடத்தப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம்,நவ.9

வடக்கு மாகாண கண்காட்சி 2012 இல் 11 ஆயிரத்து 400 சதுர அடி நிலப்பரப்பில் 7 பெரும் துறைகளை முன்னிறுத்தி வெகு சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை யாழ். மாநகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் 2009- 2011 வருட காலத்தில் வடக்கு மாகாணத்தில் பெறப்பட்ட அடைவுகள் காட்சிப்படுத் தப்படும்.

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள கண்காட்சியில் சுமார் 2 லட்சம் மக்கள் பங்கு கொள்ளக் கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களை வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி நேற்று உதயனுக்கு வழங்கினார்.

வடக்கு மாகாண கண்காட்சி 2012 தொடர்பாக பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண கண்காட்சியானது கடந்த காலங்களைப் போல் அன்றி இவ்வருடம் மிகவும் வினைத்திறனான முறையில் ஏழு பெரும் துறைகளான உணவு, சுகாதாரம், வீடமைப்பு உட்கட்டுமானம், போக்குவரத்து, கல்வி, மனித வளம், பொதுச்சேவை, சமூக நலன், கைத்தொழில் ஆகிய துறைகளை முன்னிறுத்தி நடத்தப்படவுள்ளது. அத்துடன் ஏழு பிரதான துறைகளும் பல்வேறு வகைகளாக வகையீடு செய்யப்பட்டு அவை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநரின் மாநாட்டை முன்னிறுத்தி இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேசமயம் ''ஒன்றிணைந்த முன்னேற்றம் நோக்கி'' எனும் தலைப்பிலும் மூன்று நாள்கள் தொழில்நுட்ப அமர்வுகள் இடம்பெறும்.

இவை யாவும் உள்ளூராட்சி துறைகளை மையப்படுத்தியதான அபிவிருத்தி தேடலாக இருக்கும். இதில்-

★இலங்கையின் உள்ளூராட்சியில் நல்லாட்சித் தத்துவங்கள்.

★உள்ளூராட்சி கட்டமைப்பில் அதிகாரங்களும் கடமைகளும்.

★உள்ளூராட்சி சபைகளின் சிறந்த செயலாற்றுகைகள்.

★உள்ளூராட்சியில் ஒருங்கிணைந்த குடிமக்கள் பட்டயம் உள்ளிட்ட 14 துறைகளின் அமர்வுகள் பிரத்தியேகமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

வடமாகாணமான முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாண மாவட்ட மற்றும் தென்பகுதி மக்களும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்காக வடமாகாண அரச திணைக்களங்கள் யாவும் முழு உத்வேகத்துடன் தமது சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தி பிரதேச அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகளும் 34 சிறந்த தலைப்புக்களில் தமது செயலாற்றுகையை வெளிப்படுத்தவுள்ளன என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி கூறினார். (ஒ)



சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி இறுதிநாள் நிகழ்வில் நல்லொழுக்கம்மிக்க மாணவிக்கு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை விருது வழங்குகிறார். (த-9)

## மழையில் நனைந்த நடைபாதை வியாபாரம்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ். நகரில் நேற்று நண்பகல் திடீரெனப் பெய்த மழையினால் நடைபாதை வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

தீபாவளி பண்டிகைக்கென யாழ். முற்ற வெளிப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான வியாபாரிகள் தமது நடைபாதைக் கடைகளை அமைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று நண்பகல் திடீரெனப் பெய்த மழையினால் இந்தக் கடைகள் முற்றாக நனைந்தன.

சிலர் கொட்டகைகள் அமைத்து அங்கே உடுபுடைவைகளை விற்பனை செய்தமையால் அவர்களுடைய பொருள்கள் மழையில் நனையாமல் தப்பிக் கொண்டன.

சில கொட்டகைக்குள் மழை வெள்ளம் புகுந்தமையால் வியாபாரிகள் பெரிதும் சிரமப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இப்பகுதியில் வீதி புனரமைப்புக்கென வீதி ஓரங்கள் வெட்டப்பட்டுள்ளமையால் நடைபாதை வியாபாரிகள் தமது பொருள்களை வைக்க முடியாமலும், பயணிகள் வாகனங்களில் பயணிக்க முடியாமலும் திண்டாடினார்கள். (த-17)

## 41 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள்

தென்மராட்சி, நவ.9

தென்மராட்சி பிரதேசத்தில் வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 41 பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டமாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின், சாவகச்சேரி நகர சபையின் எதிர்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் ஆகியோர் பயனாளிகளுக்கு தலா 15 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கினர்.

இந்தப் பயனாளிகளுக்கு ஏற்கனவே கோழிக்கூடும், கோழிக்குஞ்சுகளும் தீவனப் பாத்திரங்கள் தீவனங்கள் போன்றவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வல்வெட்டித்துறை கடற்கரையில் கடலரிப்பைத் தடுப்பதற்கு அணை

## அமைக்கும் பணிகள் ஆரம்பம்

வடமராட்சி,நவ.9

வல்வெட்டித்துறை, கொத்தியால் கடற்கரையோரமாக கடலரிப்பைத் தடுக்கும் வகையில் அணைக்கட்டும் அதனோடு இணைந்த தார் வீதியும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மக்கள் பங்களிப்புடன் நடைபெற்று வரும் இந்த வேலைத் திட்டத்திற்கான நிதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 'நெல்சிப்' திட்டத்தில் உலக வங்கியினூடாக வழங்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் 'நெல்சிப்' திட்ட அதிகாரிகள் கொத்தியால், காட்டுவளவு,



குச்சம் ஆகிய பகுதி மக்களுடன் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் முன்னிலையில் கலந்துரையாடி திட்டத்தின் நிலைமைகளை வெளிப்படுத்தி அதற்கு மக்களின் பங்களிப்பு அவசியம் என எடுத்துக் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து கடலரிப்புப் பாதுகாப்பு அணைக்கட்டு, தார் வீதி அமைக்கும் பணியில் பொது மக்களும் ஈடுபட்டதுடன் சிரமதான அடிப்படையில் பாதையைத் தூய்மைப்படுத்தியதுடன் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேநீர் மற்றும் குளிர்பானங்களை வழங்கினர். (த-8)

## 27 ஆயிரத்து 332 கட்டாக்காலி நாய்கள்

### யாழ்ப்பாணத்தில் மட்டும்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மாவட்டத்தில் 27 ஆயிரத்து 332 கட்டாக்காலி நாய்கள் இனம் காணப்பட்டுள்ளன. வீதிகளிலும், பொது இடங்களிலும் பயணிப்போரில் தினமும் 15 முதல் 23பேர் வரை இந்தக் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்காகி வருகின்றமை வைத்தியசாலைப் பதிவுகள் மூலம் தெரிய வருகின்றது.

அத்துடன் அண்மைக் காலமாக விசர் நாய்க்கடிக்கு இலக்காகிச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் நாய்கள் அழிக்கப்படக் கூடாது என்பது சுற்று அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தக் கட்டாக்காலி நாய்களால் பெரும் அசௌகரியங்களையும் ஆபத்துக்களையும் விரைவில் எதிர் கொள்ள நேரிடும் என சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (த-50)

## கே.கே. எஸ். வீதி மீண்டும் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.9

யாழ். நகரில் கே.கே. எஸ். வீதி மீண்டும் மூடப்பட்டுள்ளது. வீதி அகலிப்பு பணிகளுக்காக யாழ். நகரில் சத்திரச் சந்தியிலிருந்து யாழ். தபாலகச் சுற்றுவட்டம் வரையான வீதி கடந்த இருநாள்களாக மூடப்பட்டுள்ளது. இந்த வீதியின் அகலிப்புப் பணிகள் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வருகின்றன.

தற்போது தீபாவளி வியாபாரக்காலத்தில் இந்த வீதி மக்கள் பயன்பாடின்றி மூடப்பட்டிருப்பது குறித்து இப்பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-17)

# வயல்களில் களைகளின் பெருக்கம்



யாழ்ப்பாணம்,நவ.9

நெல்வயல்களில் களைகளின் பெருக்கம் தற்போது திடீரென அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அண்மையில் கொட்டித் தீர்த்த மழையை அடுத்து வயல்களில் தேங்கியிருந்த வெள்ளம் தற்போது வற்றியுள்ளது.

அதைத் தொடர்ந்து களைகள் நெற்பயிர்களை மூடிப் பெருகியுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

அநேகமான வயல்களில் விவசாயிகள் இந்தக் களைகளை அகற்றியும் கிருமி நாசினிகளை விசிறியும் அழித்து வருகின்றனர்.

அத்துடன் மழையை அடுத்து நெற்பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

தாழ்ந்த வயல் நிலங்களில் வெள்ளம் ஓரளவு காணப்படுகின்றது. மேட்டு நில வயல்களில் தண்ணீரின் மட்டம் வெகுவாக வற்றியுள்ளது. (த-17)

## பிறப்பு, இறப்பு பதிவுக்கான நடமாடும் சேவை கோப்பாயில்

யாழ்ப்பாணம்,நவ.9

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவுக்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை மூலம் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலம் கடந்த பிறப்பு, இறப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்குப் பொதுமக்கள் தமது கிராம சேவகர் மூலம் தேடுதலுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த நடமாடும் சேவை மூலம் காலம் கடந்த பிறப்பு, இறப்பு சான்றிதழ்களைப் பெறவுள்ள 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை 50 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு காலம் கடந்த பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் காலம் கடந்த பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்போர் தத்தமது கிராம சேவகர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வழக்கில் விஜயகாந்தின் மனு நிராகரிப்பு

சென்னை, நவ.9

தேர்தல் வழக்கில் விஜயகாந்த் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக் கப்பட்டுள்ளது.

ரிஷிவந்தியம் தொகுதியில் விஜயகாந்த்தின் வெற்றியை எதிர்த்து ஜெயந்தி என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். தேர்தல் அதி காரியும் விஜயகாந்தும் தம்மைப் போட்டியிடாமல் தடுத்ததாக ஜெயந்தி முறைப்பாட்டு மனு கொடுத்திருந்தார். மேற்படி மனுவிலிருந்து தம்மை நீக்கக்கோரி விஜயகாந்த் வழக்கு தொடர்ந்திருந்தார். விஜயகாந்தின் கோரிக்கையை நிராகரித்து உயர் நீதிமன்ற நீதிபதி வெங்கட்ராமன், தேர்தல் வழக்கில் குற்றச்சாட்டு பதிவு சென்னை உயர்நீதிமன்றத் தில் இன்று நடைபெறும் என்று தெரிவித் துள்ளார். (வ)




சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் சிலை முன்பாக விளக்கேற்றி வழிபட்டார் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி. அருகில் மாநில ஆளுநர் சேகர் தத் மற்றும் முதல்வர் ராமன் சிங்.

## வங்கக் கடலில் புதிய காற்றழுத்தம் தமிழகத்தில் கன மழை பெய்யும்

சென்னை, நவ.9

வங்கக் கடலில் மீண்டும் உருவாகியுள்ள புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் தமிழகத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.



வங்கக் கடலில் கடந்த மாதம் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அரபிக்கடலுக்கு நகர்ந்து புயலாக மாறி சோமாலியா கடற்கரையைக் கடந்தது. அப்போதும் தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்தது.

இதனையடுத்து வங்கக் கடலில் அந்தமான்தீவு அருகே மற்றொரு காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இது நீலம் புயலாக மாறி கடந்த 31 ஆம் திகதி மகாபலிபுரம் வழியாகக் கரையைக் கடந்து ஆந்திரா சென்றது. அப்போது தமிழ கத்தில் கடும் காற்று வீசியது. இதில் ஏராளமான மரங்கள் சாய்ந்தன. ஆனால், பெரிய ளவில் மழை பெய்யவில்லை.

இந்தநிலையில் தென் மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கு அருகில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை நேற்று முன்தினம் உருவாகி உள்ளது. இது தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருவதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. இதனால் அடுத்த 24 மணி நேரத்தில் தென் மாவட்டங்களில் பல இடங்களில் கன மழை பெய்யும்.

காவிரி டெல்டா மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்த இரு தினங்களில் மேலும் வலுவடைந்தால் தீபாவளி சமயத்தில் புயலாக மாறவும், மிக கனத்த மழைபெய்யவும்வாய்ப்புண்டு.

# ஒபாமா வெற்றி பெற்றதால் நல்லுறவு மேலும் வலுப்பெறும்


### இந்தியா நம்பிக்கை

டில்லி, நவ. 9

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் தெரிவு செய்யப் பட்டதால் இந் தியா-அமெரிக்க நல்லுறவு மேலும் வலுப்பெறும் என்று இந்திய வெளியுறவு துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் டில்லி யில் நேற்று பேட்டியளித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கடந்த 10 ஆண்டுகளில் இரு நாடு களும் பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக இணைந்து செயற்பட்டு வந்திருக்கின்றன. அதை முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறோம். ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளமை நல்ல செய்தியாகும்.

இந்தியா-அமெரிக்கா நல்லுறவு மேலும் வலுப்பெறும். பாதுகாப்பு உள்ளிட்ட சம்பவங்களில் இரு நாடுகளுமே பரஸ்பரம் கவலை கொண்டுள்ளன.

இதில் இரு நாடுகளும் இணைந்து செயற்படும். அண்டை நாடான சீனாவுடன் அர்த்தமுள்ள, பயனுள்ள பேச்சு வார்த்தைகளை நடத்தவும், நல்லுறவை வைத்துக் கொள்ளவும் இந்தியா விரும்புகிறது.

ஹக்கானி தீவிரவாதக் குழுவுக்கு எதிராக ஐ.நா. எடுத்துள்ள நடவடிக்கை வரவேற்கத்தக்கது-என்றார்.(வ)

## ஓரிசா கடற்கரையில் ஜனாதிபதி ஒபாமா

### மணல் சிற்பக் கலைஞர் உருவாக்கம்




அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் உரு வத்தை ஓரிசா கடற்கரை மணலில் சர்வதேச மணல் சிற்பக் கலைஞர் உருவாக் கியுள்ளார்.

ஓரிசா மாநிலத்தைச் சேர்ந்த சர்வதேச மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், உலகம் முழு வதும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அவ்வப்போது மணல் சிற்பமாக வடித்து வருகிறார்.

இதன் அடிப்படையில், ஒபாமாவின் வெற்றி குறித்து புரி கடற்கரை பகுதியில் ஒபாமாவை மணல் சிற்பமாக வடித்துள்ளார். ஒபாமாவின் பின்னணியில் வெள்ளை மாளிகையின் உருவத்தையும் வடித்துள்ளார். இதனை ஏராளமானோர் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

## காதல் கலாட்டாவால் 100 வீடுகளுக்குத் தீ வைப்பு

தர்மபுரி, நவ.9

காதல் பிரச்சினையால் தர்மபுரியில் ஏற்பட்ட கலவரத்தில், 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தர்மபுரி நாயக்கின் கொட்டாய் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் இளவரசனும், அயல் கிராமமான கோணங்கி நாயக்கின் ஹள்ளியைச் சேர்ந்த கல்லூரி மாணவி திவ்யாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இதனால் திவ்யாவின் தந்தை நாகராஜ் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுகிறது. தகவல் அறிந்த உறவினர்கள் மற்றும் அவரது சமூகத்தைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு, நத்தம் கிராமத்தில் உள்ள மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளை தீ வைத்துக் கொளுத்தினர். இதில் நூற்றுக்கும் மேற் பட்ட வீடுகள் சாம்பலாகின. மேலும் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் தீ வைக்கப் பட்டன.

திருப்பத்தூர் செல்லும் சாலையில் மரங்களை வெட்டிப் போட்டு, தீயிட்டு கொளுத்தி வன்முறையில் ஈடுபட்டதையடுத்து, அந்தப்பகுதியில் அதிகளவு பொலிஸார் குவிக்கப்ப ட்டுள்ளனர்.

## ஊழலுக்கு எதிராக தேசிய ரீதியில் பிரசார போராட்டம்

### ஹசாரே அறிவிப்பு

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை எதிர்த் தும், ஹசாரே ஆதரவாளர்கள் போராடவுள்ளனர்.



சென்னை, நவ.9

ஊழலுக்கு எதிராக நாடு முழுவதும் பிரசார போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக காந்தியவாதி அன்னா ஹஸாரே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதன் மூலம் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுப்பது மட்டுமல்லாது, ஜோன் லோக்பால் பிரேரணையை எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு முன்பு நடைமுறைப் படுத்துமாறு கோருவதுமாகும்.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை எதிர்த்தும், எனது ஆதரவாளர்கள் போராடவுள்ளனர். மத்திய அரசு, நாட்டின் நிலம், காடுகள், குடிதண்ணீர் இவைகளை விற்று வருவது நாட்டுக்கு எவ்வளவு பெரிய கேடு என்பதை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். அதற்கு சரியான விழிப்புணர்வு மக்களுக்குத் தேவைப்படுகிறது.

இந்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த நாடு முழுவதும் உள்ள தொண்டர்கள் வீதிக்கு வந்து போராட உள்ளனர். அதே நேரத்தில் ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரங்களும் ஆரம்பிக்கப்படும்-என்றார்.

## பெயிண்ற் நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து

பெங்களூர், நவ.9

பெங்களூரில் உள்ள பெரிய பெயிண்ற் நிறு வனம் ஒன்றில் நேற்றுக் காலை பயங்கர தீ விபத்து எற்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள ஒசூர் பிரதான வீதியில் ஒரு பெரிய பெயிண்ற் நிறுவனம் உள் ளது. அந்த நிறுவனத்தில் நேற்றுக் காலை திடீர் என்று தீ விபத்து ஏற்பட்டது.

விபத்து ஏற்பட்டபோது தெய்வாதீனமாக நிறுவனத்துக்குள் ஊழியர்கள் எவரும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து குறித்து உடனே தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் கிடைத்தவுடன் 24 வாகனங்களில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் அனைவரும் தீயை அணைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமிலா ஆகியோர் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். அடிலெய் நகரில் கோலா குட்டிகளை அவர்கள் கைகளில் ஏந்திப் பார்வையிடுகின்றனர்.

## 700 வருட காலக் குழந்தையின் உடலை திரும்பப் பெற்றது பெரு நாடு

700 வருடம் பழைமையான குழந்தையின் பதப்படுத்தப்பட்ட உடலை மீண்டும் திரும்ப பெற்றது பெரு நாடு.

சுமார் 700 வருடங்களுக்கு முன்பு தென் அமெரிக்காவில் 'இன்கா கலாசார மக்கள்' வாழ்ந்து இருக்கின்றனர்.

அதற்கு முந்திய காலத்தில் பெரு நாட்டுக்குச் சொந்தமான ஒரு குழந்தை மம்மியை, புராதனப் பொருள்கள் கடத்தல் கும்பல் ஒன்று கடந்த இரு வருடங்களுக்கு முன்பு பிரான்ஸுக்கு கடத்த இருந்தது. அதைப் பொலிவியா அரசு அப்போது கைப்பற்றி இருந்தது.



பெரு நாட்டின் கலாசாரத்தைப் பறைசாற்றும் இந்தக் குழந்தை மம்மியை மீட்கும் முயற்சியை அந்த நாடு தொடர்ந்து மேற்கொண்டது.

அதனைத் தொடர்ந்து பொலிவியா நாட்டின் கலாசார அமைச்சர் இதனை பெரு நாட்டிடம் முறைப்படி ஒப்படைத்தார். 2 வயதான இந்தக் குழந்தை மம்மி ஆணா அல்லது பெண்ணா என்று ஆராய்ச்சியாளர்களால் அறிய முடியவில்லை.

எங்கள் வம்சம் மற்றும் பரம்பரையின் பெருமையை உலகுக்குக் காட்டும் ஒரு சிறிய மாதிரியே இந்த குழந்தை மம்மி என்று பெரு கலாசார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு இன்கா கலாசாரத்தின் மையமாக விளங்கிய பெரு நாட்டின் செராமிக்ஸ், வெள்ளி, தங்கம் மற்றும் அரிய ஓவியங்கள் திருடப்பட்டு விட்டன என்றும் பெருநாடு தெரிவித்தது.

**மனிதவெடிகுண்டு தாக்குதல்;**

### பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரிகள் 4 பேர் சாவு

இஸ்லாமபாத்,நவ.9

பாகிஸ்தானின் பெஷ்வார் நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட குறைந்தபட்சம் 4 பேர் உயிரிழந்தனர்.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த குறித்த தற்கொலைதாரி, சனநெருக்கமான பகுதியில் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சென்ற வாகனத்தை இலக்கு வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அந்தநாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

### கனடாவின் வான்கூவர் தீவில் நிலநடுக்கம்

கனடாவின் வான்கூவர் தீவின் வடக்கு கடற்கரை பகுதியில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது.

6.3 ரிச்டர் அளவு கோலில் பதிவான இந்த நில நடுக்கம், 182 கிலோமீற்றர் தொலைவில் தென்மேற்கு போர் ஹான்டிப் பகுதியில் மையம் கொண்டிருந்தது.

### சீனஅதிபராக விரைவில் ஜின் ஜிபாங்

பீஜிங்.நவ.9

சீனாவின் புதிய ஜனாதிபதியாக அந்த நாட்டின் துணை ஜனாதிபதி ஜி ஜின்பாங் பொறுப்பேற்க உள்ளார் .

சீனாவின் தற்போதைய ஜனாதிபதி ஹூ ஜிண்டோவின் பதவிக்காலம் முடிவடைய உள்ளது.

இதனையடுத்து துணை ஜனாதிபதியான ஜி ஜின்பாங் (வயது 59), சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகப் பொறுப்பேற்பதுடன் ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்க இருக்கிறார்.

உலகம் முழுவதும் எதிரொலிக்கும் பொருளாதார மந்த நிலைக்கு சீனாவும் தப்பவில்லை. அதன் பொருளாதார வளர்ச்சியில் சரிவு காணப்படும் நிலையில் புதிய ஜனாதிபதியாகும் ஜி ஜின்பாங் எப்படி இவற்றை எதிர்கொள்வார் என்ற ஆர்வம் அனைத்து நாடுகளிலும் இருக்கிறது.

இவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பொப் பாடகியைத் திருமணம் செய்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக் கது.

# சவால்களை முறியடிக்கத் தயார்


## 'வெற்றி' உரையில் ஒபாமா சூளுரை

அமெரிக்கா எதிர் நோக்கும் சகல சவால்களும் முறியடிக்கப் பட்டுவிடும். நான் வெள்ளை மாளிகைக்கு மீளதிரும்பியதும் இது விடயத்தில் முனைப் போடு செயற்படு வேன் என்றார்.

வொஷிங்டன், நவ.9

கடந்த காலத்தில் போராட்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். கடந்த கால அனுபவங்கள், படிப்பினைகள், சம்பவங்கள் எமக்கு வழிகாட்டுகின்றன.

ஒவ்வொரு தனிமனிதனின் உரிமையும், கௌரவமும் மதிக்கப்பட வேண்டும்; பேணப்பட வேண்டும். இதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா தமது வெற்றி உரையில் தெரிவித்தார்.



சிக்காக்கோவில் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பராக் ஒபாமா கடந்த புதன்கிழமை தேர்தல் வெற்றி உரையை நிகழ்த்தினார். அவரது கருத்துகளுக்கு அவ்வப்போது ஆதரவாளர்கள் கரகோஷம் செய்து உற்சாகத்தில் திளைத்தனர். இதன்போது ஒபாமா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

''அமெரிக்கா சகல துறைகளிலும் வலுவான - வல்லமை பெற்ற நாடாகவே திகழும். வரலாற்று ரீதியிலான அதன் கௌரவமும், கீர்த்தியும் பேணிப் பாதுகாக்கப்படும். இதில் நாம் உறுதிப்பாடாகவுள்ளோம். அமெரிக்க இளைய சமுதாயத்தின் மேம்பாட்டை நாம் கருத்திற்கொண்டுள்ளோம்.

அமெரிக்க இளைய சமுதாயத்தின் மத்தியில் ஈடிணையற்ற வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், தொழிற்றுறை விற்பன்னர்கள் ஆகியோரை நாம் உருவாக்கி அமெரிக்காவின் பெருமையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வோம். அமெரிக்கா எதிர்நோக்கும் சகல சவால்களும் முறியடிக்கப்பட்டு விடும். நான் வெள்ளைமாளிகைக்கு மீள திரும்பி யதும் இந்த விடயத்தில் முனைப் போடு செயற்படுவேன்.

சிறந்த பலன்களை எட்டுவதற்கு இவை வழிகோலும். ஒருங்கிணைந்த எமது பொறுப்பைத் தட்டிக்கழித்து விட முடியாது. நான் உங்கள் வாக்கைப் பெற்றேனோ, இல்லையோ உங்கள் பிரச்சினைகளுக்குச் செவிமடுத்து வந்துள்ளேன். என்னை ஒரு சிறந்த ஜனாதிபதியாக நீங்கள் உருவாக்கியிருந்தீர்கள். என்னால் செவ்வனே செயலாற்ற முடியும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும்.

''எதிர்வரும் வாரங்களில் இரு தரப்பு அரசியல் வாதங்களையும், விவகாரங்களையும் நான் உன்னிப்பாக செவிமடுப்பேன். வெள்ளை மாளிகைக்கு மீளத் திரும்பியதும் அமெரிக்கா எதிர்நோக்கும் சவால்களை முறியடிக்க உறுதி பூண்டு செயற்படுவேன்.

''எதிர்வரும் வாரங்களில் ரோம்னியுடன் அமர்ந்து அமெரிக்கா எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய விருக்கிறேன்.

நாட்டின் சுபீட்சம் நமது ஒவ்வொருவரினதும் கையில் தங்கியுள்ளமையை உதாசீனப்படுத்தி விட முடியாது- என்றார்.

(வ)

## பங்களாதேஷ்-மியன்மார் எல்லையில் அகதிகளுடன் கவிழ்ந்தது படகு

### 87 பேரைக் காணவில்லை



டாக்கா,நவ.9

மலேசியா நோக்கிச் சென்று கொண்டிருந்த மியன்மார் அகதிகள் படகுகளில் ஒன்று நேற்றுக் காலை பங்களாதேஷ்- மியன்மார் எல்லையில் விபத்துக்குள்ளானது. இதன்போது படகில் பயணித்த 87 பொது மக்களைக் காணவில்லை என்று பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவுக்குச் சென்று சட்டவிரோதமாக வேலை செய்யும் நோக்கில் மியன்மார் ரோஹிங்கியா முஸ்லிம்கள் 110 பேர் குறித்த படகில் சென்றிருந்தனர். இதில் பயணம் செய்த சுமார் 23 அகதிகளை பங்களாதேஷ் மீட்புப் படையினர் மீட்டுள்ளனர் என்று பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பங்களாதேஷ் கப்பற்படையும் பி.ஜி.பி. அதிகாரிகளும் உள்ளூர் மீனவர்களுடன் இணைந்து காணாமற்போனவர்களை மீட்பதற்கான பணியை முடுக்கியுள்ளனர்.

இதேவேளை நடுக்கடலில் [illegible] கலாம் என்று அஞ்சப்படும், படகில் பயணித்த பயணிகளில் பலர், தலைநகர் டாக்காவில் இருந்து 292 மைல் தொலைவில் அமைந்துள்ள கோக்ஸ் பஷார் மாவட்டத்துக்கு நீந்திக் கரையேறியிருக்கின்றனர் என்றும் அவர்களை இன்னமும் அடையாளம் காணமுடியவில்லை என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

பங்களாதேஷின் தென்கிழக்கே அமைந்துள்ள இரு முகாம்களில் பதிவு செய்யப்பட்ட சுமார் 28 ஆயிரம் மியன்மார் அகதிகள் உள்ளனர். இவர்களை விட 3 இலட்சத்துக்கும் 5 இலட்சத்துக்கும் இடைப்பட்ட ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் அங்கு சட்ட விரோதமாக வசித்து வருகின்றனர்.

அண்மையில் மியன்மாரில் பௌத்தர்களுக்கும் குறித்த ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கும் இடையில் வெடித்த இனக் கலவரத்தில் பலநூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## தலைவர்களைக் குறிவைத்து சிரியாவில் புரட்சியாளர்கள் தாக்கு



சிரியாத் தலைவர்களைக் குறிவைத்து புரட்சி படையினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். எனினும் ஜனாதிபதி மாளிகை தாக்குதலுக்குள் சிக்கவில்லை.

சிரியாவில் அரச ஆதரவாளர்களுக்கும், புரட்சி படையினருக்கும் இடையேயான உள்நாட்டுப் போர் மிகத் தீவிரமடைந்து வருகின்றது.

சிரியாவின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர், தற்போது தலைவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி மாளிகையைக் குறிவைத்து புரட்சிப் படையினர் தாக்குதல் நடத்தினர்.

ஆனால் அவர்கள் வீசிய குண்டுகள் ஜனாதிபதி மாளிகையைத் தாக்கவில்லை. மாறாக ஜனாதிபதி அசாத்தின் குடும்ப உறுப்பினர்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் வெடித்துள்ளன.

குறித்த தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 7 பேர் படுகாயமடைந்தனர் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. இதேபோன்று கடந்த ஜூலை மாதம் நடந்த வெடி குண்டுத் தாக்குதலில், ஜனாதிபதி அசாத்தின் 4 முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுங்கியது பூமி; 48 பேர் சாவு

## கௌதமாலாவில் பயங்கரம்

மெக்சிகோ, நவ.9

கௌதமாலாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கி 48 பேர் உயிரிழந்தனர்.

பசுபிக் கடலின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கௌதமாலாவின் மேற்கு பகுதியில் நேற்றுமுன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிச்டர் அளவு கோலில் 7.4 ஆக பதிவாகியிருந்தது. கௌதமாலா அருகில் உள்ள மெக்சிகோ மற்றும் எல் சால்வடோவிலும் நிலநடுக்கம் ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

கௌதமாலாவில் நிலநடுக்கம் ஏற்பட்டதும் மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிகளுக்கு ஓடி வந்தனர்.




நிலநடுக்கத்தால் 135 வீடுகள் சேதமடைந்தன. பல்வேறு கட்டடங்கள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கி 48 பேர் உயிரிழந்தனர். 155 பேர் காயம் அடைந்துள்ளனர். இது தவிர 100 பேரைக் காணவில்லை என்று கௌதமாலா ஜனாதிபதி ஓட்டோ பெரெஸ் மொலினா தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து பொதுக் கட்டடங்களில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர். 73 ஆயிரம் வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கின.

இந்த நிலநடுக்கத்தால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. மெக்சிகோவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.3 ஆகப் பதிவாகியிருந்தது.

கௌதமாலாவில் 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஏற்பட்ட 7.5 அளவிலான நிலநடுக்கத்துக்குப் பின்னர் தற்போது தான் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. 1976 இல் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 23 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெ. துணை ஜனாதிபதியாக மீண்டும் தெரிவானார் ஜோ பிடன்



வொஷிங்டன், நவ.9

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க துணை ஜனாதிபதியாக ஜோ பிடன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறுகிறதோ, அதே கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளரே துணை ஜனாதிபதியாகத் தேர்வு செய்யபடுவார். இதனையடுத்து, ஒபாமா கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளரான ஜோ பிடன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### வெளியேறுவாரா ஹிலாரி?

இதனிடையே, அமெரிக்க அமைச்சரவையிலிருந்து ஹிலாரி கிளின்டன் வெளியேற முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி ஒபாமாவும் ஹிலாரியின் இராஜினாமா முடிவை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் ஓய்வெடுக்கும் நோக்கில் ஹிலாரி இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# எச்சரிக்கையுடன் ஒபாமாவை வாழ்த்துகிறது சீனா

பீஜிங், நவ.9

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றதை சீனா எச்சரிக்கையுடன் வாழ்த்தியுள்ளது .

இதுகுறித்து சீனா தெரிவித்ததாவது:-

எங்களுடனான உறவு மேம்பட வேண்டும் என்றால் கருத்து வேறுபாடுகள் குறைய வேண்டுமென்றால் அமெரிக்கா ஆக்கபூர்வமான கொள்கைகளை கையாள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலக உள்ள ஹூ ஜிண்டாவ், பிரதமர் வென் ஜியாபா ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் வெற்றி பெற்றதற்கு பரவலாக உலகெங்கிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்த நிலையில் இஸ்ரேல் மட்டும் ஏமாற்றத்துடன் உள்ளது.

**மீண்டும் ஜனாதிபதியான ஒபாமா பழிதீர்த்துக் கொள்வாரோ என்கிற அச்சம் இஸ்ரேலை சிந்திக்கவைத்துள்ளது.**

இந்தத் தேர்தலில் மிட் ரோம்னிக்கு ஆதரவு தெரிவித்து வந்தார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு. அதனால் மீண்டும் ஜனாதிபதியான ஒபாமா பழி தீர்த்துக் கொள்வாரோ என்கிற அச்சம் இஸ்ரேலை சிந்திக்கவைத்துள்ளது.

எனினும் முறைப்படி ஒபாமாவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார் பிரதமர். ஆனால் ஆளும் கட்சியின் பிற தலைவர்களோ ஒபாமா நம்பக்கூடிய மனிதர் இல்லை என்று குறிப்பிடு கின்றனர்.

# ஆப்கனிலிருந்து படைகளை உடனடியாக வாபஸ் பெறுக

## ஒபாமாவுக்கு தலிபான் மிரட்டல்

காபூல், நவ.9

ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று ஒபாமாவுக்கு தலிபான் இணையத்தளம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தலிபான் செய்தித் தொடர்பாளர் சபியுல்லா முஜாகித் மூலம் வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியாக மீண்டும் தெரிவாகியுள்ள ஒபாமாவுக்கு நாம் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆப்கானிஸ்தான் மண்ணில் உங்கள் படைகள் தோல்வி அடைந்துள்ளன. அதை நீங்கள் உடனே ஒப்புக் கொள்ளவேண்டும். எனவே அமெரிக்கப் படைகளை உடனடியாக அங்கிருந்து வாபஸ் பெற வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் என்ன நிலைமை நிலவுகிறது என்பதை ஒபாமா புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து பொய் சொல்லி உலகத்தை ஏமாற்ற நினைக்கக் கூடாது- என்றுள்ளது.

(வ)

# சிரியக் குழுக்களுடன் பேச்சு நடத்த பிரிட்டன் முடிவு

சிரிய ஆயுதக் குழுக்களுடன் பிரிட்டன் அதிகாரிகள் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மத்திய கிழக்குக்குப் பயணம் மேற்கொண்டு, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஜோர்தானைச் சென்றடைந்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சிரியாவில் தொடரும் மோதல்கள் குறித்து ஜோர்தான் மன்னருடன் கலந்துரையாடவுள்ள பிரிட்டன் பிரதமர், சிரிய முரண்பாடுகளால் இடம்பெயர்ந்த மக்களையும் சந்திக்கவுள்ளார்.


## 24 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



மலர்வு
09.11.1988
உதிர்வு
23.01.2009
செல்வி
ஸ்ரீரங்கநாதன்
றஜிவிதா
(திசானி)

நிலையான சொந்தம் நீ என்றிருக்க
எம்மை நிலை குலைய வைத்தாயே
இறுதிவரை துணையிருப்பாய் என்றிருக்க
பாதியிலே பரிதவிக்க விட்டாயே
நீளமென நாம் நினைத்த நிம்மதி
பாதியிலே தொலைந்து போனதம்மா
நித்தம் நித்தம் உன்னை நினைத்து
தவிக்க விட்டாயே.

உன்னை நினைத்து ஏங்கும்
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை.

செ.ஸ்ரீரங்கநாதன்
(ஓய்வுபெற்ற காணி உத்தியோகஸ்தர், அரியாலை).

(25119)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி அலெக்சாந்திரா
அமிர்தநாயகம் தம்பிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்)

எமது கல்லூரியில் ஆசிரியராகச் சேவையாற்றிய 36 வருடங்களில், 08 வருடங்கள் பிரதி அதிபராகப் பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சியில் உறுதுணையாக விளங்கிய அமரர் அலெக்சாந்திரா அமிர்தநாயகம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலை யடைகின்றோம்.

இவரது பிரிவினால் துயருற்று நிற்கும் அவரது பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் அமைதிபெற பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், கல்விசாரா ஊழியர்கள்,
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA நம்பர் -1 புறொயிலர் குஞ்சுகள் 10.11.2012 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(25153)(6-7-46)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

NOV.'2012 TO APRIL'2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொன்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

## O/L Maths

கணித பாடத்தில் 'A' சித்தி பெறும் வகையில் வீட்டுக்கு வந்து சிறந்த முறையில் கற்பித்துத் தரப்படும்.

தொடர்பு: 077 5088 026

## ஆசிரியர் தேவை

8ஆம் தரத்தில் கல்வி கற்கும், நெல்லியடியில் வசிக்கும் மாணவன் ஒருவனுக்கு ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய நன்கு திறமை வாய்ந்த ஒருவரும், ஏனைய பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஒருவரும் தேவை. (க.பொ.த சாதாரணதரத்துக்கு ஏற்ப தயார்படுத்தக் கூடியவராக இருத்தல் அவசியம்).

தொடர்பு: 077 0203 592

(சி/4711)(6-7-45)

## வீடு வாடகைக்கு

A-9 பிரதான வீதியின் மேற்குப் புறமாக, கணேசபுரத்துக்குச் செல்லும் வீதியில், பிரதான வீதியில் இருந்து 1½ கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

விற்பனைப் பொருள்களைக் களஞ்சியப்படுத்த உகந்த இடம்.

தொடர்பு: 077 5630 713, 028 4914 736

## வயற் காணி விற்பனைக்கு

கட்டுடைக்கும் சண்டிலிப்பாய், டச்சு வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் நல்ல தண்ணீரும், அழகான சூழலும், தூய சுற்றாடலும், தார் வீதியை முகப்பாகவும் கொண்ட 31 பரப்பு (வயற்பரப்பு) நிலம் விற்பனைக்குண்டு. காலபோகமாக நெல்லும் சிறுபோகமாக சிறு தானியம் அல்லது விவசாயமும் செய்ய ஏற்றது.

தொடர்பு : 075 5634032, 077 6283366

(24864)(6.14)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

The Jaffna Education Centre
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with Grammar
சிங்களம்
Short hand Typing ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம்:- இன்று 09.11.2012.
ஆசிரியை :- இ.லோகநாயகி
T.P. 077 6779340 (25143) (2-6.7)

E.S OL பரீட்சைக்குத் தயார் செய்துவிடல் பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(28)



அரசியல்வாதிகளாக நினைப்பவர்கள் தினமும் நூற்றுக் கணக்கானவர்களைக் கண்டாலும், ஒவ்வொருவரின் பெயரையும், அவர் இருக்கும் ஊரையும் அவருக்குப் பிடித்த பொழுது போக்கையோ, அவர் வீட்டைப் பற்றியோ விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டும். மீண்டும் அவர்களைச் சந்திக்கும் போது, அவர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் அவர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடுவார்கள்.

அமெரிக்க விமானப் போக்குவரத்துக் கம்பெனியில் விமானப் பணிப்பெண்ணாகப் பணியாற்றிய லூஸி என்ற பெண், மற்றப் பணிப் பெண்களைவிட வித்தியாசமான வளாக இருந்தாள். அவள் விமானத்தில் பயணம் செய் பவர்களின் பட்டியலை ஒரு தடவை பார்த்துப் பெயர்களை மனப்பாடம் செய்து கொள்வாள். அவர்கள் விமானத்தில் ஏறும் போதே அவர்களைக் கவனித்து, ஒவ்வொருவரின் பெயரையும் மனதில் பதியவைத்துக் கொள்வாள். பிறகு அவர்களுக்கு பாதுகாப்புப் பட்டியைக் கட்டிவிடும் போதும், பழ ரசங்களையோ, இனிப்பு வகைகளையோ, உணவையோ பரிமாறும் போதும், 'மிஸ்டர் எட்வேர்ட் உங்களுக்கு உணவு கொண்டு வரட்டுமா?' என்று நீண்ட நாள் பழகியவளைப் போல் பேசுவாள்.

அவள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்துப் பேசும் போது, அவர்கள் மகிழ்ச்சியால் உணர்ச்சிவசப்பட்டு விடுகிறார்கள். பிறகு ஒவ்வொரு தடவையும் அவர்கள் மீண்டும் மீண்டும் அதே விமானப் போக்குவரத்துக் கம் பெனியின் விமானங்களில் பயணம் செய்ய விரும்புகிறார்கள்.

அமெரிக்க விமானக் கம்பெனி லூஸியைப்போல், மற்றைய விமானப் பணிப்பெண்களும் நடந்துகொண்டால் என்ன என்று பயணிகளின் பெயரைச் சொல்லி அழைத்து, ஒவ்வொருவரையும் கவனிக்கும்படி யோசனை கூறியது.

சென்னையில் ஒரு தொழிலதிபர் இருக்கிறார். இவர் தன் தொழிற்சாலையில் வேலை செய்யும் 300 தொழிலாளர் களதும் பெயர்களையும் தெளிவாக நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார். யாரையாவது வழியில் சந்தித்தால்,அவர்கள் பெயரைச் சொல்லி அழைக்கிறார். அன்புடன் பேசுகிறார். அவன் குடும்பத்தைப் பற்றியும்,பிள்ளைகளின் படிப்பைப் பற்றியும் கேட்கிறார். அவர் ஒவ்வொரு தொழிலாளியையும் பெயர் சொல்லி அழைப்பதாலும், தன் குடும்பத்தில் ஒருவராக எல்லோரையும் நினைப்பதாலும், அந்தத் தொழிற்சாலையில் இதுவரையில் வேலை நிறுத்தம் என்பதே கிடையாது. அனைவரையும் தன் வசப்படுத்தத் தெரிந்த அனுபவசாலி.

ஜப்பானிய தொழிலதிபர்கள் பெரும்பாலும் இதே மாதிரித்தான் நடந்து கொள்கிறார்கள். ஆகையால்தான் ஜப்பானில் வேலை நிறுத்தம் என்பதே நடப்பதில்லை. உண்மையில் அங்கே தொழிலாளர்கள் தமது பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ள நினைத்தால், வேலைநிறுத்தம் செய்வதில்லை. மாறாக யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டார்கள். அதிக நேரம் வேலை செய்து, பொருள் உற்பத்தியை இரண்டு மடங்காகச் செய்து காண்பிப்பார்கள். தம்மைத் தாமே வருத்திக் கொண்டு அதிக வேலை செய்வதைப் பார்த்து முதலாளியே இரக்கம் கொண்டு, 'உங்கள் பிரச்சினை என்ன? உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்வோம். நீங்கள் இப்படி இரவு, பகலாக வேலை செய்தால் உங்கள் உடம்பு என்னத்துக்கு ஆகும்?' என்று கேட்பாராம்.

நம்பமுடியவில்லை. ஆனால் உண்மை.

மனிதத் தன்மையோடும், பாசத்துடனும், அன்புடனும் பழகும் எவரும் மற்றவர்களை எளிதில் கவர்ந்துவிட முடியும்.

பெரும் பணக்காரர்களும், அரசியல் தலைவர்களும், பெரிய பதவியில் உள்ளவர்களும் ஒரு சாரதியையோ, தோட்டக்காரனையோ, வீட்டில் வேலை செய்பவர் களையோ பார்க்கும் போது அவர்கள் பெயர்களைச் சொல்லி அழைத்துப் பேசினால், அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து விடுவார்கள்.

எவ்வளவு பெரிய மனிதர்? என் பெயரை நினைவில் வைத்துக்கொண்டு, இவ்வளவு அன்புடன் பேசுகிறாரே என்று மனதில் நினைத்துக் கொள்வார்கள்.

நேருவும் காமராஜரும் அண்ணாதுரையும் இந்த மாதிரித்தான் ஒவ்வொருவர் பெயரையும் நினைவில் வைத்துக்கொண்டு, மீண்டும் அவர்களைச் சந்தித்தபோது பெயரிட்டு அழைத்துப் பேசியே மற்றவர்களைத் தம் வசப்படுத்தினார்கள்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# நல்லொழுக்கமான மாணவரை உருவாக்கும் உந்து சக்தியாக நாம் விளங்க வேண்டும்

## உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் உரை

தென்மராட்சி,நவ.9

நல்லொழுக்கம் என்பது பாட சாலையில் மட்டும் மாணவர்கள் பெறக்கூடியது அல்ல. சமூக மட்டத்தில் அதன் பிரதிபலிப்பு எதிரொலிக்க வேண்டும். பாட சாலை மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாக நல்லொழுக்கம் திகழ்கிறது. பாடசாலையுடன் இணைந்து நல்லொழுக்கமான மாணவர்களை உருவாக்கும் உந்துசக்தியாக சமூகம் விளங்க வேண்டும் என்று யாழ்.பிராந்திய நல்லொழுக்க சம்மேளன செயலாளர் க.குமார குலசிங்கம் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே குமாரகுலசிங்கம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:-

ஒழுக்கம் விழுப்பம் தரும். ஒழுக்கத்தைப் பற்றி 2 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வள் ளுவப் பெருந்தகை தனது திருக் குறளில் ஓர் அதிகாரத்தில் சொல்லி இருக்கிறார். இந்த ஒழுக்கத்தை சிறுவயதில் எமது பிள்ளைகளுக்கு பெற்றோர், சமூகத்தினர் புகட்டுவதன் மூலம் சிறந்த ஒழுக்கமுள்ள நற்பிரஜை களை எமது பிரதேசம் காண முடியும்.

இந்த வகையில் சாவகச்சேரி நகரசபையினர், தமது சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் நல்லொழுக்க முள்ள மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதென்பது மாணவர்களுக்கு கிடைக்கும் பெரும் பாக்கியமாகும்.

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 11 பாடசாலைகளிலும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாண வர்கள் கற்கின்ற போதிலும், அவர்களில் நல்லொழுக்கமான மாணவர்களைத் தெரிவு செய்வது என்பது மிகவும் கடினமானதாகும்.

பாடசாலையில் கற்கும் மாண வர்கள் அனைவரும் ஒழுக்கமான வர்கள் என்பதால், சிறந்த ஒழுக்க முள்ள மாணவர்களை வடிகட்டித் தெரிவு செய்வது என்பது எவ்வளவு க்ஷ்டம் என்பது எமக்கும் தெரியும்.

எமது சமுதாயத்தில் ஒழுக்க முள்ள மாணவர்களின் எண் ணிக்கை உயர்வடைவதுடன், நாட்டில் சட்டவிரோத செயற் பாடுகளில் ஈடுபடும் இளம் சமுதாயத்தினரின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் என்பதில் எமக்கு பெரும் நம்பிக்கை உண்டு.

மதுவும், புகையிலையும் எமது சமூகத்தை அழிக்கவென உரு வான கொடூர அரக்க சகோதரர்கள். இந்த அரக்கர்களை சமூகத்தினர் ஒன்றுதிரண்டு அழிக்க முன்வர வேண்டும்-என்றார் (எ-9)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் சிறுவர் மற்றும் முதியோர்தின நிகழ் வுகள் அண்மையில் இடம்பெற்றன. பிரதேச செயலர் ஆசிறீ போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (எ-5)

# ஆங்கிலதினப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு,நவ.9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கிலதினப் போட் டியில் பார்த்து எழுதுதல் போட் டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தரம்-3**

1 ஆம் இடம்-வைஷ்ணவி சண்முகராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-தரணிகா தயானந்தன் (தெல்லிப்பழை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்), 3 ஆம் இடம்-வரதராசா சிவாகர் (இணுவில் மத்திய கல்லூரி).

**தரம்-4**

1 ஆம் இடம்-அனுசா பவான் (உடுவில் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-சோபிகா சிவ கணேசன் (தெல்லிப்பழை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்), 3 ஆம் இடம்-திவ்வியா சிவசீலன்-(அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை).

**தரம்-5**

1 ஆம் இடம்-சௌமியா ஆனந்தராஜா (உடுவில் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-ஜனனிகா விஜயரெத்தினம் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), 3 ஆம் இடம்-கேசணி பத்மநாதன் (சுழிபுரம் ஐக்கிய நாணய சங்க வித்தியாலயம்).

**தரம்-6**

1 ஆம் இடம்-கேதாரணி அருள்நேசராஜா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம்-சோமியா ஈஸ்வரன் (மானிப் பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-மதுராஜ் இராஜசுரேஷ்(சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தரம்-7**

1 ஆம் இடம்-சைலஜா இரட் ணேஸ்வரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம்-நித்திலா முருகானந்தன் (உடுவில் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-லதிபா வேலாயுதம் (தெல் லிப்பழை மகாஜனக் கல்லூரி).

**தரம்-8**

1 ஆம் இடம்-கோபிகா புவ னேந்திரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம்-ஜெனிஸ்ரிகா ஜேசுதாசன் (உடு வில் முருகமூர்த்தி வித்தி யாலயம்), 3 ஆம் இடம் (இருவர்) -வக்சாஜினி பத்மநாதன்-(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), யோகிதா இரட்ணராசா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம்-9**

1 ஆம் இடம்-யோகிதா கணேசநாயகம் (சுழிபுரம் விக்ரோ றியாக் கல்லூரி), 2 ஆம் இடம்-சேகரன் ஸ்ராலின்ராஜ் (அள வெட்டி அருணோதயக் கல்லூரி), 3 ஆம் இடம் (இருவர்)-ஹம்சியா பாலசுப்பிரமணியம்- (மானிப்பாய் மகளிர் கல்லூரி), டஷ்மி இரத்தினம் (உடுவில் முருகமூர்த்தி வித்தி யாலயம்). (எ-86)

(தொடரும்)

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



நீதி அமைச்சினால் நடத்தப் பட்ட தமிழ்-ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களுக்கான பரீட் சையில் நல்லூரைச் சேர்ந்த திருமதி நித்தியகலா பிரபாகரன் சித்தியடைந்தார். இவர் யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ ஆனந்த ராஜாவின் முன்னிலையில் மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிர மாணம் செய்து கொண்டார். (எ)

# பஜனை நிகழ்வு

அகில உலக அகண்ட பஜனை யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை நடைபெறஉள்ளது. (எ)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

கைதடி,நவ.9

கைதடி கலைவாணி வித்தி யாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் கடந்த திங்கட்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

தலைவராக நா.கருணாகரனும், செயலாளராக ஞா.கிருபதீசனும், பொருளாளராக சி.ஜெமிலாவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-288)

# கருத்தரங்கு

யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நிஸ்கோ பிரிவு நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளது.

நிஸ்கோ பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
**விளம்பரம்:**021-5671111
**விநியோகம்:** 021-5677222
**தொலைநகல்**
**செய்தி:** 021-5678844,
**விளம்பரம்:** 021-2229731

**மின் அஞ்சல்**
**செய்தி :** news@uthayan.com
**கருத்து:** comments@uthayan.com
**விளம்பரம்:** advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதிக்கு முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தொடரும் அலட்சியம்

சுற்றுச் சூழல் பற்றியோ, எதிர்கால நலன் பற்றியோ எந்த வித அக்கறையும் கொள்ளாது, 'இப்போதைக்கு எங்கள் வேலை முடிந்தால் போதும்' என்ற கொள்கையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களால் நிகழும் விபரீதங்களுக்கு கண்கண்ட சாட்சியாக மாறியுள்ளன சுன்னாகத்துக் கிணறுகள்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள மின் உற்பத்தி நிலையத்தில் பயன்பாட்டுக்கு ஒவ்வாத கழிவு ஒயில், பொருத்தமான வகையில் அகற்றப்படாது அங்கேயே கவிழ்த்து ஊற்றப்படுகின்றது. கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக - குடாநாடு படைத் தரப்பின் வசமான பின்னர் - யாழ்ப்பாணத்தின் மின் உற்பத்தி மையமாக சுன்னாகமே விளங்குகிறது. இத்தனை வருட காலப் பகுதியில் ஊற்றப்பட்டு வந்த கழிவு ஒயில், மண்ணினுள் குடிகொண்டு தனது பரவுகையை அதிகப்படுத்தி விட்டது. ஒயிலின் கீழ் நோக்கிய பயணம் கடைசியில் அந்தப் பகுதியின் நீரோட்டப் பகுதியைத் தொட்டபோது தான் நிலைமையின் விபரீதம் வெளிச்சத்துக்கு வந்தது.

மின் நிலையத்தை அண்மித்துள்ள வீட்டுக் கிணறுகளின் நீரில் மண்ணெண்ணையின் வாசம் அடிக்கத் தொடங்கியது. தவறுதலாகவோ அல்லது யாரேனும் வம்புக்கோ கிணற்றில் மண்ணெண்ணெயை ஊற்றியதாலேயே இவ்வாறு வித்தியாசமான மணம் அடிப்பதாக மக்கள் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் நாளாக நாளாக மண்ணெண்ணெயின் மணம் ஒயில் மணமாக மாறத் தொடங்கியது. தண்ணீரும் ஒருவித கலங்கல் தன்மையோடு தென்பட்டது. அதன் பின்னரே மக்கள் விழித்துக்கொண்டார்கள். இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலம் மேற்கொண்ட ஆய்வுகளின் படி, மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயிலே அருகில் உள்ள கிணறுகளுக்குள் ஊடுருவத் தொடங்கியிருப்பது கண்டறியப்பட்டது.

முதலில் மின் நிலையத்துக்கு மிக அருகாக இருந்த ஒரு சில வீடுகளிலேயே இவ்வாறு கிணறுகளில் ஒயில் கலக்கத் தொடங்கியிருந்தது. கிட்டத்தட்ட குறித்த மின் நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிணறுகளில் கூட ஒயில் ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டது. இதனால் அந்த மக்கள் குடிதண்ணீருக்காக அலையவேண்டிய நிலை. விவசாயப் பயிர்களும் ஒயில் கலந்த நீரைக் குடித்ததால், கருகத் தொடங்கியுள்ளன. ஒயில் கலந்த நீர் பாய்ந்ததால் விவசாய நிலங்களின் தன்மையும் மாறத் தொடங்கிவிட்டது. கிட்டத்தட்ட சுன்னாகத்தை ஒரு பாலைவனமாக்கும் வன்மத்தோடு தன் கை வரிசையை கழிவு ஒயில் காட்டி வருகிறது.

கழிவு ஒயில் கண்டபடி ஊற்றப்படுவது உடனடியாக தவிர்க்கப்பட்டாலும் கூட, கிணறுகள் உடனடியாக பழைய தன்மையை அடைய முடியுமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் மண்ணில் ஏற்கனவே கலந்திருக்கும் கழிவு ஒயில், நீரோட்டப் புள்ளியை அடைந்த பின்னரே தனது பயணத்துக்கு ஓய்வு கொடுக்கும். ஆகவே எத்தனை ஆயிரம் லீற்றர் கழிவு ஒயில் இன்னமும் சுன்னாகம் மண்ணில் புதைந்திருக்கிறது என்பது எவருக்குமே தெரியாது. அவ்வளவும் நீரோடு கலந்து சங்கமமாகி வெளியேற்றப்பட்ட பின்னரே ஓரளவுக்காவது நிலைமையை கட்டுப்படுத்த முடியும்.

பாதுகாப்பான தொட்டிகளில் கழிவு ஒயிலை ஊற்றி வைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையை உருவாக விடாமல் மின்சார சபை தடுத்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கு இது பற்றி அக்கறை இல்லை. மக்கள் கிணறுகளில் ஒயில் கலப்பதாக முறையிட்ட போதெல்லாம் இந்த தொட்டித் தீர்வு பற்றி வாய் கிழிய முழங்கிய மின்சார சபை அதிகாரிகள் அதன் பின்னர் வழமைபோல மறந்துவிட்டனர்.

இப்போது பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதை மின்சார சபை அதிகாரிகள் கெட்டித்தனமாகத் தவிர்த்துவிட்டார்கள். இல்லாவிட்டால் குறித்த கூட்டத்தில் நாலாபுறத்திலிருந்தும் பாயும் கேள்விக்கணைகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறியிருப்பார்கள்.

தமது தவறால் உருவாகியுள்ள பிரச்சினையால் ஒரு நகரமே அழிவை நோக்கி செல்லத் தொடங்கியுள்ள நிலையில் கூட மின்சார சபைக்கு விழிப்பு வரவேயில்லை. எப்போதும் போலவே தட்டிக் கழித்தல் என்ற உத்தியையே இப்போதும் பயன்படுத்துகிறார்கள். இவர்களின் அலட்சியத்தால் தான் அண்மையில் கூட பருத்தித்துறையில் ஒரு மாணவனின் உயிர் பறிக்கப்பட்டிருந்தது. இன்னமும் அவர்களுக்கு அந்த அலட்சியப் போக்கில் இருந்து மீள மனமில்லை. ஊர் எக்கேடு கெட்டால் அவர்களுக்கென்ன?

ஆனால் இவ்வாறு மண்ணுக்கடியில் அசுர வேகத்தில் பரவி நீரோட்டத்தில் கலக்கும் கழிவு ஒயில் என்றோ ஒரு நாள் இந்த அலட்சிய அதிகாரிகளின் வீட்டுக் கிணறுகளில் சுரக்கும் போது தான் இவர்களுக்கு சுரணை வரும். அதற்குப் பின்னர் இவர்கள் தலைகீழாக நின்றால் கூட தீர்க்க முடியாத கட்டத்துக்கு கழிவு ஒயில் கிணறுகளில் கலக்கும் பிரச்சினை கை மீறிப் போயிருக்கும்.

# மீட்பர் யார்?

**கந்தவனம் கோணேஸ்வரன்**

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையானது இலங்கையில் சர்வதிகாரிகளை உருவாக்கவே பயன்பட்டு வந்திருப்பதை இப்போதுதான் தென்னிலங்கை மக்கள் உணரத்தலைப்பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய சர்வதிகார ஜனாதிபதி உருவாவதற்கான அரசியல் யாப்பை எழுதி அரங்கேற்றிய கட்சியைச் சேர்ந்தவர்களே இன்று பொதுக்கூட்டு அமைத்துக் கொண்டு ஜனாதிபதி பதவியை இல்லாதொழிக்க வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி எனும் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு யாப்பின் மூலம் நடைமுறைப்படுத்தினார்.

1972 மே 22 இல் இந்த யாப்பு அறிமுகமானது. 1970 தேர்தலில் கிடைத்த பெரும்பான்மை ஆசனங்களால் ஏற்பட்ட பெருமிதத்தோடு அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக மாற்றித் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை நிராகரித்து அரசியல் யாப்பை எழுதி நடைமுறைப்படுத்தினார்.

இத்தகைய ஒரு யாப்பை எழுதுவதற்குத் தலைமை தாங்கியவர் கொல்வின். ஆர்.டி.சில்வா. இவரை ஒரு சமதர்மவாதி என்று எல்லோரும் நம்பியிருந்தனர்.

'ஒரு மொழி இரு நாடு: இரு மொழி ஒரு நாடு' என்பது இவரால் உதிர்க்கப்பட்ட பிரபல வாசகம். சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் அரச மொழி என்றால் நாடு இரண்டாக உடைந்துவிடும். சிங்களமும் தமிழும் அரச மொழிகளானால் நாடு ஒன்றாகவே அமையும் என்பதே இதன் சாரம். ஆனால், இதே மகான் தனக்கு வாய்ப்புக் கிடைத்த போது சிங்களத்துக்கு மாத்திரமல்ல, பௌத்தத்துக்கும் முதலிடம் கொடுத்து இனவாத அரசியல் யாப்பை எழுதி நாட்டுக்கு அளித்திருந்தார்.

இந்த யாப்பின் மூலம் 'சிலோன்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்ட நாடு 'ஸ்ரீலங்கா' ஆனது. பிரிட்டிஷ் அரசாண்மைத் தொடர்புகள் முற்று முழுதாக அறுக்கப்பட்டன. பிரிட்டிஷ் இராணியால் நியமிக்கப்பட்டிருந்த மகாதேசாதிபதி என்கின்ற இலங்கையை மேலாண்மை செய்த பதவி ஜனாதிபதி பதவியாக மாற்றம் பெற்றது.

ஜனாதிபதியை இலங்கையின் பிரதமரே நியமித்தார். இதன்படி பிரிட்டிஷ் இலங்கையின் கடைசி மகாதேசாதிபதியாகக் கடமை புரிந்த வில்லியம் கொபல்லாவ என்பவரே இலங்கைக்குடியரசின் முதலாவது ஜனாதிபதியாக பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் நியமிக்கப்பட்டார். ஆனால் 1977 இல் இடம்பெற்ற தேர்தலின்போது ஆட்சி கைமாறியது. ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

1970 தேர்தலில் நாடு தழுவிய ரீதியில் தமது கட்சியை விட சுமார் 53 ஆயிரம் வாக்குகள் குறைவாக எடுத்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 91 ஆசனங்களைப் பெற்றிருந்த வேளையில் தமது கட்சி 17 ஆசனங்களையே [illegible]ண்டிருந்ததை ஜே.ஆர். ஜீரணிக்க முடியாதவராக இருந்தார். தனக்குக் கிடைத்த அதீத பெரும்பான்மையை சாதகமாக்கிக் கொண்டு 1978 இல் இலங்கைக்குடியரசின் இரண்டாவது அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தினார். இதன் போது கூட தமிழர்களின் அபிலாஷைகள் புறந்தள்ளப்பட்டன.

இந்த இரண்டாவது குடியரசு யாப்பின் மூலம் உருவான மிகப்பெரிய கேடுதான் இன்றைய நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறைமை. முதலாவது நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர். [illegible] [illegible] வருடங்கள் நீடித்தது.

அதிகாரங்கள் குவிந்துள்ள பதவியை இரண்டு தடவைகளுக்கு மேல் வகிப்பதற்கு அரசியல் யாப்பு இடங்கொடாததால் பதவியைப் பிரிய மனமின்றி 1989 இல் விலகினார். அதன் பிறகு 1993 வரை ரணசிங்க பிரேமதாஸ நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவிவகித்தார். நான்கு வருட ஆட்சியின்போது இவர் கொல்லப்பட்டதால் மீதியாக இருந்த இரண்டுவருட ஆட்சி காலத்துக்கு டிங்கிரி பண்டா விஜேதுங்க நாடாளுமன்றத்தால் தெரிவானார்.

இவரது பதவிக்காலம் 1994 இல் முடிவடைந்ததோடு ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால ஆட்சிக் காலமும் மறைந்தது. பிரேமதாஸ கொலையுண்டிராவிட்டால் அவரும் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தை நீடித்திருக்கக்கூடும்.

முதலாவது ஜனாதிபதியான வில்லியம் கொபல்லாவ அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் தேசிய அரசு பேரவையின் ஆதரவுடன் நியமிக்கப்பட்டார். அவருக்குச் சில சம்பிரதாயக் கடமைகள் இருந்தபோதிலும் பிரதமரின் ஆலோசனைப்படி நடக்கவேண்டிய கட்டுப்பாடும் இருந்தது. மகாதேசாதிபதி பிரிட்டிஷ் நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்டதுபோல இலங்கை ஜனாதிபதி பிரதமர் தலைமையினாலான நிர்வாகத்துக்குக் கட்டுப்பட வேண்டியவரானார். ஆனால் குடியரசின் இரண்டாவது அரசியல் யாப்பின்மூலம் அறிமுகமான ஜனாதிபதி அவ்வாறானவர் அல்லர். அவருக்குச் சகல அதிகாரங்களும் அரசியல் யாப்பின்மூலம் வழங்கப்பட்டிருக்கின்றன.

தனது பதவிக்காலத்தில் ஜனாதிபதி ஒரு மன்னன் போலவே நடந்து கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. பிரதமமந்திரி தொடக்கம் பிரதி அமைச்சர் வரை ஜனாதிபதியின் விரல் அசைவுக்கு நடந்தாலன்றி அவர்களால் அரசியலில் பிழைத்துக் கொள்ள முடியாது என்ற அளவுக்கு ஜனாதிபதி அதிகாரங்கொண்டவராகின்றார்.

இத்தகைய அதிகாரங்கள் காரணமாகத்தான் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது பதவியின் பெருமைபற்றி கூறும்போது ஆணைப் பெண்ணாக்குவதும் பெண்ணை ஆணாக்குவதும் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் தன்னால் செய்யமுடியுமெனத் தெரிவித்தார். இதன் காரணமாக ஜனாதிபதியின் விருப்பமே அரசின் விருப்பமானது: ஜனாதிபதியின் செயற்பாடே அரசின் செயற்பாடானது: ஜனாதிபதியின் சிந்தனையே அரசின் சிந்தனையானது.

நிறைவேற்று ஜனாதிபதி பதவி தொடங்கிய காலத்திலேயே தமிழர்களின் போராட்டமும் முனைப்புப் பெற்றிருந்ததால் ஜனாதிபதியின் அதிகாரத்தின் அத்தனை பலமும் தமிழ் மக்கள்மேல்தான் பாய்ந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் எனப் பலவகையான சட்டங்களின் கொடூரங்களும் தமிழர்கள்மேல் பாய ஜனாதிபதியின் அதிகாரங்கள் பெருமளவில் உதவியதால் தென்னிலங்கை மக்களும் சந்தோசமாகவே ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

ஜனாதிபதியின் அதிகார வளங் காரணமாகப் பதினேழு வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சி கோலோச்சியது. ஜே.ஆர். காலத்திலும் பிரேமதாஸ காலத்திலும் அவர்கள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லார் போல் தோற்றம் பெற்றிருந்தனர். அவர்கள் சொல்வதே வேதம்: அவர்கள் விரலசைவே அரசியல் என்றும் காணப்பட்டது. ஜே.ஆர். யுகம் என்று ஒரு புதிய காலத்தைத் தோற்றுவித்து புகழ்பாடும் அளவுக்குப் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் [illegible]துப்போய்க் கிடந்தார்கள்.

பிரேமதாஸவின் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை விஜேதுங்காவாலோ வேறு எவராலோ நிரப்பமுடியாத இக்கட்டான சூழல் ஆட்சி மாற்றத்துக்கான தேவையை உணர்த்தியது.

இரண்டு பிரதமர்களின் புதல்வி என்ற கௌரவம், விஜேகுமாரதுங்க என்ற நல்லமனிதரின் மனைவி என்ற சிறப்பு, ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியின்போது துன்பங்களை அனுபவித்தவர் என்ற தகைமை, தந்தையையும் கணவரையும் வன்செயலில் பறிகொடுத்தவர் என்ற பரிதாபம் ஆகியன சந்திரிகாவை 1994 இல் ஜனாதிபதி பதவிக்கு உயர்த்தி வைத்ததால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அஸ்தமித்ததோடு இன்றுவரை தலையெடுக்க முடியாமலும் திண்டாடுகிறது.

சந்திரிகா, ஜனாதிபதி தேர்தலின்போது நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிப்பதுதான் முதல் வேலை என்று பிரசாரம் செய்தார். ஆனால் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்துவிட்டு பதவியை விட்டு மனமில்லாமலேயே பிரிந்தார். அதன்பிறகு 2005 இல் ஜனாதிபதி மஹிந்த தெரிவானார். இப்போது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இருக்கும் அவர் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியுள்ளதால் மீண்டும் ஜனாதிபதியாக பதவி வகித்து ஆயுட்கால மன்னனாக இருக்க ஆசைப்படுகிறார்.

எந்தக்கட்சி சார்ந்திருந்தாலும் எல்லா ஜனாதிபதிகளிடமும் ஒரு பொதுத்தன்மை காணப்படுகிறது. தன்னை மன்னராகப் பாவித்துக் கொள்வது, தமது உறவினர்களுக்குப் பாதுகாப்பு, பொருளாதாரம் சார்ந்த முக்கிய துறைகளைக் கையளிப்பது, அவர்களைச் சிற்றரசர்கள் போல் உலா வர அனுமதிப்பது, தனது குடும்பத்தைச் சாராத அனைத்து அரசியல் வாதிகளையும் உயர் அதிகாரிகளையும் தமது குடும்பச் சேவகர்களாகப் பயன்படுத்துவது, எதிர்க்கட்சி அரசியல் வாதிகளை விலைகொடுத்து வாங்குவது, எதிர்க்கட்சிகள் தலையெடுக்கமுடியாமல் அடாவடித்தனங்கள் செய்து தடுப்பது ஆகிய குணாம்சங்களுக்கு எந்த ஜனாதிபதியும் விதிவிலக்காக இருக்கவில்லை. இனிமேல் வரப்போகின்றவர்களும் இருக்கப்போவதில்லை.

சந்திரிகா காலத்தில் இந்த வரன்முறைகளை மீறி ரணில் தலைமையிலான அரசு அமைந்தபோது சில அமைச்சின் அதிகாரங்களைச் சந்திரிகா தம்வசம் எடுத்துக்கொண்டதும், ரணிலின் ஆட்சி நியாயமற்றுக் கலைக்கப்பட்டதும் ஜனாதிபதி பதவியின் அதிகாரத்துக்கு ஒரு சான்று.

இப்போதுகூட திவிநெகும சட்டமூலத்தை இலகுவாக நிறைவேற்றுவதற்கு நீதிமன்றம் தடையாக இருப்பதன் காரணமாக நீதித்துறை அவமதிப்புக்குள்ளாகி நிற்பதும். மேர்வின் சில்வா, ரிஷாத் பதியுதீன் போன்றவர்களுக்கு ராஜரீக அந்தஸ்து நிலைத்திருப்பதும் ஜனாதிபதி அதிகாரங்களின் சிறப்பம்சமே.

இத்தகைய அதிகாரம்மிகுந்த ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு சந்திரிகாவால் 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புச் சட்டமூலத்தில் காணப்பட்டிருந்தது.

ஆனால், அந்த யாப்பில் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு காணப்படலாம் என்று அஞ்சிய ரணில் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அரசமைப்பு முன்மொழிவுப் பத்திரத்தை கிழித்தெறிந்தும் தீயிட்டும் எதிர்ப்புக் காட்டி அந்த யாப்பை நிறைவேற விடாமல் குழப்பியிருந்தார்.

ஒருவேளை அன்று அந்த யாப்பு நிறைவேற அனுமதிக்கப்பட்டிருந்தால் ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இதனால் ரணில் பிரதமராக வருவதற்குக் கூட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதற்கு இடங்கொடாத பலனைத்தான் இன்று ரணில் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

கடி கொடுத்து அடி வாங்கும் தென்னிலங்கை மக்களை ஜனாதிபதியின் அதிகாரங்கள் என்ற விஷச் சுழியிலிருந்து யார் காப்பாற்றுவது என்பதுதான் இன்றைய கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இராஜலிங்கம் வித்யா
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி
அலுவலகம், யாழ்ப்பாணம்.



# குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு

உலக வாழ்வில் பெற்றோர் பெறும் தலைசிறந்த பேறு "அறிவுடைய மக்கள் பேறு" ஆகும்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்
தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்கிறார் வள்ளுவர். குழந்தைகளைச் சிறந்த பண்புள்ளவர்களாகவும், நல்ல அறிவுள்ளவர்களாகவும், கல்வியாற்றல் மிக்கவர்களாகவும் வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாக காணப்படுகின்றது. ஒரு குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சி என்பது அதன் பெற்றோரிலேயே தங்கியுள்ளது. சிறுவர்களின் சிறந்த வளர்ச்சி தான் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முன்னோடியாகின்றது. எனவே, சிறுவர்களை ஆரம்பத்திலிருந்தே சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது பெற்றோரின் முக்கிய கடமையாகின்றது.

குழந்தையின் உணர்வுகள் வளர்வதற்குப் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரின் அன்பு அவசியமாகின்றது. குழந்தையின் உணர்வு வெளிப்பாட்டுக்கு உடனடி எதிர்வினை கிடைக்கவில்லையென்றால் அதன் சமூக வளர்ச்சி தாமதமாகின்றது. அன்பில்லாமல் தன்னந்தனியாக வளரும் குழந்தைகள் திக்கி, திக்கி பேசுதல் அல்லது குழறுதலாக பேசுகின்றன. மேலும் இக் குழந்தைகள் எதிலும் ஈடுபாடு இன்றி இருப்பார்கள். பேசுதல், விளையாடுதல் என்று ஆர்வங்களை வெளிப்படுத்தாமல் எப்போதும் அமைதியாக இருப்பார்கள். இயக்க வளர்ச்சிகளான உட்காருதல், நிற்றல், நடத்தல் போன்றவையும் தாமதமாகிறது. பெற்றோரினால் அக்கறையாக சொல்லிக் கொடுக்கப்படாமல் வளரும் குழந்தைகள் நுண்ணறிவைப் பெற்றிருந்தாலும் கற்றுக் கொள்வது தாமதமாகின்றது.

நினைவாற்றல் வளருவதற்குக் கற்றுக்கொள்ளும் விடயங்களை உருக்காட்சிகளாகவோ, ஒலி வடிவங்களாகவோ மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்க்க வேண்டும். அப்பொழுது தான் கற்றவைகளை நினைவுக்குக் கொண்டு வர முடியும். பெற்றோரின் அன்பின்மையால் இவ்விதம் பயிற்சிகள் கிடைக்காமல் போவதால், நுண்ணறிவு வளர்ச்சி தடைப்படுகிறது. இதனால் கற்றல் சூழலில் குழந்தையால் கவனத்தை ஒருமுகப்படுத்த முடிவதில்லை. எனவே கற்றல் தாமதமாகிறது.

அன்பின்மை காரணமாக தன்னையொத்த குழந்தைகளுடன் கலந்தும் பழகுவதில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இந்த குழந்தையின் எதிர்மறையான செயல்பாடுகளான கோபம், ஒழுங்கீனம், பிற குழந்தைகளை அடித்து விடுதல் போன்றவை காரணமாக பிறருடன் ஒத்து போக முடிவதில்லை. இதனால் ஏற்படும் மனக்காயங்கள் மனதில் அழுத்தமாக படிந்து விடுவதால் இந்த குழந்தையின் ஆளுமையும் அவ்வாறு அமைந்து விட வாய்ப்புக்கள் உண்டு. மனநல வியலாளரான FitzSimon பெற்றோரின் வெறுப்புணர்வு நடத்தைகளைப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

எப்பொழுதும் பிள்ளைகளிடம் குறைபாடுகளையே காணுதல், பயமுறுத்துதல், பூட்டி வைத்தல், சிறிது நேரம் கூட அன்போடு பேசாதிருத்தல், விரும்பும் போல் எங்கு வேண்டுமானாலும் திரிய விடுதல், மற்றப்பிள்ளைகளோடு ஒப்பிட்டு இழிவுபடுத்தல், எதிர்பார்க்க முடியாத செயல்களை எதிர்பார்த்தல், பிள்ளைகளைப் பேணாது விடல், வீட்டை விட்டுத் துரத்துதல்.

இப்படியாக அப்பெற்றோரின் வெறுப்பானது பல்வேறு வகையில் வெளிப்படுத்தப்படுகின்றது. வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட பிள்ளையிடம் பின்வரும் தன்மைகள் காணப்படலாம்.

பிறரிடம் சண்டையிடுதல், கலகம் உண்டாக்குதல், விரோதம் கொள்ளுதல், பொறாமை கொள்ளுதல், பிறருக்குத் துன்பம் விளைவித்தல், தன்னைப் பிறர் கவரும் படியாகக் குறும்பு செய்தல், திருடுதல், பொய்கூறுதல், சிலவேளை வீட்டை விட்டு ஓடி விடுதல்

இந்தச் செயற்பாடுகள் யாவும் பெற்றோரின் அமைதியைக் குலைக்க வேண்டும் எனத் தம்மை அறியாமலே பிள்ளைகள் செய்கின்றனர். நல்ல முறையில் குழந்தை வளர வேண்டுமானால் பெற்றோரின் அன்பும் கருணையும் அவசியமாகும்.

அன்பு மட்டும் அல்லாது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திலும், விழுமியங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்கியமான உடல் இருந்தால் மட்டுமே பிள்ளைகள் தமது இலக்கை அடைவர். உடற்சக்தியினை அளிக்கும் ஆகாரங்கள், புரத உணவுகளான பால், முட்டை, இறைச்சி, மீன், பருப்பு வகைகள் என்பவற்றையும் கீரை வகை என்பவற்றையும் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். எனவே, பிள்ளைகளுக்கு நோய் நொடி தொற்று நோய்கள் ஏற்படாது பார்த்துக் கொள்வதும் தன்சுகாதாரம், சுற்றாடற் சுகாதாரம் என்பவற்றைப் பாதுகாப்பதும் சரிவிகித உணவைத் தெரிவுசெய்து வேளை தவறாது பிள்ளைக்குவழங்குவதும் பெற்றோரின் தலையாய கடன் ஆகும்.

ஆரோக்கியம் மிக்க ஒழுக்கம் மிக்க குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு பெற்றோர் பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தல் மிகவும் பயனுடையதாக அமையும். பெற்றோர் குழந்தைகளிடத்தில் அன்பும் அக்கறையானகவனிப்பும்கொண்டு நடத்தல் வேண்டும்.

ஒரு குழந்தையின் சமூகமயமாக்கம் முதன் முதலில் பெற்றோரில் இருந்தே ஆரம்பமாகிறது. எனவே பெற்றோர்கள் குழந்தைகள் மீது மிகவும் அக்கறையுடன் இருத்தல் வேண்டும். அவர்களுடைய ஒவ்வொரு உணர்வையும் சரியாகப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளிடம் அன்பு காட்டுவது மட்டுமன்றி காட்டும் அன்பைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளும்படி வெளிப்படுத்த வேண்டும்.

தாய் தந்தையர் தங்களுக்கிடையே தொடர்பு கொள்ளும் விதம் நேர்த்தியானதாய் இருத்தல் வேண்டும்.

பெற்றோர்கள் எப்போதும் சண்டை பிடிக்காமல் ஒருவரில் ஒருவர் மதிப்பும் அன்பும் வைத்திருத்தல் வேண்டும். பெற்றோர்கள் எந்த நேரமும் சண்டை பிடித்தபடி இருந்தால் அது குழந்தையின் நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அவர்கள் தமக்கிடையில் சுமுகமான உறவு நிலைகளைப் பேணிக்கொள்ளல் வேண்டும்.

பெற்றோர் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும். குழந்தைகள் 'போலச் செய்தல்' அல்லது பின்பற்றுவதனூடாக பலவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். பிள்ளைகள் எப்போதும் பெரியவர்களைப் போல் தானும் ஏன் நடக்கக் கூடாதென்று நினைக்கின்றனர். அவர்களுக்கு நல்லது கெட்டது என்ற வித்தியாசம் எதுவும் தெரிவதில்லை. அவர்கள் தங்களைச் சுற்றி உள்ளவர்கள் செய்யும் செயல்களைக் கதைப்பதை அவதானிக்கின்றார்கள், பிள்ளைகள் கூடுதலாகத் தங்கள் பெற்றோரின் நடத்தைகளையே பின்பற்றுகின்றார்கள். எனவே பெற்றோர்கள் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும்.

பெற்றோர் தமது குழந்தைகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகள் எப்போதும் சிறு சிறு தவறுகள் புரிந்த வண்ணம் இருப்பார்கள். பெற்றோர்கள் எந்த நேரமும் குறை கூறிய வண்ணமோ அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுபவர்களாகவோ இருக்கக் கூடாது. அவர்களுடைய தவறை எடுத்துச் சொல்லி அதனால் தங்களுடைய மனம் புண்படுகின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். பிள்ளைகள் செய்யும் தவறுகளை பல பேருக்கு முன்னால் சொல்லாமல் தனியே இருக்கும் போது சொல்ல வேண்டும். ஏனெனில் தாம் மற்றவர்கள் முன் அதிகாரம் செய்யப்படுவதையோ கட்டுப்படுத்தப்படுவதையோ பிள்ளைகள் விரும்புவதில்லை.

குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை, சுயகௌரவம் என்பவற்றுடன் வளர்வதற்கான வாய்ப்பையும் பெற்றோர் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாக வர வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாக வரப் போகின்றார்கள் என்ற கருத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய நற்செயல்களைப் பாராட்ட வேண்டும். அவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையையும், பெற்றோர் ஊட்ட வேண்டும். இதன் மூலம் அவர்கள் தாங்களாகவே எதிர்காலத்தில் எல்லாவற்றையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்று விடுவார்கள்.

பெற்றோர் குழந்தைகளுக்கு அளவுக்கதிகமான சுதந்திரத்தை வழங்குவதையும் அளவுக்கதிகமாக கட்டுப்பாடுகள் விதிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

அளவுக்கு அதிகமான சுதந்திரமும் அளவுக்கு அதிகமான கட்டுப்பாடும் பிள்ளைகள் தவறு செய்வதை தூண்டுவதாக அமையும். எனவே பெற்றோர் பிள்ளைகள் மீது எதனையும் அளவாகப் பிரயோகிக்க வேண்டும்.

எனவே, பெற்றோர்கள் குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது அவர்களை ஆரோக்கியமானவர்களாகவும், சிறந்த பண்புள்ளவர்களாகவும், சிறந்த தலைவர்களாகவும் ஆக்குவதற்குரிய வழிமுறைகளை மேற்கொண்டு சிறந்த பிள்ளைகளை இந்த சமுதாயத்துக்குத் தர முன்வர வேண்டும்.

# எங்கே செல்லப் போகிறது குடாநாட்டு வர்த்தகம்?

■ என். மோகன ஜெகன்

தமிழ் வளர்த்து, கலாசாரம் பேணும் நகரம் என்றும், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்து தம் வியர்வையை உரமாக்கி பொருளாதாரத்தை வளர்த்து வீறுநடைபோடும் நகரம் என்றும் புகழ் பெற்ற எம் யாழ். நகரம் இன்று கூனிக்குறுகி தளர் நடைபோட்டு தளர்ந்து வரும் நிலையில் இருப்பது கண்கூடு.

தனது வர்த்தக நடவடிக்கையில் எம் நகரம் வீழ்ச்சி காண்பதற்கு பலகாரணங்கள் இருந்தாலும் எம் வர்த்தகர்களின் அதீத ஆசையும் ஒரு காரணமாகின்றது என்பதனை மறைக்க முடியாது. இந்த ஆசையினால் கிடைத்த பலன் அளவுக்கு மீறிய, வருமான நிலை கடந்த கடன் சுமையே. வர்த்தகர்கள் தமது பொருளாதார நிலைக்கு மேல் கடன்பெற்று நிலம் வாங்கி அந்த நிலத்தில் பெற்றுக்கொண்ட கடன்தொகைக்கு மேலாக கட்டடங்களைக் கட்டி, கட்டடத்துக்குரிய பத்திரத்தினை வங்கியில் அடைவு வைத்து தம் கடனை அடைத்துக் கொள்வதில் எம் வர்த்தகர்கள் அதிக கவனம் செலுத்துவதால், அவர்களது வர்த்தக, வியாபார நடவடிக்கை மட்டுமல்லாது, எம் நகரத்தின் வர்த்தக நடவடிக்கையும் பாதிப்படைந்து வீழ்ச்சி கண்டு போவதை யாராலும் அறிந்து கொள்ளவோ, மாற்றியமைக்கவோ முடியாதுள்ளது.

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்று எம் முன்னோர்கள் கூறியது வியாபாரம் பெருக வேண்டும் என்பதற்காக. ஆனால் இன்று இந்த நிலை மாறி எங்கு பார்த்தாலும் வர்த்தக நிலையங்களே காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் வர்த்தக நிலையங்களில் பலவும், அவை அமைந்திருக்கும் இடத்துக்கும், அவற்றின் வியாபார நடவடிக்கைகளுக்கும் தொடர்பில்லாத நிலையிலும் பொருத்தப்பாடு இல்லாமலும் அமைந்திருப்பது எண்பது நோக்கத்தக்கது. ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் எண்ணிக்கையைக்கொண்ட எமது நகரினை பத்துலட்சம் மக்கள் தொகையுடைய ஒரு நிறைவு கண்ட நகராக மாற்ற முடியாமைக்கும் காரணம் எம் வர்த்தக நிலையே என்று எண்ணத் தோன்றுகின்றது.

வெளிநாட்டு மோகம் தாண்டவமாடும் நம் நாட்டில் காலாவதியற்ற பொருள்களை, அதுவும் எப்படி எதற்குப் பயன்படுத்துவது என்று மக்கள் அறியாத, தெரிந்து கொள்ள முடியாத பொருள்களை வர்த்தக அனுமதியின்றி விற்பனை செய்யும் தென்னிலங்கை வியாபாரிகள் மத்தியில் விற்பனை வரி, கட்டட வாடகை எனப் பெருந்தொகையை வியாபாரம் இன்றி, கடன்பட்டுச் செலுத்தும் எம் வர்த்தகர் நிலை மிகவும் கவலைக்குரியதே.

கிராம, உப நகரப் பகுதிகளில் கால்நடையாக வியாபாரம், நடைபாதை வியாபாரம் எனப் பல சில்லறை வியாபாரிகளின் நடமாட்டம் அதிகரித்தே வருகின்றது. இவர்களுக்கும் வர்த்தக சங்கத்துக்கும், சங்கத்தின் விடுமுறை, கட்டுப்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பு வெகு தொலைவே. வருமான வரித்திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், நிறுத்தல் அளவைத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், தொழில் திணைக்களம் போன்ற திணைக்களங்கள் இருப்பதோ அவற்றின் கட்டுப் பாடுகள் பற்றியோ அறியாத வர்த்தகர்களுக்கு இவற்றினை விளக்குவதற்கு ஒன்றுகூடல்கள் நடத்தப்பட்டாலும் அந்த ஒன்று கூடலில் வர்த்தகர்களின் வரவு மந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அண்ணளவாக இரண்டாயிரம் வியாபார நிலையங்கள் உள்ள போதிலும், வர்த்தக சங்கத்தில் அங்கத்தவர் தொகை பெரும் வீழ்ச்சியாகவே இருக்கின்றது. இது இவ்வாறிருக்க ஒன்றுகூடலில் கலந்து கொள்ளும் வர்த்தகர்கள் தொகை மிகவும் குறைவானதே. இவ்வாறு வர்த்தக சங்கத்தின் விற்பனை நியதிகளை அறியாத, அறிந்து கொள்ளமனமில்லாத வர்த்தகர்களின் வர்த்தக நிலைகளை எடுத்து நோக்கினால் பொருத்தப்பாடில்லாத இடங்களில் தம் நிலையங்களை அமைத்துக்கொள்வதும், விற்பனை சரியாக இடம்பெறாத சந்தர்ப்பத்தில் முதலீட்டினைக் கூட பெறமுடியாத நிலையில் கடனாளியாக வாழ்க்கை நடத்துவதையும் காணமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க, வர்த்தக சங்கத்தில் திறமையாகச் செயற்படும் செயல் ஆர்வம்மிக்க வர்த்தகர்களின் சிந்தனையும் திறமையும் குறைந்த பல வேளைகளில் சில்லறை வியாபாரிகளின் அதீத ஆசையினால் மழுங்கடிக்கப்படுகின்றது. எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி தொடர்நிலையில் இருக்குமானால், பெரும் பாதிப்பினை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். நாட்டிலே அண்மைக்காலமாக இடம்பெற்ற போர்க்காலச் சூழ்நிலையில் கூட, இத்தகைய பின்னடைவினை நாம் சந்திக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிக்கு உணவு எது?

இரணியன் என்ற அரசன் தவம் காரணமாகப் பல அரிய வரங்களைப் பெற்றான். வரம் கிடைக்கும் வரை தவங்களை இயற்றுவதும் வரம் கிடைத்ததும், தேவர்களையும், மகரிஷிகளையும் துன்புறுத்துவதும் அசுரர்களுக்கு உரிய வாழ்க்கையாகும்.

அந்த வரிசையில் இரணியனும் வரங்களைப் பெற்றுக் கொண்டு பல அதர்மங்களைச் செய்யத் தொடங்கினான். தேவர்களை அடிமைகளைப் போல் துன்புறுத்தினான். மகரிஷிகளைத் தவம் செய்ய முடியாதவாறு தடுத்தான். அதனையும் தாண்டி ஒரு விபரீதமான கட்டளையை அவன் பிறப்பித்தான். யாரும் இறைவனின் நாமத்தை உச்சரிக்கக் கூடாது. தன்னுடைய பெயரையே உச்சரிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

இறைவனின் நாமத்தை உச்சரிக்கக்கூடாது என்று சொல்லுவதற்கு மூலகாரணம் அவனுடைய ஆணவமே ஆகும். இறைவனின் பெருமைகளை நன்கு அறிந்து தவங்களை இயற்றினான். அந்தத் தவம் காரணமாகவே அவனுக்கு பல அரிய வரங்கள் கிடைக்கப்பெற்றன. வரம் கிடைத்ததும் அவனுடைய அறிவு மழுங்கி ஆணவம் தலை தூக்கியது.

இவ்வாறு எங்கெங்கே ஆணவம் தலைதூக்குகிறதோ அவற்றை அங்கங்கே அழிப்பதற்கென்றே இறைசக்தியால் பல சக்திகள் தோன்றுகின்றன. 'வெளியில் உள்ள அனைவரையும் இறைவனின் திருநாமத்தை உச்சரிக்கக் கூடாது' என்று இரணியன் கட்டளை பிறப்பித்தான். அவனுடைய ஆணவத்தை அழிப்பதற்கு அவனுடைய அரண்மனைக்குள்ளேயே... அதுவும் அவனுடைய மனைவியின் வயிற்றுக்குள்ளேயே அந்தச் சக்தியை இறைவன் தோற்றுவித்தான்.

அவனுடைய மனைவி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள்.. அப்போது நாரத மகரிஷி அங்கு வந்தார். நாராயண மூர்த்தியின் வரலாறுகளை அவனுக்கு அவர் உபதேசித்தார். அந்த வரலாறுகளை இரணிய கசிபுவின் வயிற்றிலிருந்த குழந்தையும் கேட்டுக் கொண்டிருந்தது. கருவிலேயே திருவுடையர் என்று கூறுகிறோம் அல்லவா...? அதே போல் கருவில் இருந்தபோதே செவியின் வாயிலாக நாராயண மூர்த்தியின் வரலாறுகளைக் கேட்கும் வாய்ப்பினை அந்தக்குழந்தை பெற்றது.

இந்த விடயங்கள் எல்லாம் இரணியகசிபுவுக்குத் தெரியாமலேயே நடந்தேறின. குறிப்பிட்ட நாளில் இரணியகசிபுவின் மனைவி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். பிரகலாதன் என்று பெயர் சூட்டி அந்தக்குழந்தையை சீரும் சிறப்புமாக வளர்த்தார்கள். உரிய பருவம் வந்ததும் பிரகலாதனைக் கல்வி கற்கும் பொருட்டு ஓர் ஆசிரியரிடம் அனுப்பி வைத்தார்கள்.

அந்த ஆசிரியர், 'ஓம் இரணியாயாய நமஹ...' என்று சொல்லும்படி அவனுக்குக் கற்றுத் தந்தார். ஆனால் பிரகலாதன் அதனை உச்சரிக்காமல் 'ஓம் நமோ நாராயணாய நமஹ' என்றே உச்சரித்தான். அதனைக் கேட்ட ஆசிரியர் அதிர்ச்சியடைந்தார். திரும்பவும் 'ஓம் இரணியாயாய நமஹ...' என்று சொல்லிக் கொடுத்தார்.

ஆனால், பிரகலாதன் திரும்பவும் ஓம் நமோ நாராயணாய நமஹ' என்றே பலமுறை உச்சரித்தான். பலமுறை ஆசிரியர் எடுத்துக் கூறியும் அவன் கேட்கவில்லை. இரணிய கசிபுவிடம் வந்த ஆசிரியர், பிரகலாதனின் போக்கினை எடுத்துக் கூறி தன்னால் இனி அவனுக்கு கற்பிக்க இயலாது என்பதைத் தெரிவித்தார்.

அதனைக் கேட்ட இரணிய கசிபு கடும் கோபம் கொண்டான். இருப்பினும் பிரகலாதனை வழிக்குக் கொண்டுவருவதற்காக அவன் முயன்றான். ஆனால் பிரகலாதன் தன் தந்தையின் பெயரை உச்சரிக்க மறுத்து 'ஓம் நமோ நாராயணாய நமஹ' என்றே உச்சரித்தான். அதனால் கோபம் அடைந்த அவன் பகைவரின் பெயரை உச்சரிக்கும் பிள்ளை இருப்பதைவிட இறப்பதேமேல் என்று முடிவு கட்டி அவனைப் பல்வேறு முறைகளில் கொல்வதற்குக் கட்டளையிட்டான்.

ஆனால் நாராயண மூர்த்தியின் அனுக்கிரகத்தால் அவனுக்கு எந்தவித ஆபத்தும் நேரவில்லை. இறுதியில் தன் மனைவியிடம் வந்த இரணிய கசிபு பகைவனுடைய பெயரை உச்சரிக்கும் இந்தப் பிள்ளை எமக்கு உதவமாட்டான். அவனை நஞ்சிட்டு கொன்றுவிடு என்று உத்தரவு பிறப்பித்தான். அதைக் கேட்ட அவள் கலங்கினாள்.

''மகனே.. தந்தை சொல்லுற மாதிரி நடந்து கொள்...'' என்று பலவாறு கெஞ்சினாள். ஆனால் பிரகலாதன் அதை ஏற்காமல், ''அம்மா தந்தை கூறியபடி எனக்கு நஞ்சைப் புகட்டு. எனக்குத் துணையாக நாராயணன் இருக்கிறார். நீ கவலைப்பட வேண்டாம். தந்தை என்னைக் கொல்லுவதற்குப் பல விதங்களில் முயன்றதை நீ அறிவாய்.. அது முடிந்ததா...? அதே போல் இந்த நஞ்சிலிருந்தும் ஸ்ரீமன் நாராயணன் என்னைக் காப்பாற்றுவார். தயங்காமல் எனக்கு நஞ்சினைக் கொடு'' என்றான்.

கண்களில் நீர் வடிந்தவாறே அவள் வேறு வழியின்றி தன் மகனுக்கு நஞ்சைக் கொடுத்தாள். அந்த நஞ்சும் அவனை ஒன்றும் செய்யவில்லை. இதனை அறிந்த இரணிய கசிபு அடங்காச் சினம் கொண்டான். பிரகலாதன் எதிரே வந்து நின்ற அவன், 'நாராயணன்.. நாராயணன் என்று சொல்கிறாயே.... அந்த நாராயணன் எங்கே இருக்கிறான்...?'' என்று கேட்டான்.

''தந்தையே... என் நாராயணன் எங்கும் நிறைந்திருப்பவர். அவர் இல்லாத இடம் என்பது எதுவுமில்லை. இந்தத் தூணிலும் இருக்கிறார். சிறு துரும்பிலும் இருக்கிறார்..'' என்று அவன் பதில் அளித்தான்.

''அப்படியென்றால் இந்தத் தூணில் உன் நாராயணனைக் காட்டு'' என்று கூறியபடி அருகிலிருந்த தூணை தன் காலால் எட்டி உதைத்தான்.

அந்தத் தூணிலிருந்து ஸ்ரீமன் நாராயணன் நரசிம்ம அவதாரமாகத் தோன்றி இரணியனைக் கொன்று முடித்தார். இறைவனிடம் வரம் வாங்கிக் கொண்டு இறைவனுடைய பெயரையே உச்சரிக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்த கொடியவனின் கதை இப்படி முடிந்தது.

இந்த இரணிய கசிபுவைத் தேவர்களால் வெல்ல முடியவில்லை. மிகப் பெரிய தவ பலத்தைப் பெற்றிருந்த அவன் தன்னுடைய நன்றி மறந்த குணத்தாலும், ஆணவத்தாலும் தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொண்டான். தேவர்களும் மற்றவர்களும் வேதங்களை அறிந்தவர்கள். பல சாத்திரங்களைக் கற்றவர்கள். ஆனால் பிரகலாதன் கருவிலே இருந்தபோது செவி வழியாக பகவானின் வரலாறுகளைக் கேட்டதுதான் அவன் கற்ற கல்வி. அந்த செவிச்செல்வமே மிகப் பெரிய ஆணவக் காரனை அழிக்கும் வல்லமையைப் பெற்றது என்பது முக்கியமாக அறிய வேண்டிய கருத்தாகும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# நேர்த்தியை நிறைவு செய்பவர்களுக்கு நல்லருள் பாலிக்கும் ஸ்ரீ விஷ்ணு துர்க்கா



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

ஞானி

சிறுப்பிட்டியில் கோயில் கொண்டு நல்லருள் பாலிக்கும் ஸ்ரீ விஷ்ணு துர்க்கா நம்பிக்கையோடு நேர்த்திவைத்து வழிபாடு செய்பவர்களுக்கு ''குறித்த தினத்தில் நினைத்தபடி நல்லருள் வழங்குவதை'' அடியவர்கள் மெய்மறந்து கூறி மகிழ்கின்றனர். அந்த வகையில் ஆலயத்துக்கும்; பிரதம பூசாரிக்கும் காணிக்கை செலுத்தி நன்றி பகர்வது நாளாந்த நடைமுறையாகும்.

ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் 1988 ஆம் ஆண்டு தைத்திங்கள் பூர நட்சத்திரத்தில் பெருவிழாவாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை ஈவினை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவாகம கிரியாமணி சிவஸ்ரீ தியாக. கெங்காதரக்குருக்கள் தலைமைக் குருவாக முன்னின்று நடத்தி வைத்தார். அதைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

''வீரத்தின் சக்தியாகிய துர்க்கா தேவி சிவத்தோடு சேர்ந்த நிலையில் ''சிவதுர்க்கா'' என்றும் காத்தல் கடவுளாகிய ஸ்ரீ விஷ்ணுவோடு சேர்ந்த நிலையில் '' ஸ்ரீ விஷ்ணு துர்க்கா'' என்றும் போற்றப்படுவதோடு ஸ்ரீ விஷ்ணு துர்க்கா மூர்த்தம் அடியவர்கள் வேண்டியவாறு நல்லருள் பெறுவதற்கும், இலகுவாக நேர்த்திகளை நிறைவு செய்வதற்கும் ஏற்றது. அடியவர்களுக்கு நல்லருள் பாலிப்பது என சிவஸ்ரீ தியாக. கெங்காதரக் குருக்கள் கூறினார்.

**கும்பாபிஷேக தினமான ''தை பூரணை தினத்தை'' நிறைவு நாளாக சங்காபிஷேகமாகக் கொண்டு வருடாந்த மஹோற்சவங்கள் 21 தினங்கள் நடைபெற்று வருகின்றன. கர்ப்பக்கிரகத்தில் துர்க்காதேவி பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதோடு ஆலயத்தின் உட்பிரகாரத்தில் பாம்பணையில் பள்ளிகொள்ளும் ஸ்ரீ விஷ்ணுவையும் எழுந்தருளச் செய்து நாளாந்தம் பூசை வழிபாடு செய்யப்படுகின்றது.**

கும்பாபிஷேக தினமான ''தை பூரணை தினத்தை'' நிறைவு நாளாக சங்காபிஷேகமாகக் கொண்டு வருடாந்த மஹோற்சவங்கள் 21 தினங்கள் நடைபெற்று வருகின்றன. கர்ப்பக்கிரகத்தில் துர்க்காதேவி பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதோடு, ஆலயத்தின் உட்பிரகாரத்தில் பாம்பணையில் பள்ளிகொள்ளும் ஸ்ரீ விஷ்ணுவையும் எழுந்தருளச் செய்து நாளாந்தம் பூசை வழிபாடு செய்யப்படுகின்றது.

அழகான வேலைப்பாடு கொண்ட ஆலயமாகவும், அருள்வியாபகத்தோடு எழுந்தருளி அடியவர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு வழங்கும் இஷ்டதெய்வமாவும் விளங்கும் துர்க்கா அம்பாளைப் பெருமளவில் பெண்கள் வழிபட்டு தங்களது விருப்பங்களை நிறைவு செய்கின்றனர். செவ்வாய் , வெள்ளி ஆகிய கிழமைகளில் பெருமளவில் அடியவர்கள் கூடுகின்றனர். தங்களது நேர்த்திகளை அம்பாளிடம் முன்வைத்து பக்திவைராக்கியத்தோடு வழிபாடு செய்கின்றனர். ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகள் பூசைகளை இரத்தின பரமேஸ்வரக் குருக்கள் பக்திபூர்வமாகச் செய்து வருகின்றபோதிலும், வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா, கிரியைகள், பூசைகளை சிவஸ்ரீ தியாக.கெங்காதரக் குருக்கள் ஆண்டு தோறும் செய்து வருகின்றார்.

பதினொரு தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். ஆண்டுதோறும் பக்தி பூர்வமாகவும் கோலாகலமாகவும் நடைபெறும் பத்துத் திருவிழா உபயகாரர்களாக ஊரிலுள்ள குடும்பங்கள் பொறுப்பேற்றுச் செய்துவரும் அதேவேளையில், தேர்த் திருவிழாவை ஆலய ஸ்தாபகரும் பரிபாலகருமான காசிப்பிள்ளை நடராசா குடும்பத்தினர் உபயமேற்றுச் செய்து வருகின்றனர்.

ஆலயத்தின் திருப்பணிகளை ஆலயத்தின் ஸ்தாபகர் குடும்பத்தினர் செய்து வரும் வேளைகளில் உள்ளூர் பொதுமக்களும் அடியவர்களும் தங்களால் இயன்றளவு வழங்கி, ஒத்துழைத்து ஆலயத் திருப்பணிகளை நிறைவுசெய்து வருகின்றனர். அம்பாளின் அருள்வியாபகத்தில் செய்யப்பட்ட புதிய சித்திரத்தேர் 2011 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டு வருடாந்த மஹோற்சவத்தில் அம்பாள் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு நல்லருள்பாலித்தார்.

ஆண்டுதோறும் வருடாந்த பெரும் திருவிழாவோடு வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் விசேட பூசை வழிபாடும், ஆடிச் செவ்வாய் நவராத்திரி, தைபூசம், மாதப்பிறப்பு வருடப்பிறப்பு, திருவெம்பாவை, தைப்பொங்கல் போன்ற விசேட காலங்களில் சிறப்பான பூசைவழிபாடும் உற்சவங்களும் நடைபெறுகின்றன. ஆலயம் தோற்றத்தில் சிறிதாக இருந்தாலும் அருள்வியாபகத்தில் பக்திபூர்வமான தெய்வீகச் சூழலிலும் மேலோங்கி உள்ளன.

அடியார்கள் அம்பாளை வழிபட்டு தங்கள் மனக்குறைகளைப் போக்கி நல்லருள் பேறு பெறுகின்றனர். வறுமையில் வாடிய உள்ளூர் வர்த்தகரான ஸ்தாபகர் நடராசா, ஆண்டுதோறும் பெரும் பொருள் செலவில் திருப்பணிகளை நிறைவேற்றி, ஆலயத்தை பரிபாலனம் செய்து வருவது அம்பாளின் அருள்வியாபகமே எனக் கூறி மகிழ்கிறார்.

சிறுப்பிட்டி ஸ்ரீ விஸ்ணு துர்க்காவின் அருள் வியாபகத்தைப் போற்றி, திரு ஊஞ்சல் பதிகத்தை சிறுப்பிட்டி வாழ் ஆசிரியப் பெருந்தகை புலவர் இ.செல்லத்துரை பாடி அர்ப்பணம் செய்துள்ளார். அம்பாளின் அருள்பெற்று உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் காணிகளை கையளியுங்கள்!

## தோப்பூர் பத்து வீட்டுத் திட்ட மக்கள் வேண்டுகோள்

திருகோணமலை,நவ.9

2006 ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்த தோப்பூர் பிரதேச மக்கள் கந்தளாய் அகதி முகாமில் தஞ்சமடைந்து மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தபோதும், பத்து வீட்டுத்திட்டக் காணியை இராணுவத்தினர் தம் வசம் எடுத்துக்கொண்டதால் அந்த இடங்களில் வசித்த மக்கள் உறவினர்களினதும், அயலவர்களினதும் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

அவர்களது காணிகளை மீண்டும் ஒப்படைப்பதாக அரச அதிகாரிகள் வாக்குறுதியளித்த போதும் இதுவரை அதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் நடைபெற வில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

> காணிகளை மீண்டும் ஒப்படைப்பதாக அரச அதிகாரிகள் வாக்குறுதியளித்த போதும் இதுவரை அதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் நடைபெறவில்லை.

இதேவேளை சொந்த வீடு இன்றி எத்தனை வருடங்கள் உறவினர்களின் வீடுகளில் வசிப்பது என்று தோப்பூர் பத்து வீட்டுத்திட்ட மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே தமது காணியை பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தோப்பூர் பத்து வீட்டுத்திட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-40)

## சிக்கியது போதைப் பொருள்

நுவரெலியா மத்திய சந்தை கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடையொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை போதைப் பொருளடங்கிய பொதியொன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட பொதியில் 13 கிலோ 180 கிராம் போதைப் பொருள் காணப்பட்டது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதில், குறித்த போதைப் பொருளை பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பைக்கற் 80ரூபா வீதம் விற்றதாக தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரை நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தவுள்ளனர். தேடுதல் நடவடிக் கையில் ஈடுபட்டபோதே குறித்த போதைப் பொருள், கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர். (ச)

## குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்தன காட்டு யானைகள்

### மக்கள் இடம்பெயர்வு; உடைமைகள் சேதம்



அம்பாறை,நவ.9

அட்டாளைச்சேனைப் பிரதேசத்துக்குட்பட்ட ஆலம்குளம் மற்றும் கரடிக்குளம் ஆகிய பிரதேசங்களுக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு நுழைந்த காட்டு யானைகள் அந்தப்பிரதேசத்தில் வசித்துவரும் குடும்பங்களின் குடியிருப்புக்கள் மற்றும் தோட்டங்களை சேதத்துக்கு உட்படுத்தியுள்ளன. இதனால் அங்கு வசித்துவரும் மக்கள் நள்ளிரவில் வீடுகளை விட்டு வெளியேறி அயல் பிரதேசங்களுக்கு சென்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் உடைமைகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

காட்டு யானைகள் காடுகளில் இருந்து, இரவு வேளைகளில் மக்களின் குடியிருப்பு நிலங்களை நோக்கி வருவதனால் தீகவாபி, ஆலிம்சேனை, ஆலிம் நகர், சம்புநகர், மீலாத் நகர் போன்ற பிரதேச மக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் காட்டு யானைகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாப்பு வழங்குமாறு பிரதேச மக்கள் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

இதேவேளை ஒலுவில் அஷ்ரப் நகருக்குள் புகுந்த காட்டு யானை நான்கு பிள்ளைகளின் தந்தையை அடித்துக் கொன்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் முகம்மது காசிம் இப்றாகீம் (வயது-53) என்பவரேஉயிரிழந்துள்ளார். இவரது ஜனாஸா குடியிருக்கும் வீட்டுக்கு அருகிலுள்ள முட்கம்பி வேலியில் இருந்தவாறு மீட்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ.எல். ஹாஜா முகையதீன் தலைமையில் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## கடல் அன்னையின் பரிசு...!



சாய்ந்தமருதை அண்டிய கடலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கரைவலைப் படகில் 10,000 கிலோ மீன்கள் பிடிபட்டுள்ளன. சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்குச் சொந்தமான கரைவலை படகில் பிடிபட்ட மீன் வகைகள் குவிக்கப்பட்டிருப்பதை மக்கள் பார்வையிடுகின்றனர்.

## குளவி கொட்டி தொழிலாளி சாவு

மஸ்கெலியா,நவ.9


மஸ்கெலியா ,அப்கொட் சாமிமலை மேல்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் குளவி கொட்டி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் விறகு வெட்டச் சென்றவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தண்டபாணி ராமசாமி (வயது-69) என்பவரே உயிரிழந்துள்ளார். (ச)

## காசல்ரீ நீர்த்தேக்கத்தின் அவசரக் கதவு திறப்பு



நுவரெலியா,நவ.9

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து நீர்த்தேக்கத்தில் இருந்து மேலதிக நீரை வெளியேற்றும் அதன் அவசரக் கதவுகளில் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறக்கப்பட்டுள்ளது.

அவசரக் கதவு திறக்கப்பட்டுள்ளமையால் களனி கங்கையின் இருமருங்கிலும் இருப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை, மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் மூன்று வருடங்களுக்குப் பின்னர், இந்த நீர்த்தேக்கத்தின் அவசரக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளவே புத்திசாதுரியத்துடன் செயற்படுகிறது கூட்டமைப்பு

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராஜசிங்கம் சொல்கிறார்

எருவில்,நவ.9

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் புத்திசாதுரியமான வழிகளைக் கையாளவேண்டும். அதனை நோக்காகக்கொண்டே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, நாவற்குடாவில் இடம்பெற்ற போரால் கணவனை இழந்த குடும்பங்களைத் தலைமை தாங்கும் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆளும் கட்சி மட்டும் ஓர் அரசு அல்ல. எதிர்க் கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்தால்தான் அரசு. எதிர்க்கட்சி இல்லையென்றால் அதனை அரசாகக் கொள்ளமுடியாது.

இந்நிகழ்வில் இருப்பவர்கள் கணவனை இழந்த பெண்கள் அல்லர். கணவனைப் பறிகொடுத்த பெண்கள்.

நீங்கள் விதவைகள் அல்லர். குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள். உங்களை ஒரு குறுகிய வட்டத்துக்குள் வைக்கமுடியாது. பெரும் பொறுப்பை உங்களது தலையில் சுமந்துள்ளீர்கள்.

வன்னியில் நடந்த இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் தொகை 8 ஆயிரம் என்று இலங்கை அரசு கூறுகின்றது. ஆனால், சம்பவத்தின்போது அவர்களுடன் இருந்த ஆயர், இறுதிப் போரில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

[illegible] மாவட்டத்தில் போரால் கணவனை இழந்த 40 ஆயிரம் பெண்களை நாங்கள் காண்கின்றோம். இன்று எல்லாவற்றையும் மூடி மறைக்கலாம் என அரசு எண்ணுகின்றது. ஆனால், அவை முடியாத காரியமாகவே இருக்கும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் வீடுகளுக்கான விண்ணப்பம் வழங்கப்படமாட்டாது என சிலர் கூறித் திரிகின்றனர். அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலையையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். அரசு என்பது ஆளும் கட்சி மட்டுமல்ல. எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் இணைந்தால்தான் அது அரசு. அரசில் இருந்து பிதற்றுவோர் இதனை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஓர் இடத்தில் எதிர்க் கட்சி இல்லையென்றால் அதனை அரசாகக் கொள்ள முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்களுக்கு வீடுகள் வழங்கப்படாது என்பது முற்றுமுழுதான ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடாகும்.

இவ்வாறான நிலையில் எமது தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் புத்திசாதுரியமான வழிகளைக் கையாள வேண்டும். அதனை நோக்காகக் கொண்டே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புத்திசாதுரியமாகச் செயற்பட்டு வருகின்றது.-என்றார்.(ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் புதியவர் ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதில், அதிக கவனம் பின்பற்ற வேண்டும். நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரம் சீராகக், கூடுதல் பணிபுரிவீர்கள்.

**இடபம்:** உங்களின் யதார்த்தமான பேச்சு சிலர் மனதைச் சங்கடப்படுத்தலாம். அன்றாட நடைமுறைப்பணி சிறக்க சிறிய மாற்றங்களைப் பின்பற்றுவது அவசியம். தொழில் வியாபாரத்திலுள்ள அனுகூலத் தன்மையைப் பாதுகாப்பது அவசியம். எதிர்பார்த்ததைவிட குறைந்த அளவில் பண வரவு இருக்கும்.

**மிதுனம்:** நீங்கள் கலகலப்பாகப்பேசி பிறர் மனம் கவருவீர்கள். செயல்களில் வெற்றிபெறுவது எளிதாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**கடகம்:** உங்கள் பேச்சில் தத்துவத்தின் சாயல் நிறைந்திருக்கும். சொந்த நலனை விட அடுத்தவர் நலனைப் பாதுகாப்பதில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் பெற புதிய வழிமுறை உருவாகும்.

**சிங்கம்:** உங்களைச் சார்ந்தவர்களிடம் கூடுதல் அன்பு, கருணை மனதுடன் பேசுவீர்கள். சமூகத்தில் இருக்கிற மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடைய, அதிகமான பணி புரிவீர்கள். சராசரி பண வரவுடன், நிலுவைப் பணம் வசூலாகும்.

**கன்னி:** நீங்கள் உணர்ச்சிவசப்படும் சூழ்நிலையைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் செழிக்க, புதிய யுக்தியைப் பயன்படுத்துவது, முன்னேற்றம் பெற உதவும். சராசரி பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

## நாளை

ஐப்பசி -25 சனிக்கிழமை 10.11.2012
திதி: ஏகாதசி நண்பகல். 12.11 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ. 07.11 வரை
சுபநேரம்: 03.06 - 04.36 வரை
ராகுகாலம்: 09.06 - 10.36 வரை
ஏகாதசி விரதம்

**துலாம்:** உங்கள் மனதில் புதிய ஞானம் பிறக்கும். செயல்களில் அதிக நன்மைபெற தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபார அபிவிருத்திப் பணி திருப்திகரமாக நிறைவேறும். பணப்பரிவர்த்தனை முன்னேற்றம் தரும். நண்பருக்கு இயன்றளவில் உதவுவீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் பேச்சில் அன்பும் பண்பும் கலந்திருக்கும். எதிர்வந்த சிரமம் மாறி அனுகூல பலன் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற மாற்றுத் திட்டம் செயல்படுத்துவீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து, உபரி பணவரவைப் பெற்றுத்தரும்.

**தனுசு:** உங்களின் அன்றாடப் பணி நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். மன அமைதியைப் பாதுகாப்பதால் சில நன்மை பெறுவீர்கள். அதிக முயற்சியால், தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**மகரம்:** உங்களின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். புதிய நுட்பங்களை அறிந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சில நடைமுறை மாற்றம் செயற்படுத்துவீர்கள்.

**கும்பம்:** உங்களுக்கு கடந்த காலத்தில் இடையூறு செய்தவரை பொது இடத்தில் சந்திக்க நேரிடலாம். பெருந்தன்மையுடன் நடந்து நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்:** உங்களின் தகுதி, திறமையை வளர்த்துக்கெள்வீர்கள். எதிர்மனப்பாங்கு உள்ளவர்களும், மறைமுகமாக உதவுகிற புதிய சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரம் செழித்துத் தாராளமான பணவரவை பெற்றுத்தரும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 5 | 6 | | 2 | 9 | |
| | | 6 | 4 | 1 | | 3 | 8 | |
| 3 | 4 | | | 9 | | | | |
| | | | 8 | 3 | | | 2 | |
| | 8 | 5 | | | | 4 | 7 | |
| | 3 | | | 7 | 5 | | | |
| | | | | 5 | | | 1 | 6 |
| | 5 | 9 | | 4 | 6 | 7 | | |
| | 1 | 3 | | 8 | 7 | 5 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 5 | 7 | 2 | 8 | 1 | 3 | 4 |
| 7 | 3 | 8 | 1 | 4 | 5 | 9 | 6 | 2 |
| 1 | 2 | 4 | 3 | 9 | 6 | 8 | 7 | 5 |
| 8 | 1 | 6 | 2 | 7 | 4 | 3 | 5 | 9 |
| 5 | 4 | 7 | 9 | 6 | 3 | 2 | 8 | 1 |
| 3 | 9 | 2 | 5 | 8 | 1 | 7 | 4 | 6 |
| 4 | 8 | 1 | 6 | 3 | 2 | 5 | 9 | 7 |
| 2 | 7 | 3 | 4 | 5 | 9 | 6 | 1 | 8 |
| 6 | 5 | 9 | 8 | 1 | 7 | 4 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## விஜயரட்ணம் விஜயந்தன்

**(SLT - TSA - Special Grade)**



வெள்ளவத்தையை வசிப்ிடமாக கொண்ட விஜயரட்ணம் விஜயந்தன் கடந்த 03.11.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தர்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் இராசபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயந்தி, விஜயானந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலா தீபன், பவாநந்தன், சுரேந்திரன், சுகிந்தன், சுதேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், வசீகரனின் சகலனும், அரு ணன், பிரதாயினி, ஆரணி ஆகியோரின் மாமனும், அன்பன், அபிமேனன், அபித்தா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.11.2012) சனிக்கிழமை "மகிந்த மலர்ச்சாலையில்" வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**CMC District - 5**
**Engineering Division,**
**No. 66, Manning Place,**
**Wellawatta.**

தகவல்:
குடும்பத்தினர்
சுரேந்திரன் (மச்சான்)
077 3839 683
521/3, Galle Road, Wellawatta.

(25135) (45.6.7)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07.07.1944

மறைவு
22.10.2011



அமரர்

## தம்பிஜயா கமலேஸ்வரன்

ஆண்டொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும், பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஈஸ்வரி இல்லம்,
இணுவில் மேற்கு, இணுவில்.

– குடும்பத்தினர்.

(25037) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் மீதான இன அழிப்புக்கு நீதி கோரும் பிரிட்டன் உலகத் தமிழர் மாநாடு ஆரம்பம்

## மூன்று நாள்கள் தொடர்ந்து நடக்கும்




இலங்கைத் தீவில் நடைபெற்ற இன அழிப்பு தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று ஆரம்பிக்கப் படவேண்டுமென்று வலியுறுத்தும் மாநாடு நேற்று முன்தினம் பிரிட்டன் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஆரம்பமாகியது.

மூன்று நாள்கள் தொடர்ந்து பல அமர்வுகள் மூலம் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பிரிட்டன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் லீஸ். கொட் ஆரம்பித்து வைத்தார்.

பிரிட்டன் தமிழர் பேரவையின் அனுசரணையுடன் நடைபெறும் மாநாட்டில் உலகம் முழுவதும் பரந்து வாழும் அனைத்து தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் உரையாற்றி வருகின்றார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பொன்னாடை போர்த்தி சிறப்பித்ததோடு, ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

அவர்களின் சிறப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட பிரிட்டன் நாடாளுமன்ற் உறுப்பினர்கள், இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுவதற்குப் பாடுபடுமாறு கேட்டுக் கொண்டனர்.

ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து, தீர்மானம் பற்றிய விவாதமும் இனிவரும் காலங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான விவாதமும் ஆரம்பமாகி இருந்தன.

## '13' ரத்துச் செய்ய அரசுக்கு முடியுமா? நாடாளுமன்றில் நிறைவேற்றிக் காட்டுங்கள்!

### சவால் விடுக்கிறார் சஞ்சீவ கவிரட்ண எம்.பி.

கொழும்பு,நவ.9

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து முடிந்தால் நாடாளுமன்றில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் காட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ண சவால் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாகவே 13 ஆம் திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஊடக கண்காட்சிகளை நடத்தாது, முடிந்தால் நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றிக் காட்டவும்.

13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாக அரசு, இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளிடம் வாக்குறுதி அளித்துள்ளது. இவ்வாறான ஒரு நிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச ஊடகங்களில் போலிப் பிரசாரம் செய்து வருகின் றார்.

விமல் வீரவன்சவின் கட்சி உறுப்பினர் ஒருவரே மத்திய மாகாண விவசாய அமைச்சராகக் கடமையாற்றி வருகின்றார். அண்மையில் கிழக்கில் நடைபெற்ற தேர்தலிலும் விமலின் கட்சி உறுப்பினர் போட்டியிட்டு அமைச்சு பதவியையும் பெற்றுக் கொண்டார்.

வாகனம் உள்ளிட்ட சகல வசதிகளையும் இவர்கள் அனுபவித்து வருகின்றனர். மாகாணசபைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆளும் எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்.

மாகாணசபை முறைமையினால் மாகாணங்களுக்கு நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்களை பகிர்வது குறித்து பேச்சு நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், விமல் வீரவன்ச போன்றவர்கள் போலியாக பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.- என்றார். (ச)

## பிரதம நீதியரசரின் முதுகில் 'சிலுவை'

### அவரை மீட்க அணிதிரள்வோம் அழைக்கிறார் விக்கிரமபாகு



கொழும்பு,நவ.9

அரசின்பழிவாங்கலுக்குள் சிக்கியுள்ள பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் முதுகில், குற்றப் பிரேரணை எனும் சிலுவை ஏற்றப்பட்டுள்ளது. அதிலிருந்து அவரைக் காப்பாற்ற மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணரத்ன தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற எதிர்க் கட்சிகளின் ஒன்றிணைந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏழை மக்களின் பணத்தை சூறையாட நினைக்கும் அரசின் 'திவிநெகும' சட்டவரைவு நிறைவேற்றும் முயற்சி நீதிமன்ற தீர்ப்பினால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டும்.

இந்த 'திவிநெகும' சட்டவரைவுக்கு எதிராக பிரதம நீதியரசர் கொடுத்த தீர்ப்பினால் இந்த அரசு கடும் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. இதனால், அவரைப் பழிவாங்கும் வகையிலேயே குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை மக்கள் ஆணைக்கு எதிரானதாகும். பிரதம நீதியரசரின் முதுகில் ஏற்றப்பட்டுள்ள குற்றப் பிரேரணை சிலுவையிலிருந்து மீட்டு அவரைக் காப்பாற்றும் பொறுப்பு மக்களுக்குரியது. அதற்காக மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.- என்றார். (ச)

## வெள்ளவத்தை, ஜாஎலவில் மீட்கப்பட்ட இருவர் உயிரிழப்பு

கொழும்பு,நவ.9

வெள்ளவத்தை மற்றும் ஜா-எல ஆகிய பகுதிகளில் இருந்து குற்றுயிருடன் மீட்கப்பட்ட இருவர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டு உயிரிழந்துள்ளனர்.

வெள்ளவத்தை - தெஹிவளை காலி வீதியில் உள்ள வங்கியொன்றுக்கு அருகில் விழுந்து கிடந்த நிலையில் ஒருவர் வெள்ளவத்தை பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டார். அவர் உடனடியாக களுபோவில வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஜா-எல தடுகமப் பகுதியில் விழுந்து கிடந்த நிலையில் ஒருவர் மீட்கப்பட்டு ஜா-எல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். இந்த இருவரது சடலங்களும் இதுவரை அடையாளம் காணப் படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## தலைமைத்துவ பயிற்சி பல்கலைக்கழக மாணவருக்கு

### இம்முறை மூன்று கட்டங்களாக



கொழும்பு,நவ.9

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை எதிர்வரும் 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தலைமைத்துவ பயிற்சி போன்றே இந்த முறையும் இடம்பெறும் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இந்தமுறை பல்கலைக் கழகத்துக்கு அதிக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் படுவதால் மூன்று கட்டங்களாக தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மாணவர்கள் தெளிவுபடுத்தப்படுவார்கள் என்று அவர் கூறினார். (ச)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவை ஒதுக்கி ஷிராணி தீர்மானம் எடுக்க வேண்டும்

### முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகிறார்




கொழும்பு,நவ.9

குற்றப் பிரேரணையை எதிர்நோக்கும் தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்று முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசார ணைகளுக்கு முகம் கொடுக்காமல் பிரதம நீதியரசர் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண் டும்.

தமக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் பொய்யானவை என்று நிரூபித்தல், பதவியை இராஜினாமா செய்தல் அல்லது வேறு பொருத்தமான ஒரு தீர்மானத்தை எடுத்தல் குறித்து ஷிராணி பண்டாரநாயக்க கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு புறம் உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணைகளை நடத்திக் கொண்டு, மறுபுறத்தில் நாடாளுமன்றில் விசாரணைகளுக்காக முன்னிலையாகும் நிலைமை சர்ச்சைகளை ஏற்படுத்தக் கூடும்.

இது நீதிமன்றக் கட்டமைப்பின் செயற்பாடுகளை மோசமாகப் பாதிக்கும். நான் அண் மையில் ஜனாதிபதியைச் சந்தித்து, பிரதம நீதியரசருக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடுமாறு கோரினேன். எனினும், குற்றச் சாட்டுக்கள் வலுவானவை என்பதனால் அவ்வாறு செய்ய முடியாது என்று ஜனாதிபதி கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளில் பங்கேற்காது வேறு நடவடிக்கை ஒன்றை பிரதம நீதியரசர் எடுத்தால் அது பொருத்தமானதாக அமையும்.

### 18 ஆண்டுகளில் 28 தேர்தல்களில் தோல்வியுற்றவருடன்...

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புகளைப் பேணும் திட்டம் ஏதும் இல்லை.

பிரவேசிக்க முயற்சிக்காத கதவு ஒன்றை மூடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். இந்த முயற்சி பிரயோசனம் அற்ற ஒரு முயற்சியாகும்.

கொள்கை ரீதியான போராட்டம் ஒன்றையே முன்னெடுக்கின்றேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்து நாட்டில் ஜனநாயகத்தை நிறைவேற்றுவதே எனது நோக்கமாகும். 18 ஆண்டுகளில் 28 தேர்தல்களில் தோல்வியடைந்த ஒரு கட்சித் தலைவருடன் இணைந்து செயற்படும் எண்ணம் கிடையாது.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுஜித் என்ரபிறைசஸ் - யாழ்ப்பாணம்

எமது கிளைக்கு பணம் வசூலிப்பாளர், விற்பனைப் பிரதிநிதி தேவை.

பணம் வசூலிப்பாளருக்கு சிங்களத்தில் உரையாடும் ஆற்றல் தேவை. மாதாந்த வேதனமாக ரூபா 35,000 தொடக்கம் ரூபா 45,000 வரை வழங்கப்படும். விற்பனை பிரதிநிதி மாதாந்தம் ரூபா 28,000 தொடக்கம் ரூபா 38,000 வரை சம்பாதிக்கலாம்.

(சி/2819) (10,6,7) **தொடர்பு: 021 227 0586**


# மரண அறிவித்தல்



## திருமதி தர்மரட்ணம் சிவபாக்கியம்

கிளிநொச்சி, கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மரட்ணம் சிவபாக்கியம் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் தர்மரட்ணம் (ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், செயலாளர் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகர் -செல்லமுத்து தம்பதியரின் மகளும், விநாயகசேந்திரம், விக்கினேஸ்வரன், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலேஸ்வரி, சிவராணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சந்திரபோஸ் (கனடா), கஸ்தூரி (லண்டன்), தர்மினி ஆகியோரின் பாசமிகு தாயும், சுசாரித்தா, கபிலன் ஆகியோரின் அன்பு மாமியும், மிருணா, அபிசேக், அனிஸ்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (11.11.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் (இல.80A, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா) நடை பெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 80 A, வியாசர் வீதி, தோணிக்கல்,
வவுனியா.077 6567 605, 077 0844 343

(24307) (45.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



பளை கத்தோலிக்க பங்குத் தந்தை
**அருட்பணி ஜேம்ஸ்நாதன்** அடிகளின் பாசமிகு தாயார்

## திருமதி அலெக்சாந்திரா அமிர்தநாயகம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோப்பளை கிழக்கு,
பளை.

(சி/2818) (10,6,7)

பங்கு மக்கள்,
புனித பேதுருவானவர் தேவாலயம்.

# துயர் பகிர்வு

## திருமதி அலெக்சாந்திரா அமிர்தநாயகம்

(முன்னாள் பிரதி அதிபர், யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்)

எமது புலோப்பளைப் பங்குத்தந்தை
**அருட்தந்தை ஜேம்ஸ்நாதன்**
அடிகளாரின் தாயார் விண்ணகம் எய்தியமையினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் தாயாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**கிளி/ பளை றோ.க.த. க. பாடசாலை**

(சி/4709)(45.6.7)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் இராசாத்தி



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப் பழையை வசிப்பிடமாக வும் கொண்ட நாகலிங்கம் இராசாத்தி நேற்றுமுன்தினம் (07.11.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கத் தின் அன்பு மனைவியும், சிவரஞ்சினி (பவுனா), காலஞ்சென்ற சீதா மற்றும் ரவீந்திரன், காலஞ்சென்ற ரசி மற்றும் வசந்தன் (சுவிஸ்), ஈசன், மோகன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் பொன்ராசா, ராணி ஆகி யோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதடவுடல் 3 மணியளவில் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேரம்பலம் வைரவகோயிலடி,
தெல்லிப்பழை. (25158) (2.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# 10 ஆவது வருட நினைவு அஞ்சலி



அன்னையின் மடியில்
30.08.1973

அமரர்

இறைவன் அடியில்
09.11.2002

## றொபேட் இராஜசேகரன் செல்வராஜா (போயிட்டி, இளவாலை)

இருபத்தொன்பது வயதினிலே சாலை விபத்தினிலே
இறைவனடி சென்றுவிட்ட எம் குடும்பத்தின் குலவிளக்கே
ஆண்டுகள் 10 ஆகியும் ஆறவில்லை ஐயா உம் பிரிவு
தன்தலைச்சன் மகனே தனக்குப் பின் தன் குடும்பத்தைக்
கட்டிக் காப்பான் என்ற எண்ணற்ற கற்பனைகளுடன் வாழ்ந்த தந்தை
கலைந்து போன கனவுகளுடன் 10 வருடம் ஆகியும் ஆறாத வலிவோடும்
மனம் நிறைந்த கவலையோடும் பொழுதொன்றை
ஆண்டொன்றாக எண்ணிக் கழிக்கின்றார் ஐயா
பெற்றவளோ தன் மகனை எண்ணி நிலாவிலே அவன் முகம்
வராதா என்ற ஏக்கத்துடன் காலையும் மாலையும்
கண்ணீரே தன் வாழ்க்கையென தினமும் உன் தவிப்பால் ஏங்குகின்றாள்.
கொடிய கெடுகாலன் உன்னைக் கொண்டு சென்ற காரணத்தைக்
கண்டறியமுடியாது தினமும் அலறுகின்றாள்.
இவையாவும் உன் காதில் கேட்கிறதோ யாம் அறியோம்.
பெரியண்ணா என்று அன்போடும் பாசத்தோடும் உறவு சொல்லி
அழைக்கமுடியாத வேதனையில் உன் உடன்பிறப்புக்கள் தவியாய் தவிக்கின்றனர்.
தோளோடு தோள் கொடுத்து உறவுகளைப் பலப்படுத்தவும்
உரிமையோடு உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும்
மூத்தமைத்துனர் இல்லையே என்ற ஏக்கத்துடனும் ஆறாத கவலையுடனும்
உன் மைத்துனர்மாரும் மைத்துனியும்
10 வருடங்களாய் மனதினுள் புலம்பி அழுகின்றனர் ஐயா
பெரியப்பா, பெரியமாமா என்றழைக்க முடியாமல்
மழலைகள் தவிக்கின்றனர் ஐயா!
அப்பா என்ற அன்பு உருவத்தை எங்கே காண்போம் என்ற உன் பிள்ளைகளின்
தவிப்பும் ஓலமும் உன் காதுகளில் கேட்கிறதோ யாம் அறியோம்.
ஆண்டுகள் 10 அல்ல நூறானாலும்
உன் அன்புப் பிரிவும் எம்மைவிட்டு அகலாது ஐயா
உன் ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலக்கவும்
இரு கையெடுத்து இறைவனை வேண்டுகின்றோம்.



இவர் ஆன்மா சாந்திபெற பின்வரும் இடங்களில் திருப்பலிகள் இடம் பெறுகின்றன.

- ★ போயிட்டி இளவாலை புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் நாளை (10.11.2012) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
- ★ நோர்வே (ஒஸ்லோ) சென்.கால்வாட் ஆலயத்தில் இன்று(09.11.2012) வெள்ளிக்கிழமை 5.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**அம்மா, அப்பா, சகோதரங்கள், பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத வலியைக் கொடுத்து வரும் வரி அறவீடுகள்

அமெரிக்காவில் மன்ஹட்டன் நகரத்தில் ஓர் ஆய்வுகூடம் இருக்கிறது. அங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர் ஒருநாள் பல விஞ்ஞானிகளையும் அறிஞர்களையும் அழைத்து ஒரு நிகழ்ச்சி செய்தார். மேடையின் நடுவே இரண்டு தராசும் மிகப் பெரியதொரு பலகை அலுமாரியும் வைக்கப்பட்டிருந்தன. மேடைக்கு ஆய்வாளர் ஒரு இளைஞனை அழைத்துவந்தார்.

முதலில் அலுமாரியின் நிறை அளக்கப்பட்டது. கிட்டத்தட்ட 200 கிலோகிராம் நிறையைக் காட்டியது தராசு. அடுத்து அந்த இளைஞனை தராசில் ஏற்றினார்கள். 65 கிலோகிராம் நிறையைக் காட்டியது தராசு. இதில் ஒன்றும் அதிசயம் இல்லை. அடுத்து நடந்ததுதான் எல்லோரையும் உறைய வைத்தது. அந்த இளைஞன் தராசின் ஒரு பக்கத்தில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்வதுபோல் இருந்தான் தராசின் மறுபக்கத்தில் அலுமாரி ஏற்றப்பட்டது.

சிறிது நேரத்தில் தராசின் நிறைகாட்டி உயரத் தொடங்கியது. தராசின் மறுபக்கத்தில் இருந்த அலுமாரி அந்தரத்தில் மிதந்தது. அதேவேளை இளைஞனின் நிறை 200 கிலோகிராமைத் தாண்டியது. பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். இப்படி ஒரு மனிதனால் திடீரென தன் நிறையை கூட்ட முடியுமா? அதுவும் மிகக் குறுகிய நேரத்தில் என்று அனைவரும் வினாவினார்கள்.

பௌதிகத்தில் இதற்கு விளக்கம் கொடுக்க முடியவில்லை. இப்படியாக விளக்கம் கொடுக்க முடியாமல் பல நிகழ்வுகள் எமது மண்ணிலும் இப்பொழுது இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த புதன்கிழமை யாழில் உள்ள பிரபல சந்தையொன்றுக்கு அதிகாலை வேளை மரக்கறி வாங்கச் சென்றேன். சேறும் சகதியுமாக இருக்கும் அந்தச் சந்தைக்குள் கால் எடுத்து வைக்க முடியாமல் ஒவ்வொரு அடியையும் பார்த்து பார்த்து எடுத்து வைத்தேன். ஒருவாறு சந்தைக்குள் உள்நுழைந்தேன். அங்கே வியாபாரிகள் தமது உற்பத்திப் பொருள்களுடன் வேர்க்க விறுவிறுக்க வந்துகொண்டிருந்தார்கள். சைக்கிள்களில் உற்பத்திப் பொருள்களை கொண்டு வருபவர்களைப் பார்த்தால், மனம் இரங்காத பலரது மனமும் இரங்கும். அந்தளவுக்கு சுமையை சுமக்கிறார்கள்.

சந்தைக்குக் கொண்டு வந்த பொருள்களை தராசில் அளவிடுகிறார்கள். தராசில் அளவிடும்போது மட்டும் விரைவாக அளவிடும் திறமை உற்பத்திப் பொருள்களை அளவிடுபவர்களிடம் இருப்பதைப் பார்க்கிறேன். விவசாயிகள் பல கஷ்டத்தின் மத்தியில் விவசாய தொழிலை மேற்கொள்கிறார்கள். பாடுபட்டு விளைந்த பொருள்களை சந்தையில் கொடுத்து உழைத்த உழைப்பினை ஈடுகட்டி சிறிய அளவாவது இலாபம் பெறலாம் என்ற மகிழ்ச்சியில் வருகிறார்கள்.

ஆனால் அவர்களின் உற்பத்திப் பொருள்களை அளவிடும்போது அளவிடுபவர்கள் கழிவு என்று சொல்லி பெருமளவில் கழிக்கிறார்கள். வியாபாரிகளால் என்ன செய்ய முடியும். கோடிக் கணக்கில் இலாபம் பெறும் போதும் கொள்ளையடிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களும் இருக்கிறார்கள். இவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்று எப்படி நம்ப முடியும்.

அங்கே ஒருவர் சந்தைக்கு கொண்டு வந்த உற்பத்திப் பொருள்களின் நிறையை அளவிட்டுக் கொடுத்துவிட்டு, அந்தக் கூட்டத்தை விட்டே விலகி ஓரமாக வந்து நின்றார். முகத்தில் வழியும் வியர்வையை துண்டால் துடைத்துக் கொண்டிருந்தார். அவரின் அருகில் செல்கிறேன். ''என்ன ஐயா கூடுதலாக வேர்க்குதோ?'' என்றேன். அதற்கு அவரோ ''இந்தத் தொழிலைச் செய்து பார்த்தால் தான் தெரியும். போற போக்கைப் பார்த்தால் விவசாயத் தொழிலையே இவங்கள் அழித்துவிடுவாங்கள் போலிருக்கிறது'' என்றார். ''யார் அண்ணை'' என்று கேட்டேன். அதற்கு அவரோ ''உந்த அதிகாரிகள்தான்'' என்று சொன்னவர் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, சந்தையில் உள்ள குப்பைகளைக் கொட்டத் தொடங்கினார்.

விவசாயிகள் சந்தைக்குக் கொண்டு வரும் உற்பத்திப் பொருள்களுக்கு 3 வீதம் வரி அறவிடப்படும் என்று சந்தையில் எழுதிப் போடப்பட்டிருக்குது. ஆனால் கூடுதலான வரி அறவிடப்படுகிறது. இலத்திரனியல் தராசைப் போடும்படி எத்தனை முறை முறையிட்டோம். இலத்திரனியல் தராசைப் போட்டால் நிறையை அளவாகக் காட்டிவிடும் என்று பயப்படுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் வரி அறவிட்டார்கள், விடுதலைப் போரை தொடர்ந்து நடத்துவதற்காக. ஆனால் இப்போது எங்கட இடத்தில வரி அறவீடு என்று மக்களுக்கு வலியைக் கொடுக்கிறார்கள். அந்த வரி அறவீட்டுக்கான பயன் ஏதும் மக்களுக்கு கிடைப்பதில்லை. இந்தச் சந்தையைப் பார்த்தால் தெரிந்துவிடும். குரங்கின் கையில் பூமாலை போல சந்தைக்கு பொறுப்பானவர்கள் செயற்படுகிறார்கள்.

தராசு எடை போடுவதற்கு மட்டும் பயன்படும் கருவியாகும். அது ஒரு இயந்திரம். அதற்கு விருப்பு, வெறுப்பு கிடையாது. தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடு கிடையாது. எடை சரியாக இருந்தால் அது கடமையைச் செய்யும். உண்மையான எடையைக் காட்டும்.

தராசின் ஒரு பக்கத்தில் உள்ள தட்டில் 100 கிராம் தங்கத்தையும், இன்னொரு தட்டில் 1 கிலோ இரும்பையும் வையுங்கள். ஒரு கிலோ இரும்பை விட 100 கிராம் தங்கத்தின் விலை அதிகம். தரத்திலும் உயர்ந்தது. இரும்பை விட மக்கள் தங்கத்தையே விரும்புபவர். இருப்பினும் தராசு தங்கத்துக்காக தாழ்ந்து கொடுக்குமா? சலுகை காட்டுமா? முடியாது. ஏன்? தராசுக்குத் தட்டில் இருக்கும் பொருளைப் பற்றிக் கவலையில்லை. அதன் எடைதான் முக்கியம். அதை வைத்துத்தான் முடிவை வெளிப்படுத்தும்.

இந்த உணர்வில்லாத இரும்பு செய்யும் வேலையை உணர்வுள்ள பொறுப்புள்ளவர்கள் செய்வார்களா? சந்தை தொடர்பில் கண்டும் காணாமலும் தாம் நினைத்தபடி நிர்வாகத்தை நடத்துகிறார்கள். எதிர்காலத்தில் இந்தச் சந்தையின் பிரச்சினை பூதாகரமாக மாறித் தீர்க்க முடியாத பிரச்சினையாக மாறிவிடும். இதனை அறியக் கூடிய வகையில் இவர்கள்

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

மூளை செயற்படுமா? அல்லது பணத்துக்குப் பின்னே மண்டிக் கிடக்குமா?

சந்தைக்குப் பொறுப்பான பிரதேச சபையால் என்னத்தை செய்ய முடியும்? தராசு முள் நேராக ஒரே நிலையில் இருக்க வேண்டுமானால், அதன் இரண்டு பக்கத் தட்டுக்களும் ஒரே பளு உள்ளதாக இருக்க வேண்டும். தட்டுக்களில் உள்ள பளு கூடுதலாகவோ, குறைவாகவோ இருந்தால் நேராக நிற்க முடியாமல் தராசு முள் ஆடிக் கொண்டிருக்கும். அதே போல மனம் நேர்ப் பாதையில் செல்லுமானால் மனதின் அடித்தளத்தில் விருப்பு, வெறுப்பு ஏதுமின்றி தமது வேலையைச் செய்ய முடியும். இல்லாதுபோயின் ஏற்றத்தாழ்வு இருப்பின் மனமும் அலைபாயும்.

தராசின் ஒரு தட்டில் ஆசைகள் அனைத்தையும் வைத்து, மறு தட்டில் கடமையை வைத்துப் பார்த்தால் கடமையே பளுவானது. இதனை உணர்வார்களா? பொறுப்பு வாய்ந்தவர்கள். உணராது போயின் இந்தச் சந்தையின் பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வராது என்பது உண்மை.


## விநியோகஸ்தர் விற்பனைப் பிரதிநிதி - யாழ்ப்பாணம்.
## Distributor Sales Representative - Jaffna

Motul Lubricants இன் யாழ்ப்பாண விநியோகஸ்தரான நாராயணா கட்டடப் பொருள் வர்த்தக நிலையம் (NARAYANA HARD WARES TRADER) மேற்படி பதவிக்காக ஆர்வமும் உற்சாகமும் வேண்டிய தகுதியும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

வேண்டிய தகைமைகள்:

* விண்ணப்பதாரி யாழ்ப்பாணப் பிராந்தியத்திலிருந்து செயற்படக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
* விற்பனையிலும் சந்தைப்படுத்தலிலும் (Sales & Marketing) அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
* சிறந்த விற்பனை நடவடிக்கைகள் மூலம் அதிக வாடிக்கை யாளர்களைக் கவரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
* தமிழிலும் சிங்களத்திலும் சிறந்த தொடர்பாடல் திறன் கொண்ட வராக இருத்தல் வேண்டும். (ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப் படும்)
* விண்ணப்பதாரி செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
* தெரிவு செய்யப்படுபவர் கவர்ச்சிகரமான சம்பளத்துக்கும் சிறந்த தொழில்வாய்ப்புக்கும் உரித்துடையவராவார்.

சகல விவரங்களையும் உள்ளடக்கிய உங்களது சுயவிவரக்கோவையினை இந்த விளம்பரத்திகதியிலிருந்து 10 நாள்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர்,
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (F/4710) (2-6.7)


## 'பேர்ஸ்' தவறவிட்டவர் பெற்றுக் கொள்ளவும்

தென்மராட்சி,நவ.9

தென்மராட்சி பிரதேச செயலக வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய 'பேர்ஸ்' பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பேர்ஸில் காணப்பட்ட விவரங்களின் பிரகாரம் இந்த 'பேர்ஸ்'வயாவிளான் சுந்தரபுரத்தைச் சேர்ந்தவருடையது எனத் தெரிவிக்கப்பட்டது. பேர்ஸினைத் தவற விட்டவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (3-9)

## விழிப்புணர்வுத் திரைப்படக் காட்சி

தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொதுநூலகம் நடத்தும் நூலக வலுவூட்டல் நிகழ்வில் சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு திரைப்படக் காட்சிஇன்றுவெள்ளிக்கிழமை [illegible] 10 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(3-14)


# 2 ஆம் ஆண்டு நினைவுநாள்



மலர்வு
06.12.1932
உதிர்வு
01.11.2010

திதி:- தசமி

அமரர்
**செல்லம்மா செல்லத்துரை**

அன்பின் திருவுருவே
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
உங்கள் நினைவலைகளுடன்
நீங்கள் அருகில் இருக்கும் உணர்வோடு
அவனியில் வாழ்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
நெல்லியடி. குடும்பத்தினர்.
(3687/2.6.7)



# மரண அறிவித்தல்

## வேலன் சின்னம்மா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பழம்றோட் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சின்னம்மா நேற்றுமுன்தினம் (07.11.2012) புதன்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திவேலன் - நாச்சார் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வேலனின் அன்பு மனைவியும், நடேசு (வவுனியா), கதிரமலை (தாய்லாந்து), நாகரத்தினம், தங்கரத்தினம், சிவனேசன் (ஜேர்மனி), குணலிங்கம் (லண்டன்), இராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அருளம்மா, கனகேஸ்வரி (தாய்லாந்து), அமிர்தராசா (ரிங்கர்), கனகரத்தினம் (சுந்திரன்), மலர் (ஜேர்மனி), சாந்தி (லண்டன்), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், யுகுனஜீவி, யுகன், யுகமலா, றயன், றணித்தா, ருஷன், சுமன், நிரோ, நிலானி, நிஷாந்தி, செல்வி, சுதன், விஜி, கோமதி, றஜனி, ஹசி, வினோத், கீர்த்தனா, ஷாளினி, பரத், டிலக் ஷன், டினேஸ், லிஷான்ரி, அஷான்ரி ஆகியோரின் பேர்த்தியும், சஷ்மிதா, கம்ஷி, ஷரோன், ஷாம்ஸன், ரொஷான், அஜய், தக்ஷிகா, ஷமீரா, ராகுல், வற்சிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 11.11.2012 ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காக்கை தீவு இந்து மயானத்துக்கு முற்பகல் 11 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம்றோட்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(25144)(6.7.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருகிறது பேஸ்புக் கைத்தொலைபேசி




சமூக வலைத் தளங்கள் மத்தியில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட பாவனையாளர்களைத் தன்னகத்தே கொண்டு அசைக்க முடியாத அரசனாக பேஸ்புக் திகழ்கின்றது. இத்தளமானது HTC நிறுவனத்துடன் இணைந்து தனது உற்பத்தியில் உருவாக்கப்பட்டு வரும் கைப்பேசிகளை அறிமுகப்படுத்துவதற்கு தயாராகி வருகின்றது. Opera UL எனும் பெயரைத் தாங்கி வரவுள்ள இக்கைப் பேசிகள் Android 4.1.1 Gelly Bean இயங்கு தளத்தைக் கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டு வருகின்றன. தவிர இந்தக்கைப்பேசிகள் 1280 X 720 Pixels Resolution கொண்ட HD தொடுதிரையை உள்ளடக்கியதாகவும், 1.4GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor உம் கொண்டுள்ளன. மேலும் இவற்றில் Adreno 305 graphic தொழில் நுட்பமும் உள்ளடக்கப்படு கின்றமை குறிப் பிடத்தக்கது.

## ஸ்கைப் மூலம் வைரஸ்

கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களை பரப்பிவிடும் Hackers, தற்போது Skype Program-இன் புதிய வசதி மூலம் வைரசை பரப்பி வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

Skype&ß Message-ல் "lol is this your new profile pic?" என்ற செய்தி வந்து, அதனை நீங்கள் கிளிக் செய்வதன் மூலம் வைரஸ் உங்கள் கணினிக்குள் புகுந்து விடுகிறது.

இதன்மூலம் Hackers, குறித்த கணினியை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க முடியும். இது குறித்து ஆய்வாளர்கள், தாங்கள் இந்த வைரசின் தாக்கம் குறித்து அறிந்திருப்பதாகவும், விரைவில் இதற்கான தீர்வு கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் அண்மையில் வெளியான புதிய Skype பதிப்பை பயன்படுத்துமாறும் பயனாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




## அறிமுகமாகியது Galaxy Premier


முன்னணிக் கைப்பேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான Samsung ஆனது தனது உருவாக்கத்தில் வெளியாகி பிரபலமடைந்து Galaxy S III கைபேசியின் உருவத்தை ஒத்த வடிவமைப்பைக் கொண்ட Galaxy Premier கைப் பேசிகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்தக்கைபேசிகள் 4.65 அங்குல அளவுடையதும் 1280 X 720 Pixels Resolution உடைய Super AMOLED தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் TI OMAP 4470 வகையைச் சார்ந்த 1.5GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor-ஐயும் கொண்டுள்ளது.

மேலும் இவை Android 4.1 GellyBean இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் பிரதான நினைவகமாக 1GB RAM காணப்படுகின்றது.

இவற்றுடன் 8 Mexapixels உடைய பிரதான கமராவும், வீடியோஅழைப்புக்களை மேற்கொள்வதற்காக 1.9 Mexa pixels உடைய துணைக்கமரா ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.

## ஜிமெயிலின் புதிய வசதி




மின்னஞ்சல் சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழ்கின்றது ஜிமெயில். ஜிமெயிலானது சில தினங்களுக்கு முன்னர் புதிய மின்னஞ்சலை உருவாக்கும் பக்கத்துக்கு (Compose Mail) Pop up விண்டோ மூலமான புதிய பயனர் இடைமுகத்தை அறிமுகப்படுத்தியிருந்தது.

மேற்படி புதிய வசதியின்மூலம் பயனர்கள் புகைப்படங் களை இலகுவாக இணைக்கக்கூடியதாகக் காணப்படுவதுடன், மின்னஞ்சலை பெறுபவர்களுக்கான முகவரியைச் செலுத்தும் போது அவர்களின் புகைப்படங்களும் தென்படக்கூடியவாறு அமைந்துள்ளது.மேலும் Carbon Copy மற்றும் Blind Carbon Copy ஆகியவற்றுக்கான மின்னஞ்சல் முகவரிகளை உட்செலுத்தும்போது Drag and Drop முறையை பயன்படுத்தக் கூடிவாறு காணப்படுதலும் விசேட அம்சமாகும்.

இதனைச் செயற்படுத்துவதற்கு உங்கள் Gmail கணக்கைப் பயன்படுத்தி உள்நுழைந்து Compose பொத்தானை அழுத்தவும். அப்போது தென்படும் new compose experience எனும் இணைப்பின் மேல் கிளிக் செய்யும்போது தோன்றும் விண்டோவில் Got it பொத்தானை அழுத்தவும்.

தற்போது ஜிமெயிலின் புதிய Compose Mail விண்டோவினைப் பெற்றிருப்பீர்கள். மீண்டும் பழைய விண்டோவைப் பெறுவதற்கு புதிய விண்டோவின் வலது கீழ்ப்பகுதியில் காணப்படும் அம்புக்குறி வடிவத்திலுள்ள பொத்தானை அழுத்தி Switch back to old compose என்பதைத் தெரிவு செய்யவும்.

## வீடியோ கோப்பு வகைகளை மாற்ற...

வீடியோ கோப்புக்களின் அளவு மற்றும் கோப்பு வகைகளை தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கு Video Converter மென்பொருள்களின் பயன்பாடு இன்றியமையாததாகும்.

தற்போது கைபேசிகள் மற்றும் Tablet போன்றவற்றில் நிறுவி பயன்படுத்தக்கூடியவாறு Ace Video Converter எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

iPad, iPhone, iPod, Android tablet , Google Nexus, Samsung Galaxy Tab, Galaxy Note, Galaxy S, Sony Xperia, HTC Desire, Asus Eee Pad Transformer போன்ற ஸ்மார்ட் கைப்பேசிகளிலும் பயன்படுத்தக்கூடியவாறு காணப்படுகின்றது.

மேலும் குறித்தமென்பொருளில் AVCHD, TS, TOD, AVI HD, M2TS, AVI, MP4, WMV, 3GP, DVD, VOB, MPEG, DVR&MS, MKV, FLV போன்ற வீடியோ கோப்புக்களை பயன்படுத்தக் கூடியவாறு காணப்படுகின்றது.



## வந்துவிட்டது iPad mini

கணினி உலகில் புரட்சியை ஏற்படுத்திய அப்பிள் நிறுவனமானது தனது iPad உற்பத்தியில் iPad mini எனும் நான்காம் சந்ததி Tablet-ஐ நீண்ட எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தியுள்ளது.

முன்னைய iPad சாதனங்களை விடவும் பருமனில் சிறியதாகக் காணப்படும். இவற்றின் அகலமானது 5.3 அங்குலங்களாகவும், நீளமானது 7.87 அங்குலங்களாகவும் காணப்படுகின்றது. மேலும் இவற்றின் தடிப்பானது 7.2 மில்லி மீற்றர்களாகவும் அமைந்துள்ளன.

அப்பிள் இறுதியாக அறிமுகப்படுத்திய iOS 6 இயங்குதளத்தில் செயற்படக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ள குறித்த iPad mini, 768 x 1024 Pixels Resolution உடையதும் 7.9 அங்குல அளவுடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளன.

இவைதவிர 2G,3G, மற்றும் 4G வலையமைப்புத் தொழில்நுட்பங்களில் செயற்பட வல்லவை. மேலும் Dual core 1 GHz Cortex A9 Processor, 512 MB RAM, 5 Mexapixels உடைய பிரதான கமெரா மற்றும் 1.2 Mexapixels கொண்ட துணைக் கமரா ஆகியவற்றையும் கொண்டுள்ளன.

## புகைப்படங்களை அழகான வீடியோவாக மாற்றுவதற்கு...

உங்களுக்கு விருப்பமான புகைப்படங்களை Slide.ly என்ற தளம் அழகான வீடியோவாக மாற்றித் தருகிறது. இத்தளத்தை ஓபன் செய்ததும், அழகான புகைப்பட வீடியோக் காட்சிகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு நீங்களும் உருவாக்குவதற்கு, முதலில் பேஸ்புக் தளத்தில் உள்நுழைய வேண்டும். அதன் பின் Create New One என்பதை கிளிக் செய்து, உங்களுக்கு தேவையான புகைப்படங்களைத் தெரிவு செய்து கொள்ளவும்.


பின்னர் பொருத்தமான பின்னணி இசையைத் தெரிவு செய்து விட்டால், உங்களுக்கான வீடியோ உருவாக்கப்படும்.

இதனை பேஸ்புக், டுவிட்டர் மற்றும் மின்னஞ்சல் மூலம் நண்பர்களுக்கு பகிர்ந்து கொள்ளலாம்.

மேலும் இந்த வீடியோ ஏற்கனவே உள்ள தொகுப்புகளின் பட்டியலில் இணைந்து விடும். இதனை மற்றவர்களும் பார்த்து கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

புகைப்படங்களாக பார்ப்பதையும், பகிர் வதையும் விட இது போல புகைப்பட வீடியோ தொகுப்பாக பார்த்து ரசிக்க முடிவது மிகவும் சுவாரஸ்யமானது தான்.

## விண்டோஸ் - 8 இற்காக வருகிறது புதிய கணினித் திரை




கடந்த வாரம் மைக்ரோசொப்ட் தனது புதிய இயங்கு [illegible] தொடர்ந்து [illegible] இந்த புதிய [illegible] 8 இயங்குதளத்தில் இயங்கும் புதிய சாதனங்களைக் களமிறக்கிக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் தற்போது விண்டோஸ் 8 இயங்குதளத்திற்காக ஒரு புதிய மொனிற்றரைக் களமிறக்கி இருக்கிறது.

இந்த புதிய மொனிற்றருக்கு டச் 10 மொனிற்றர் (Ci83) என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. 23 இன்ச் அளவில் வரும் இந்த மொனிற்றரை 10 விரல்களாலும் இயக்கக் கூடிய வகையில் மல்டி தொடுகை வசதி கொண்டிருக்கிறது.

மல்டி தொடுகை வசதி கொண்ட இந்த புதிய பெரிய மொனிற்றர் இதைப் பயன்படுத்துவோருக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தரும் என்று எல்.ஜியின் துணை இயக்குநர் ஜே.ஜே. லீ கூறியிருக்கிறார். ஏனெனில் ரேப்லெட்டுகள் மற்றும் ஸ்மார்ட்போன்களில் இருக்கும் மல்டி தொடுகை திரைகள் ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. அந்த வகையில் குறித்த புதிய பெரிய தொடுகை வசதி கொண்ட மொனிற்றர் கணினி ரசிகர்களைப் பெரிதும் கவரும் என்பதில் ஐயமில்லை. இந்தத்திரையில் கீபோர்டு உள்ளதால் இந்த மொனிற்றரிலேயே 10 விரல்களாலும் டைப் செய்ய முடியும். மேலும் இந்த மொனிற்றர் பென் இன்டர் பேஸையும் செயற்படச் செய்கிறது.

மேற்படி மொனிற்றர் இசை அப்ளிகேசன்களையும் கொண்டிருக்கிறது. குறிப்பாக வெர்ச்சுவல் பியானோ, சின்தசைஸர் மற்றும் நரம்பிசைக் கருவிகளையும் இயங்கச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கருப்பையா கனகரத்தினம் (கணேஷ்)

(ஆனைக்கோட்டை)

நவாலி வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கருப்பையா கனகரத்தினம் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கருப்பையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாலஷ்மியின் அன்புக் கணவரும், ஹேமலோஜினி (உதவிப்பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு), பரதலோஜன், கமலலோஜன், பரதலோஜினி (லண்டன்), ஹரிஹரலோஜன், அகழ்யா, பிருந்தா (மாணவி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமரன், கஜந்தினி (ஆசிரியை), நளாயினி சந்திரபவன், ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனும் விக்னேஷ், ஹரிஸ், நகுல் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவசோதி, பரமநாதன் (பிரான்ஸ்), சிவபாதம் (பிரான்ஸ்), பரஞ்சோதி (பிரான்ஸ்) சரோயினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (25169)(3.15)

தகவல்:
குடும்பத்தினர்.

## கார்த்தியேசு சின்னாச்சி



இணுவில் தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தியேசு சின்னாச்சி நேற்று முன்தினம் (07.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆண்டி - சிதம்பரத்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்தியேசுவின் அன்பு மனைவியும், இரத்தின சிங்கம் காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், இராசமணி மற்றும் இராஜேஸ்வரி, சிவராசா, துரைசிங்கம் (சிவா), ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கற்பகம், பொன்னு, முருகை யா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னரத்தினம், பூபதி, இந்திராணி, பவாணி, இரத்தினம், காலஞ்சென்ற செல்வராஜா ஆகியோரின் மாமியும், தவச்செல்வம், உஷாநந்தினி, காலஞ்சென்ற செல்வகுமார், சிவகுமார் மற்றும் அருந்தாஸ், தவேஸ்வரன், அருள்மலர் காலஞ்சென்ற அருட்செல்வி, கௌசலா, சிவதாஸன், கௌரி, கலைச்செல்வன், காந்தரூபன், கஜந்தன், கஜந்தினி, கபிலன், துஷானா, சாருஜா, சாருஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை பி.ப 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு. (25173)(3.14)

தகவல்:
பிள்ளைகள்.

## கைவிரல் அடையாளம் பெறும் ஏற்பாடிருக்கவில்லை

கிளிநொச்சியில் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் உள்ளடங்குகின்ற அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு எதுவும் இடம்பெறவில்லை.

கடந்த மாதம் 26 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் 3ஆம் பக்கத்தில் பிரசுரமான இது தொடர்பான செய்தியில் ''கிளிநொச்சிப் பிரதேசத்தில் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் சேமலாப நிதித்திட்டம் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி நவம்பர் முதலாம் திகதி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பொது மாநாட்டு மண்டபத்தில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறும்'' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இது தவறாகும்.

மேலும் குறிப்பிட்ட நாளில் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் எதனையும் தாம் மேற்கொள்ளவில்லை என கிளிநொச்சி தொழில் அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தரான கே. பிரசன்னா உதயனுக்கு அறிவித்துள்ளார்.

(ஒ-க)

## கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 9

சங்குவேலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் உள்ள ஒரு கிணற்றிலிருந்து முதியவரொருவரின் சடலமொன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் தவராசா (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை 5:30 மணியளவில் தண்ணீர் எடுக்க கிணற்றுக்குச் சென்ற உறவினர்கள் குறித்த சடலம் மிதப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

(16-86)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## கிழக்கர் அம்பலவாணர் திருஞானசம்பந்தன்



காரைநகர் கோவனத்தைப் பிறப்பிடமாகவும், இல.31, மணல் தரைலேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், கொண்ட அம்பலவாணர் திருஞானசம்பந்தன் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, மணல்தரை லேன்,
கந்தர்மடம். (25188)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிருஷ்ணபிள்ளை அன்னலட்சுமி



அங்கிலிப்பாய் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ண பிள்ளை அன்னலட்சுமி நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம், சொர்ணலிங்கம், சத்தியபாமா, புஸ்பலதா ஆகியோரின் அன்புத் தாயும், கிருஸ்ணராஜ் (கனடா), கிருஷ்சாந் (கனடா), கோகுலவர்த்தனி, பவேந்திரன் (கொழும்பு), நிஷாந்தி, நிதர்சன், நிசாந் ஆகியோரின் பேர்த்தியும், மனோன்மணி, திலகவதி, பவானந்தம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அங்கிலிப்பாய், இணுவில் கிழக்கு. (25170)(3.14)

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கனகசுந்தரம்

(ஓய்வு பெற்ற முதலியார் மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை)



புலோலி மேற்கு தம்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் கனகசுந்தரம் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பூபதியின் (முன்னாள் அதிபர் -வட இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், வாசனின் பாசமுள்ள தந்தையும், அமிர்தவல்லி, டாக்டர் மகேசன் (U.K) அழகேசன் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்- வீடமைப்புத் திணைக்களம்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், மகேஸ்வரியின் அன்பு மாமனும், ஹம்சவாசினியின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2012) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி மேற்கு,
தம்பசிட்டி,
பருத்தித்துறை. (23693)(9.14)

தகவல்:
வாசன் (மகன்)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12 ★ 03 ★ 1958



மறைவு
26 ★ 09 ★ 2012

## கதிரவேலு இராசேந்திரம் (தெய்வம்)

(வினோ பஸ் உரிமையாளர்)

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம். என்றும் இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அப்பா

கடந்த (26.09.2012) புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை கதிரவேலு இராசேந்திரம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற உள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

...லை ரோட்,
சித்தங்கேணி. (25175)(9.14)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் அம்பலவாணர் சிற்றம்பலம்



"வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."
"சித்த மலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்
எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே."

எல்லோராலும் அன்பாகநேசிக்கப்பட்ட **அம்பலவாணர் சிற்றம்பலம்**
அவர்களின் பிரிவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் இணைந்துகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
சந்நிதி முருகனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**நா. சங்கர் குடும்பம் – சுவிஸ்,**
**யெ.சந்திரன் குடும்பம் – சுவிஸ்.**

(25160)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு தமிழர்கள் மத்தியில் வாக்கெடுப்பு

## ஸ்டாலின் வலியுறுத்தல்

லண்டன், நவ 09

இலங்கையில் அரசியல் தீர்வுகாண அங்குள்ள தமிழர்களின் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

லண்டனில் நாடாளுமன்ற கட்டடத்தில் பிரிட்டன் தமிழர் பேரவை சார்பில் உலக தமிழர் மாநாடு நடத்தப்பட்டது.

மாநாட்டுக்கு அழைப்பின் பேரில் தி.மு.க.சார்பில் அதன் பொருளாளர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, அமைப்பு செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க.வழக்கறிஞர் இராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்ற ஸ்டாலின் பேசும்போது,

டெசோ மாநாட்டு தீர்மானங்களை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரிடம் வழங்கி இருக்கிறோம். இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் என்று தெரிவித்தார்.

இலங்கையில் அரசியல் தீர்வுகாண அங்குள்ள தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (த)

# 25 வருடங்களுக்குப் பின் லக்ஸபான மின் விநியோகம்

## வடமராட்சி, வடக்கு, தெற்குக்கு

வடமராட்சி, நவ.9

சுமார் 25 வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் வடமராட்சி வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கு லக்ஸபான மின்விநியோகம் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் பிற்பகல் 12.45 மணியளவில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தப் பகுதிகளுக்கான மின்விநியோக நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச மின்பொறியியலாளர் எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் இத.ஜெயசீலன், யாழ்.மாவட்ட மின்பொறியியலாளர் என். அருளானந்தன், வடமராட்சி பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரும் பங்குபற்றினர். (3-8)

# நீதியரசர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க மீது முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளை அவரது சட்டத்தரணிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவரின் சட்டத்தரணி சார்பில் கொழும்பில் இருந்து செயற்படும் நீலகண்டன் மற்றும் நீலகண்டன் நிறுவனத்தின் மூலம் ஊடகங்களுக்கு விரிவான அறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நீதியரசர் தனது பெயரில் வைத்திருந்த அனைத்து வங்கிக் கணக்குகள் குறித்த விபரங்களையும் அரசிடம் சமர்ப்பித்திருந்தார்.

எனவே பிரதம நீதியரசரின் வங்கிக் கணக்குக்கு திடீரென 34 மில்லியன் ரூபா வந்ததாக தெரிவிக்கும் செய்திகள் அடிப்படையற்றவை. உண்மையில் நீதியரசரின் கணக்கில் 27 மில்லியனே உள்ளது. அந்தப் பணம் கூட நீதியரசரின் சகோதரி கொழும்பில் வீடு ஒன்றை வாங்குவதற்காக ஷிராணியின் பேரில் வைப்பில் இட்ட தொகையே இது- என்றுள்ளது. (ங-16)

## பிரதேச சபை உறுப்பினர் காலமானார்

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பொன்னையா திருச்செல்வம் தனது 65 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் நீண்டகாலமாக உப தபாலதிபராகக் கடமையாற்றிய இவர், கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு அதிக விருப்புவாக்குகளுடன் பருத்தித்துறைப்பிரதேச சபையில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## தெரிவுக்குழு குறித்துத் தீர்மானிக்கவில்லை

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ம. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குற்றப்பிரேரணையை விசாரணை செய்ய அமைக்கப்படவுள்ள இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குவில் 11 பேர் அங்கம் வகிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில், ஆளும் கட்சி சார்பில் 7 பேரும் ஐ.தே.கட்சியின் சார்பில் 2 பேரும், த.தே.கூட்டமைப்பு மற்றும் ஜ.தே.கூ சார்பில் தலா ஒவ்வொருவரும் உள்ளடக்கப்படுவர்.(த)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் துரைராஜா

காரைநகர் களபூமி கரப்பிட்டிந்தனையைப் பிறப்பிடமாகவும், பலகாடு ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் புறோட் S.M கேணியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துரைராஜா நேற்று (08.11.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- தெய்வானை தம்பதியரின் மகனும், தம்பையா சீதேவிபிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், தவேந்திரராஜா (ராசன்- கொலண்ட்), பத்மராஜா (ரவி- கிளிநொச்சி தமிழ் கங்கை காட்வெயார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கந்தையா, தியாகராஜா ஆகியோரின் சகோதரனும், யாழினி, மஞ்சுளா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.11.2012) வியாழக் கிழமை நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.M கேணியடி, புதுறோட்,
காரைநகர்.

தகவல்: து.பத்மராஜா
(ரவி) மகன்.

## பொதுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆகவே தகுதியுடைய அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (23)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பரமநாதன் சோதிப்பிள்ளை
(மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மந்துவில் பிரிவு குடும்ப நல சேவை உத்தியோகத்தர் திருமதி வசந்தராணி ரதிமோகன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி பரமநாதன் சோதிப்பிள்ளை அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(c/4721)(6.9)

சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை, சாவகச்சேரி.

சுகாதார வைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி திரேசா லீனஸ்

சென்-ஜேம்ஸ் வீதி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேசா லீனஸ் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை மரியான்-செபமாலை மரியை தம்பதியரின் அன்பு மகளும், கிறிஸ்ரோஸ்ரர் -யூலிசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், செபமாலை உஸ்தினம்மாவின் பெறாமகளும், கி.லீனஸின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், யூட்சி (நிகழ்ச்சி திட்ட உதவியாளர், பிரதேச சபை ஊர்காவற்துறை), ஈவோன் (உப அஞ்சல் அலுவலர், நாராந்தனை, தெற்கு) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற பிரான்சிஸ்சேவியர் (ஓய்வு பெற்ற வைத்தியர்), மற்றும் பிரேமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தஸ்நெவிஸ், யேசுதாசன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், திருமதி றோசா (கனடா), அருட்சகோதரி தெகிளா (தி.கு), ஸ்ரனிஸ்லொஸ், திருமதி அன்னராணி, திருமதி பரமேஸ்வரி, ராஜசேகரம் (கனடா), அருளானந்தையா, சாள்சினி, காலஞ்சென்ற நவரெட்ணம், திருமதி பார்பறம்மா, மரியதாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.11.2012) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி,
ஊர்காவற்றுறை.

தகவல்: கி.லீனஸ்
(கணவர்)

# கோப்பாய் தரவை கழிவுகளுக்கு தீ வைப்பு

கோப்பாய் தரவைப் பகுதியில் கொட்டப்படும் கழிவுப்பொருள்கள் மற்றும் குப்பைகள் என்பன உடனடியாக தீயிட்டு எரிக்கப்பட்டு வருகின்றன என்று வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மழை காரணமாக இந்தப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளைத் தீயிட்டு எரிக்கும் நடவடிக்கைகள் சில நாள்களாகப் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது வலி. கிழக்குப் பிரதேசத்தில் அகற்றப்படும் கழிவுகள் மற்றும் குப்பைகள் என்பன தரவைப் பகுதியில் கொட்டப்படுகின்றன.

பொதுமக்களும் தமது சுற்றாடல்களில் இருந்து அகற்றும் கழிவுப் பொருள்களை இங்கேயே கொட்டவேண்டும். இதனை மீறிக் கழிவுப்பொருள்களைக் கொட்டுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் சபையின் கழிவகற்றும் வாகனங்கள் சுழற்சி முறையில் பிரதேசத்தில் தேங்கி கிடக்கும் கழிவுப்பொருள்களை அகற்றி வருகின்றன- என்றார். (த-17)

## மரண அறிவித்தல்

### திருமதி சுலோசனா கயிலைநாதன்



சிவன்கோயிலடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோசனா கயிலைநாதன் நேற்று (08.11.2012) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கயிலைநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், மனோன்மணி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்), பாலகிருஷ்ணன், சந்திரகலா, புவனேந்தரன் (கைதடி ஆயுள்வேத வைத்திய சாலை), வனித்தா, விஜித்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் அன்னக்கச்சி, சண்முகநாதன் காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
பொ.கயிலைநாதன்
(கணவர்)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை காமாட்சியம்மா



பெரியார் பகுதி அல்வாய் கிழக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரப்பிள்ளை காமாட்சியம்மா நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப் பிள்ளையின் அன்பு மனைவியும், தணிகாசலம், தவராணி, தவராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகபூரணத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார்பகுதி,
அல்வாய்கிழக்கு.

தகவல்:
சிவானந்தம் (ராசு)
மருமகன்.

## யாழில் சர்வதேச உளநல தின நிகழ்வுகள்

சர்வதேச உளநல தின நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுகவாழ்வு நிலைய இணைப்பாளர் திருமதி.வன்சலின் கில்பேட் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பி.சிவநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள உளநலப் பணியில் ஈடுபடும் ஆறு அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் மகிழ்ச்சிக்கும், மலர்ச்சிக்குமான சாதகமான உளவியல் என்னும் பொருளில் [illegible] காட்சிப்படுத்தலை [illegible] அத்துடன் விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (16-86)

## மரண அறிவித்தல்

### சுப்பையா ஜீவரட்ணம்



இருபாலையைப் பிறப்பிடமாகவும், ஊரெழுவை வசிப்பிடமாகவும் தற்போது கல்கிசையில் வசித்தவருமான சுப்பையா ஜீவரட்ணம் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (10.11.2012) சனிக்கிழமை 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(25178)(9.14)

7/2 cl/1, மெனோரிகா
பிளேஸ், கல்கிசை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டமட்ட உதைபந்தாட்டங்கள்

# நல்லூரில் இரு பிரிவுகளிலும் சம்பியன் கொக்குவில் இந்து


கொக்குவில் இந்துக் கல்லூரி 16 வயதுப் பிரிவு


கொக்குவில் இந்துக் கல்லூரி 14 வயதுப் பிரிவு

யாழ்ப்பாணம்,நவ.9

நல்லூர் கல்விக் கோட்ட மட்ட பாடசாலைக்கு இடையிலான 14 வயதுப் பரிவு, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றியீட்டி சம்பியனானது.

இந்த இறுதியாட்டங்கள் நேற்று வியாழக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி நல்லூர் கோட்ட மட்ட சம்பியனானது.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அணி மோதவிருந்தது. இதில் கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியால அணி போட்டியிலிருந்து விலகிக்கொண்டமையால் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இந்தப் போட்டியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டநிறைவில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணியை 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி நல்லூர் கோட்ட மட்ட சம்பியனானது கொக்குவில் இந்துக் கல்லூரி.

இதேபிரிவில் நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் அபாரமாக விளையாடிய கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய அணி பலமிக்க அணியான யாழ்.இந்துக் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

(ங-23-86)

## ஏழாலை ஸ்ரீ முருகனுக்கு உடுவிலில் இரு பிரிவுகளிலும் வெற்றி வாகை

யாழ்ப்பாணம்,நவ.9

உடுவில் கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி வெற்றியீட்டி உடுவில் கல்விக் கோட்ட மட்ட சம்பியனானது.

இந்த இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுகிடையிலான இறுதியாட்டத்தில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தாவை வெற்றிகொண்டு உடுவில் கல்விக் கோட்ட மட்ட சம்பியானது

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மயிலணி சைவ மகா வித்தியாலய அணியை எதிர்த்து புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதன்போது மயிலணி சைவ மகா வித்தியாலய அணி 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி உடுவில் கல்விக் கோட்ட சம்பியனானது.

இதே வயதுப் பிரிவில் நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய அணியை எதிர்த்து தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி இந்துக் தமிழ் கலவன் பாடசாலை அணி 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கியது.(ங-23)

## ஹோம்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டம் இறுதிக்கட்டத்தில்



யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தும் டபிள்யூ டி.ஹோம்ஸ் ஞாபகர்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான பாடசாலை அணிகளுக்கு ஆண் பெண் இடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தத் தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணியும், இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

பெண்களுக்கான மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

இதேவேளை அன்றைய தினம் ஆண்களுக்கான போட்டியில் அரை இறுதியாட்டங்களும், இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி களமாடவுள்ளது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த அரையிறுதியாட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் பின்னர் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

(ங-23)

## உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உயரதிகாரிகள் குழு யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,நவ.9

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் நான்குபேர் அடங்கிய குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் இந்தக் குழுவினர் ஜேர்மன் அரசு மற்றும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்பவற்றின் நிதிப்பங்களிப்புடன் அரியாலைப் பகுதியில் யாழ்.உதைபந்தாட்ட லீக்குக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் கட்டடப் பணிகளை பார்வையிடவுள்ளனர் என்று யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ங-23)

## இளவாலை யங்ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.9

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுள்ளது.


[illegible] மைக்கல் விளையாட்டுக் கழக அணிக்கும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்

**இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.**



ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், நவ.9

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு

**பி.ப. 3 மணிக்கு**

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் (ங-23)

## தேசியமட்ட மரதன் வேகநடைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.9

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தினால் இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆண், பெண் இருபாலருக்குமான தேசிய மட்ட மரதன், வேக நடைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை மாத்தறை மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மரதன் போட்டியில் பங்குபற்ற யாழ் மாவட்டத்திலிருந்து 12 வீரர்களும், 4 வீராங்கனைகளும், வேக நடை போட்டியில் பங்குபற்ற வீரர் ஒருவரும் நேற்று வியாழக் கிழமை மாத்தறைக்குப் புறப் பட்டனர். (ங-23)

## சிநேகபூர்வ உதைபந்து இன்று

யாழ்ப்பாணம்,நவ.9

கம்பர்மலை வித்தியாலயத்துக்கும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கம்பர்மலை வித்தியாலய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-253-23)

## மின்னல் வேகக் கூடைப்பந்து

யாழ்ப்பாணம், நவ.9

யூனியன் அஷ்ரன்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மின்னல் வேக ஒருநாள் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் காலை தொடக்கம் மாலை வரை இடம்பெறவுள்ளன.

மாலை 6.30 மணிக்கு மூன்றாமிடத்துக்கான ஆட்டமும் அதனைத் தொடர்ந்து 7.30 மணிக்கு இறுதியாட்டமும் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாருதீன் மீதான தடை சட்டவிரோதம்



இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் மீதான ஆயுட்கால தடை சட்ட விரோதம் என்று ஆந்திர உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

'மட்ச் பிக்சிங்' என்னும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீனுக்கு ஆயுட்கால தடை விதித்து, இந்திய கிரிக்கெட் சபை கடந்த 2000 ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து ஹைதராபாத்தில் உள்ள சிவில் நீதிமன்றத்தில் அசாருதீன் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த கீழ் நீதிமன்றம், தடையை உறுதி செய்து உத்தரவிட்டது. இந்த நிலையில், ஆந்திர உயர் நீதிமன்றத்தில் அசாருதீன் மேல்முறையீடு செய்தார்.

இவ்வழக்கு விசாரணையின் போது, உரிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியக் கிரிக்கெட் சபை அசாருதீனுக்கு தண்டனை வழங்கிவிட்டதாக வாதிட்டனர்.

இந்த நிலையில், இவ்வழக்கில் தீர்ப்பளித்த ஆந்திர உயர்நீதிமன்றம், அசாருதீன் மீதான ஆயுட்கால தடை சட்டவிரோதம் என்று கூறியுள்ளது. இது அசாருதீனுக்கு மிகப்பெரிய நிம்மதியை கொடுத்துள்ளது.

49 வயதான அசாருதீன், காங்கிரஸ் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு தற்போது மொராதாபாத் எம்.பியாக உள்ளார்.

மிகச்சிறந்த அணித்தலைவராக வலம் வந்த அசாருதீன், இதுவரை 99 டெஸ்ட் போட்டியில் விளையாடி 6215 ஓட்டங்களும், 334 ஒருநாள் போட்டியில் விளையாடி 9378 ஓட்டங்களும் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பறிகொடுத்ததை மீளக் கைப்பற்றுவோம்



கடந்தாண்டு இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இழந்த டெஸ்ட் முதலிடத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார். முதலிடத்தைக் கைப்பற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

முதலிடத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டம் எப்போதும் காணப்படுவதாகத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, எந்த வகையிலான போட்டியில் பங்குபற்றினாலும், அந்தப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே இலக்காகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், முதலிடத்தைப் பெற்றுக்கொள்வது மெதுவான ஒரு தொடர்ச்சி எனவும் தெரிவித்தார்.

இந்திய அணி தனது முதலிடத்தை இழந்தது இங்கிலாந்து அணிக்கெதிராகவே அடுத்த தொடரில் பங்குபற்றவுள்ள நிலையில் அது குறித்துக் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, இங்கிலாந்திற்கெதிரான தொடர் சுவாரசியமானதாக அமையும் எனத் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணி சிறந்த அணி எனத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, ஆனால் தங்கள் அணியின் பலங்களையும், பலவீனங்களையும் ஆராய்ந்து அதனடிப்படையில் போட்டியில் பங்குபற்ற வேண்டும் எனத் தெரிவித்ததோடு, தொடர்ச்சியாக முன்னேறிக்கொண்டு இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான தொடருக்கு முன்னர் இந்திய அணி மும்பையில் ஒரு கிரிக்கெட் முகாமொன்றில் பங்குபற்ற தெரிவித்த அவர், அங்கு சில பயிற்சிப் போட்டியிலும் பங்குபெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# இங்கிலாந்தைப் பழிவாங்க வேண்டும்



இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய கிரிக்கெட் அணியில் அதிரடி வீரர் யுவராஜ் சிங் நீண்ட இடைவெளிக்குப் பின்பு சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்திடம் கடந்த ஆண்டு 0-4 என்ற கணக்கில் படுதோல்வியடைந்து வெளியேறியது. எனவே இந்தியாவில் நடைபெறும் இந்தப் போட்டியில் இம்முறை வெற்றி பெற வேண்டும் என்று இந்திய வீரர்கள் ஆர்வமுடன் உள்ளனர்.

இந்த நிலையில், இங்கிலாந்து அணியை பழி தீர்க்கும் நேரம் என்று இந்திய அணியின் அதிரடி வீரர் யுவராஜ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், கடந்த வருடம் இந்திய அணிக்கு நெருக்கடியான காலமாகும். அந்த வலியை இம்முறை நாங்கள் இங்கிலாந்து அணிக்கு திருப்பி கொடுப்போம். உறுதியாக இது எங்களுக்கு பழிவாங்கும் தொடர் தான்.

இந்திய அணியில் தரமான வீரர்கள் பலர் உள்ளனர். எனவே இது கண்டிப்பாக நல்ல தொடராக அமையும் என்றார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடும் அளவிற்கு எனது உடல்நிலை தற்போது நல்ல நிலையில் உள்ளது. மூன்று நாள் நடைபெற உள்ள பயிற்சி ஆட்டத்தில் கலந்து கொள்ள உள்ளேன்.

என்னால் இனிமேலும் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவதற்காக காத்திருக்க முடியாது என்றும் டெஸ்ட் தொடரில் விளையாட ஆர்வமுடன் உள்ளேன் எனவும் கூறியுள்ளார். .(5)

# இந்தியா– பாகிஸ்தான் ஆட்டம் எதிர்பார்ப்பு மிகுந்தது



இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்காக எதிர்பார்ப்புடன் காணப்படுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், உலகில் தோன்றிய மிகச்சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவராகக் கருதப்படுபவருமான இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் மாத இறுதியில் இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி ஜனவரி மாதத் தொடக்கம் வரை 2 'ரி-20' சர்வதேசப் போட்டியிலும், 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளது.

அரசியல் ரீதியாக மாறான கருத்துக்களைக் கொண்டுள்ள இரு நாடுகளுக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்த உதவும் எனத் தெரிவித்த அவர், எனினும் அரசியல்வாதிகளின் பிழையான கருத்துக்கள் உறவுகளை மோசமாக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளின் அரசியல்வாதிகள், அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் ஓரளவு நேர்முகத் தன்மையுடன் காணப்படும் போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுக்கான சிமெந்து போல் கிரிக்கெட் செயற்பட முடியும் எனவும், கிரிக்கெட் இரு நாடுகளையும் இணைப்பதற்கு உதவும் எனவும் அவர் தெரிவித்தார்.

தன்னுடைய காலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான அமைதி நிலவிய காலத்திலும், இரு நாடுகளுக்குமிடையிலான போர் இடம்பெற்றுவந்த காலத்திலும் தான் கிரிக்கெட் போட்டியிலும் பங்குபற்றியதை அவர் நினைவுபடுத்தினார்.

கிரிக்கெட் போட்டியை ஆரோக்கியமான போட்டியெனத் தெரிவித்த அவர், கிரிக்கெட் போட்டி இரு நாடுகளுக்குமிடையிலான மக்களை இணைக்கக்கூடியது எனவும், அதன் காரணமாக கிரிக்கெட் போட்டிக்காகக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111


# தட்டிப்பறிப்போம் முதலிடத்தை

தென்னாபிரிக்க அணியின் முதலிடத்தைத் தட்டிப் பறிப்போம் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்கா தற்போது முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியாவுக்கெதிரான இந்தத் தொடரில் தென்னாபிரிக்காவே பலமான அணி அதனால் அந்த அணி வெற்றி பெறும் என்று கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ரிக்கி பொண்டிங் கூறுகையில், இந்தத் தொடரில் நாங்கள் குறைவாக மதிப்பிடுவது பற்றி எதிர்மறையாக சிந்திக்கவேண்டியதில்லை. தென்னாபிரிக்க அணி முதலிடத்தில் இருப்பதற்கு தகுதி பெற்ற அணியே.

ஆனால் அந்த அணிக்கும் எங்கள் அணிக்கும் இடைவெளி பெரிதாக இல்லை. நாங்கள் சிறப்பாக விளையாடி மீண்டும் முதலிடத்தை பிடிப்போம்- என்றார். (5)


**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் (அரச உத்தியோகத்தர்கள்) ஒன்று வசிப்பதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறிய வீடு வாடகைக்குத் தேவை

தொடர்பு: 0774752044

(சி/4722)(3.14)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பிள்ஸ் இன் [PEOPLE INN]

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

(20772) (15-14)

**கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சைக் கருத்தரங்கு**

சனி (10/11), ஞாயிறு (11/11) 12.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

யாழ். ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கி அருகில்)

(சி/4717)(3.14)

**கணக்கீடு**

A/L 2013

கம்பனி பிரசுரமுடிவுக் கணக்கு ஆரம்பம்

பிரிவு- I நாளை 10.30am

பிரிவு - II ஞாயிறு 4.30pm

S.தவா

(25184)(3.6)

யூனிவேர்சல்

கந்தர்மடம்

**CLTP Unitல் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

PHP/ MySql/ HTML/ JavaScript

Web Designing

ADBMS

கற்கைநெறி முடிவில் சுயமாக மென்பொருள் (Software) வடிவமைப்பதற்கான உத்தரவாதம்

Expedite English Courses (No age limit)

204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

G.C.E (O/L) - 2012 December

64 - இரண்டாம் மொழி சிங்களம்

விசேட துரித மீட்டல் கருத்தரங்கு

2000 - 2011 வரையிலான

கடந்த கால வினாத்தாள்களும் விடைகளும்

விசேட பாடக்குறிப்பு கையேடுகள் - 40

முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்

மொத்தம் 40 மணித்தியலங்கள் விரிவுரை நிகழ்த்தப்படும்.

ஆசிரியர்: A.K.Moorthy

பிரிவு - I 2012.11.10 சனி, ஞாயிறு பி.ப 2.00 - 4.00

பிரிவு -II 2012.11.13 செவ், புதன், வியாழன் பி.ப 4.00 - 5.00

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(சி/4724)(3.14)

**போட்டிப்பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன**

தொகுப்பு:

த.தவசேகர்

- கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 300/=
- கிராம சேவகர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் 300/=
- கிராம சேவகர் மொழித்திறன் கட்டுரைகள் 250/=
- பல்கலைக்கழக விசேட கற்கை தெரிவு பொது உளச்சார்பு விலை 250/=
- பொது உளச்சார்பு பொது அறிவுவழிகாட்டி விலை 400/=

பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

(சி/4716)(3.6)


## மரண அறிவித்தல்

### பரமநாதன் சோதிப்பிள்ளை

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை பரமநாதன் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதனின் அன்பு மனைவியும், நடராசா, சிவராசா, கமலராணி, வசந்தராணி (குடும்பநல உத்தியோகத்தர், மந்துவில்), பராசக்தி (பெண் பரிசேதகர் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயும், சாந்தினி, பார்வதி, சிவஞானமூர்த்தி, ரதிமோகன் (தபால் ஊழியர் கொடிகாமம்), நவரத்தினராசா ஆகியோரின் மாமியும், சுகர்ணா, நிரான்ராஜ், அமல்ராஜ், நிமல்ராஜ், ரஜீப், ரயுதா, ரகீன், அனுராஜ், கௌதமன், கேதுசன், மாதினி, கீர்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று வேம்பிராய் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு வைரவர்கோயிலடி, சாவகச்சேரி. (சி/4731)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 05 ★ 03 ★ 1932



மறைவு 24 ★ 10 ★ 2008

மீசாலை

### அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

B.A, Dip. in Edu.,M.A

(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

திதி: அபரபக்க ஏகாதசி (09.11.2012)

ஆண்டுகள் நான்காகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எம்மையென்றும் வழிப்படுத்தும்
நாள்கள் நடந்தபடி கடந்துமிங்கு - உம் நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

"சிவகிரி"
மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்
72/27, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(25109)(3.6)

## மரண அறிவித்தல்

### தெய்வேந்திரம் பொன்னம்மா (பாக்கியம்)



தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் பொன்னம்மா நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி விசுவலிங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், கனகசபாபதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற விசாலாட்சி மற்றும் நாகம்மா, செல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசிலாதேவி திருச்செல்வம் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) பஞ்சாட்சரம் (SIO International Colombo 11) அன்புத் தாயும், திருச்செல்வம் (லங்கா சிமெந்து லிமிட்டட்) அனோமா ஆகியோரின் அன்பு மாமியும், காயத்திரி, கிருபாகரன் (லண்டன்), திவ்யா (இலங்கை வங்கி, மானிப்பாய்), உவினி, உமாப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானைவீதி,
தாவடி தெற்கு, கொக்குவில் (25177)(3.14)

தகவல்: ஐ. திருச்செல்வம்.




**புத்தகம் இணையத்தளம், தமிழ் மென்பொருள்**

**- அறிமுக விழா -**



இடம் : நாவலர் மண்டபம் - யாழ்ப்பாணம்
காலம் : 10 கார்த்திகை 2012 சனிக்கிழமை
நேரம் : மாலை 3.30 (10/11/2012)

ஈழத் தமிழர்களின் சர்வதேச புத்தகக் கடை!




வெளியிடப்படும் மென்பொருள்கள் மென்தமிழ், பொன்மொழி, பொன்பேனா

**மென்தமிழ்**
தமிழ்ச் சொல்லாளர் - சொற்பிழை திருத்தி, சந்திப்பிழை திருத்தி, தமிழ் எழுத்துரு மற்றும் குறிமாற்றி, எண் - எழுத்து மாற்றி, பலவகை அகராதிகள்

**பொன்மொழி**
தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருள்.

**பொன்பேனா**
உங்களது கையெழுத்தினை உடனடியாக தமிழில் தட்டச்சு செய்துதரும் மென்பொருள்.

தொடர்புகளுக்கு : 078 284 5010 - அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் -


## மரண அறிவித்தல்

### கந்தையா தவராசா



வேலணையைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராசா நேற்று (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம் - பராசக்தி தம்பதியரின் மருமகனும், கௌரி தேவியின் கணவரும், கௌசல்யா (தாதிய உத்தியோகத்தர், கிளிநொச்சி), ராகவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், விஸ்வகர்மா Pvt Ltd), பாமினி (வேம்படி மகளிர் கல்லூரி), இலக்கியா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரசன்னாவின் (சுகாதர திணைக்களம், கிளிநொச்சி) மாமனும், பாலசுப்பிரமணியம், தங்கராணி, வன்னியசிங்கம், பாலச்சந்திரன், அன்னலட்சுமி, சுந்தரலிங்கம், ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (25176)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.